

# டாக்டர் அம்பேத்கர்
## வாழ்வும் தொண்டும்

எஸ். பெருமாள், எம்.ஏ.எம்.,பில்.

# டாக்டர் அம்பேத்கர் வாழ்வும் தொண்டும்

*பேராசிரியர்* எஸ். பெருமாள், *எம்.ஏ., எம்.பில்.*

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**

184, பிராட்வே - சென்னை - 600108

# நூலைப் பற்றிய விவரங்கள்


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | — | டாக்டர் அம்பேத்கர் வாழ்வும் தொண்டும் |
| ஆசிரியர் | — | பேரா. **எஸ். பெருமாள்,** எம்.ஏ. எம்.பில். |
| பதிப்பு | — | முதற் பதிப்பு, 1986 |
| உரிமை | — | **முல்லை நிலையம்** |
| தாள் | — | வெள்ளைத்தாள் 11-6 கி.கி. |
| நூலின் அளவு | — | 18.5 செ.மீ. × 12.5 செ.மீ. |
| பக்கங்கள் | — | XII + 116 = 128 |
| வெளியிடுவோர் | — | **முல்லை நிலையம்** 43, புதுத்தெரு, சென்னை-1 |
| விற்பனை உரிமை | — | **பாரி நிலையம்** 184, பிராட்வே, சென்னை-108 |
| பொருள் | — | வாழ்க்கை வரலாறு |
| அச்சிட்டோர் | — | **சாலை அச்சகம்** 11, திருவீதியான் தெரு கோபாலபுரம் சென்னை-86 [55] |
| விலை | — | **ரூ. 10-00** |


**டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்**, M.A., ph.D., D.Sc. (Lond.) LL.D., (Columbia), D.Litt.(osm)., Bar-at-Law.

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தன்னலமற்ற தொண்டினால் வரலாற்றிலும் மக்கள் உள்ளத்திலும் நீங்கா இடம்பெற்ற நம் நாட்டுப் பெருந்தலைவர்களுள் தனிச் சிறப்பு உடையவர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அவர்கள் ஆவார். இந்திய மக்களுக்கு அரசியல் விடுதலையோடு, சமூக விடுதலையும் கிடைக்கும்போதுதான் இந்திய நாடு முழுமையான விடுதலையுற்ற நாடாக இருக்க முடியும் எனக் கருதி உழைத்தவர்களுள் அவர் முதன்மையானவர். அவர், தமது இலட்சிய வேட்கை, அயரா உழைப்பு ஆகியவற்றினால் பெற்ற பேரறிவு ஒன்றினையே ஆயுதமாகக்கொண்டு நமது நாட்டிற்குக் களங்கமாக இருந்த சமூகக் கொடுமைகளை எதிர்த்து நின்று வெற்றி கண்டவர்.

அண்ணல் என்றும் அறிவின் சிகரம் என்றும் கோடிக் கணக்கான உள்ளங்கள் கூறி மகிழ வந்தவர் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர்; அவர் இந்திய நாட்டில் இந்த நூற்றாண்டில் அறிவால், அப்பழுக்கு இல்லாத பொதுத் தொண்டினால், நீண்ட நெடுங்காலத்தை முன் உணர்ந்து கணித்திடும் ஆற்றலால், ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய் ஆக்கப்பட்டுக் கிடந்தவர்க்கு விடுதலை

வாங்கித் தந்த உழைப்பினால், தமக்கென்று அமைத்துக் கொண்ட இலட்சிய வேட்கையால் வானளாவ உயர்ந்து நின்ற மாமனிதர்.

சாதிப்பிரிவுகளும் தீண்டாமையும் இந்திய மக்களின் ஒற்றுமைக்குத் தடையாகவும் இந்து மதத்திற்குக் களங்க மாகவும் வேரூன்றி வளர்ந்திருந்த நாளில், தமது அறி வாற்றலின் வலிமையால் அதனை வீழ்த்த வந்தவர்; இந்திய நாட்டில் ஒடுக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் கிடந்த மக்களின் உரிமைக்குரலாக விளங்கியவர். ஆத்திரப் படவும் ஆவேசப்படவும் காரணங்கள் ஆயிரம் இருந்த போதும், இறுதிவரை அறவழியிலும் அகிம்சை முறை யிலும் நம்பிக்கையோடு போராடியவர் அவர்.

டாக்டர் அம்பேத்கர் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்து மக்களுக்காகவே உழைத்தவர் என்று கருதுவது அறியாமையாம். அவர் இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் உழைத்த தேசியத் தலைவர். தமக்கும் தம்மை ஒத்தவர்க்கும் கொடுமைகள் பல இழைத்து, உயர் வதற்குத் தடையாக இருந்த இந்து மதத்தைச் சீர்திருத்தி, அதனை இந்த நூற்றாண்டிற்குத் தகுதியுடையதாக ஆக்கப் பாடுபட்டவர். இந்து மதத்திற்குப் புதிய மதிப் பையும் மரியாதையையும் ஏற்படுத்தவல்ல சட்டங்கள் உருவாக்கியளித்தவர். இவற்றால் இந்திய நாட்டுப் பெண் களுக்குச் சமஉரிமை, சொத்தில் பங்கு, விவாகரத்து உரிமை ஆகியவை கிடைத்தன. இருதார மணவழக்கம் ஒழிந்தது. இந்த நாட்டுப் பெண்கள் பிறரோடு சரிநிகர் சமானமாகத் தலைநிமிர முடிந்தது.

டாக்டர் அம்பேத்கர் தொழிலாளர் தோழனாக விளங்கியவர். அவர் இயற்றிய தொழிலாளர் நலச் சட்டங் களின் விளைவாக எட்டு மணி நேர வேலையும் வேலைப் பாதுகாப்பும் கிடைத்தன. இன்று தொழிலாளர்கள் அனுபவிக்கும் பல உரிமைகளைப் பெறுவதற்கும், சட்டங்

கள் பிறப்பதற்கும் காரணமானவர். இதனால் என்றும் இந்த நாட்டுத் தொழிலாளர்களின் நன்றிக்கு உரியவர்.

இவை அனைத்திற்கும் மேலாக இந்திய நாட்டு அரசியல் சட்டத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர் டாக்டர் அம்பேத்கர். ஒரு குலத்திற்கு ஒரு நீதி என்றிருந்த நிலை மாறி, இந்திய நாட்டு மக்கள் எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் இந்நாட்டு மன்னர் எனப் புதியதொரு சமத்துவச் சமுதாயம் மலர அதன் வாயிலாக வழிவகுத்தவர்.

அரசியல் மேதையாய், பொருளாதார அறிஞராய், சமூகச் சமத்துவம் உருவாவதற்கு உழைத்த மாபெரும் தலைவர்களின் வரிசையில் முன்னணியில் நிற்கும் பெருமைக்குரியவராய் விளங்கிய டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை அனைவரும் படித்துப் பின்பற்று தற்கு உரியது. மனிதரின் மாண்புகளை உயர்த்தவும், மக்களிடையே சமத்துவத்தை உருவாக்கவும் பாடுபடு வோர்க்கு அவரது வாழ்வும் உரைகளும் சிறந்த வழி காட்டிகளாகப் பயன்படவல்லன.

தன்னல மறுப்பு, கடின உழைப்பு, துயரங்களும், துன்பங்களும், அவமதிப்புகளும் ஆயிரம் வந்துற்ற போதும் அவற்றால் தளராத மன உறுதி, அறிவின் ஆற்றல் ஆகியவற்றின் மூலம் மனிதன் எந்த அளவுக்கு உயர முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு அவரது வாழ்க்கை வரலாறு.

தாம் உயர்ந்ததோடு, தம்மைப்போல இந்த நாட்டில் நெஞ்சம் பதைக்கும் கொடுமைகளுக்கு ஆளாகிக் கிடந்த மக்களின் உரிமைகளுக்காக, மரியாதைக்காக அவர் தம் வாழ்நாள் முழுவதும் நடத்திய தீரமிக்க போராட்டம், இந்த நாட்டின் வரலாற்றிலும், மனிதர் விடுதலை

வரலாற்றிலும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கவை.

அவரது வாழ்க்கை வரலாறு, நாளும் நிகழ்ச்சிகளும் மட்டும் நிரம்பியது அன்று; மனித உணர்வுகளுக்குச் சோதனைகளும், அவமதிப்புகளும் வந்துற்றபோது அவற்றை எதிர்த்துப் போராடியதன் வாயிலாக, அனைவருக்கும் தன்மான உணர்வையும் தொண்டு மனத்தையும் உருவாக்கும் ஓர் இலட்சிய வீரனை நம்முன் கொண்டு வந்து நிறுத்தும் காலக் கண்ணாடி.

எனவே அவரது வாழ்க்கை வரலாறு அறிவின் துணை கொண்டு மட்டுமல்லாமல், அகன்ற இதயத்தோடும் படிக்க வேண்டியது ஆகும்.

இந்தப் பின்னணிகளையும் தேவைகளையும் மனதில் கொண்டு டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் எளிமையும் தெளிவும் உள்ள நடையில் தமிழ் மக்களுக்கு அளிக்கப்படுகின்றது. அனைவரும் பெற்றுப் படிக்க வேண்டும் என்னும் நோக்கில் சுருக்கமாக அமைந்துள்ள இந்த நூல், டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கையை முழுமையாகக் காட்டும் நிறைவான முதல் நூல் ஆகும்.

இந்நூலினை அழகுற அச்சிட்டு வெளியிட முன்வந்த சென்னை, முல்லை நிலையத்தாருக்கு நன்றியுடையேன்.

21, டாக்டர் ஐடா ஸ்கடர் சாலை
வேலூர் - 632 012

**சா. பெருமாள்**



தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகப் பாடுபட்டவரும், தமிழ் பதிப்புலக முன்னோடி திரு. வை. கோவிந்தன் அவர்களின் சகோதரரும் சிறந்த சிவநேச செல்வருமான திரு. இராம. சீனிவாசன் அவர்களுக்கு இந்நூல் காணிக்கை.

# பொருளடக்கம்

பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | அம்பேத்கர் பிறந்தார் | 1 |
| 2. | கல்லூரிப் படிப்பு | 17 |
| 3. | அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில்... | 20 |
| 4. | மீண்டும் இந்தியாவில்... | 23 |
| 5. | பாரிஸ்டர் அம்பேத்கர் | 29 |
| 6. | பொது வாழ்வில் ஈடுபாடு | 32 |
| 7. | போராட்டக் களத்தில்... | 38 |
| 8. | கோயில் நுழைவுப் போராட்டம்... | 43 |
| 9. | வட்டமேசை மாநாடுகளில்... | 49 |
| 10. | பூனா ஒப்பந்தம் | 57 |
| 11. | புதிய திக்கு நோக்கி... | 66 |
| 12. | புதிய கட்சி | 82 |
| 13. | தொழிலாளர்களின் தோழன் | 86 |
| 14. | பொன்னான வாய்ப்பு | 93 |
| 15. | விடுதலையுற்ற இந்தியாவில்... | 102 |
| 16. | முதலும் முடிவும் | 111 |

## டாக்டர் அம்பேத்கர் அவர்கள் வாழ்வில் முக்கிய நிகழ்ச்சிகள்

*1891* ஏப்ரல் 14 அம்பேத்கர் பிறந்தார்.
தந்தை : ராம்ஜி மாலோஜி சாங்க்பால்
தாய் : பீமாபாய்

*1905* 14ஆவது வயதில் திருமணம் நிகழ்ந்தது.
மணமகள் : ராமாபாய்

*1908* மெட்ரிக்குலேசன் படித்து முடித்தார்.

*1912* பம்பாய், எல்பின்ஸ்டன் கல்லூரியில் படித்துப் பட்டதாரியானார்.

*1915* 'இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றிய புத்தகத்தை எழுதினார்.

*1919* அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. (பொருளாதாரம்) பட்டம் பெற்றார்.
அதே ஆண்டில் 'டாக்டர்' (Ph.D.) பட்டமும் பெற்றார்.

இங்கிலாந்து நாட்டில் இலண்டன் பொருளாதார, அரசியல் பள்ளியில் சேர்ந்தார்.

*1918—20* இந்தியாவுக்கு வந்தார். பம்பாய் சைடன்ஹாம் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

*1919* சௌத்பரோ தூதுக் குழுவிடம் இந்திய நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் உரிமைகள் வேண்டும் என்று கோரிக்கை அளித்தார்.

1920 'மூக்நாயக்' (ஊமைகளின் தலைவன்) பத்திரிகை துவக்கம்

1921 இங்கிலாந்தில் எம்.எஸ்ஸி பட்டம் பெற்றார்.

1923 டி.எஸ்ஸி பட்டம் பெற்றார்; பாரிஸ்டரானார்; 'ரூபாயின் சிக்கல்' புத்தகம் எழுதினார்.

1924 பம்பாய் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞரானார்; அவரது அரசியல், சமூக, கல்விப் பணிகள் தொடங்கின.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை (பகிஷ்கரித் ஹிதகர்ணி சபா) என்னும் சங்கத்தைத் தோற்றுவித்தார்.

1925 தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காகப் பம்பாய்
—30 மாநிலத்தில் நான்கு விடுதிகளை உருவாக்கினார்.

1926

—34 பம்பாய் மாநிலச் சட்டப் பேரவையின் நியமன உறுப்பினரானார்.

1927 பகிஸ்கரித் பாரத் (ஒதுக்கப்பட்ட பாரதம்)— மாதம் இருமுறை இதழ் துவக்கம். சமத்துவ சமுதாயத்தை அமைக்கும் கொள்கையைப் பரப்ப 'சமாஜ் சமாத சங்கம்' அமைத்தார்.

மகாத் நகர சவுதார் குளத்தில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் எடுக்கும் உரிமையைப் போராடிப் பெற்றார்.

1928 அரசினர் சட்டக் கல்லூரியின் பேராசிரியராகவும், பின்பு முதல்வராகவும் நியமனம்.

1930 'ஜனதா'—வார ஏடு வெளியிட்டார்.
நாசிக் கோயில் நுழைவு சத்தியாக்கிரகப்போர்.

1930
—33 இலண்டன் வட்டமேசை மாநாட்டிற்கு உறுப்பினராக நியமனம்.

1931 வட்டமேசை மாநாட்டில், தனித்தொகுதிக் கோரிக்கையை வெளியிட்டார்; காந்தியடிகள் எதிர்ப்பு.

1931 தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதி கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1932 செப்டம்பர்—தனித் தொகுதியை எதிர்த்து காந்தியடிகள் உண்ணாவிரதம்—பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது.

1935 நாசிக் மாவட்டம் 'யேலா' என்னுமிடத்தில் நடந்த மாநாட்டில், தாழ்த்தப்பட்டோர் இந்து மதத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று அறிவித்தார்.

1936 'சுதந்திரத் தொழிலாளர் கட்சி'யை உருவாக்கினர்.

1942 அகில இந்தியத் தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன்-அரசியல் கட்சியாக அமைக்கப்பட்டது.

1942 வைசிராய் நிர்வாகக் குழுவின் உறுப்பினரானார்.

1942
—46 தாழ்த்தப்பட்டோரின் கல்விக்காக மத்திய அரசின் நிதி உதவியையும், மத்திய மாநில அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு முறையையும் பெற்று அளித்தார்.

1945 'மக்கள் கல்விக் கழகம்' உருவானது.
தாழ்த்தப்பட்ட மாணவர்க்கெனக் கல்லூரிகள் ஏற்பட்டன.

1946 'சூத்திரர்கள் யார்?' புத்தகம் வெளியிட்டார்.

1946 அரசியல் சட்ட வரைவுக்குழுவின் உறுப்பினரானார்.

1947 பின்பு பண்டித நேரு மந்திரி சபையில் சட்ட அமைச்சரானார். அரசியல் சட்ட வரைவுக்குழு வின் தலைவராக இருந்து உழைத்தார். 'இந்துச் சட்ட' மசோதாவை வரைந்தளித்தார்.

1951 மந்திரி சபையிலிருந்து விலகினார்.

1952 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி.
பம்பாய் சட்டப் பேரவை மூலம் ராஜ்ய சபை உறுப்பினரானார்.

1953 நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் தோல்வி.

1955 புத்தமதத்தைப் பரப்ப 'பாரதீய புத்த மகா சபை'யை ஏற்படுத்தினார்.

1956 அக்டோபர் 14, நாசிக் நகரில் நடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க விழாவில் இலட்சக்கணக்கானவர் களோடு புத்த மதத்தைத் தழுவினார்.

1956 டிசம்பர் 6, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் மறைவு.

1957 'புத்தரும் அவரது தம்மமும்' நூல் மறைவுக்குப்பின் வெளியானது.

★ ★ ★

## இந்நூல் எழுதப் பயன்பட்ட நூல்கள்


Keer, Dhananjay — Dr. AMBEDKAR — LIFE AND MISSION, Popular Prakashan, Bombay, 1971

Lokhande, G.S., BHIMRAO RAMJI AMBEDKAR— A STUDY IN SOCIAL DEMOCRACY, Sterling Publishers Private Ltd., New Delhi, 1977

Kuber, W.N., Dr. AMBEDKAR—A CRITICAL STUDY People's Publishing House, New Delhi, 1973

Kuber, W. N., B.R. AMBEDKAR— Builders of Modern India Series, Publications Division, Government of India, New Delhi, 1978

# அம்பேத்கர் பிறந்தார் 1

## நெஞ்சு பொறுக்குதிலையே !

பாரதநாடு பழம்பெரும் நாடு; இயற்கை வளங்களும் எண்ணற்ற பிற நலங்களும் நிறைந்த நாடு; ஆற்றல் மிக்க மறவர்களும், அறிவுசான்ற மேலோர்களும் வாழ்ந்த நாடு என்னும் சிறப்பு மிக்கது. எனினும் இந்த நாட்டின் வளங்களும் வாழ்க்கை வசதிகளும் அனைவருக்கும் கிடைத்து, மக்கள் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு இயலாத வகையில் சமூக அமைப்பு அமைந்திருந்தது. மக்கள் மதத்தால், மொழிகளால், சாதிப் பிரிவுகளால், கண்மூடிப் பழக்க வழக்கங்களால் பிரிந்து கிடந்தனர். இதனால் வெளி நாட்டுப் படையெடுப்பாளர்கள் இந்த நாட்டை எளிதாக வென்று அடிமைகொள்ள முடிந்தது. மேலும் இந்து மதத்தின் பெயரால் அமைந்த சாதி, வருணப் பிரிவுகள், மக்களின் அன்றாட வாழ்விலும் உணவு, உடை, கல்வி, பழக்கவழக்கம், வழிபாடு ஆகியவற்றிலும் கட்டுத்திட்டங்களைப் புகுத்தி இறுகிப் போய்விட்ட சமூக அமைப்பை உருவாக்கின.

கொடிய இந்தச் சாதி அமைப்புகளைவிட மிகக் கொடிய தீண்டாமை என்னும் வழக்கத்தை இந்து மதம் அனுமதித்தது மனிதனை மனிதன் தொடுவதையும், காண்பதையும், ஏன் - குரலோசையைக் கேட்பதையும் தீட்டு என்று கற்பித்துத், தீயினும் அஞ்சத்தக்க கொடுமைகள்

இந்தத் தீண்டாமை வழக்கத்தின் பெயரால் நடந்துள் ளன. நினைத்தாலே நெஞ்சம் பதைக்கும் இந்த வழக் கத்தின் தீமையைத் தீண்டாதவர்களாய்ப் பிறந்து அனுப வித்தவர்களே முழுதுமாக உணர முடியும்.

இந்திய நாட்டில் ஐந்தில் ஒரு பகுதி மக்கள் தீண்டாமை வழக்கத்தின் விளைவாக ஏழையராய், அறியாமையின் வடிவங்களாய், என்றும் தீராத நோயாளி களாய் மனிதரென்னும் வடிவில் விலங்குகளை விடக் கீழாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். சமூக வாழ்வில் ஒதுக்கப்பட்டு, பொருளாதார வாய்ப்புகள் பறிக்கப்பட்டு, அரசியலில் வெறும் கைதூக்கிகளாகக் கருதப்பட்டு, கல்வி, கலாசார வாய்ப்புகளில் அறவே புறக்கணிக்கப்பட்டு, தீண்டாதவர்களாகப் பிறந்து தீண்டாதவர்களாவே மடிந்து வந்தவர்களிடையே பிறந்தார் அம்பேத்கர்.

1950-இல் டாக்டர் அம்பேத்கர் வகுத்தளித்த இந்திய அரசியல் சட்டத்தின்படி தீண்டாமை வழக்கம் சட்டப் படி ஒழிக்கப்பட்டது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னே இந்திய நாட்டின் ஐந்தில் ஒரு பகுதி மக்கள் தீண்டத் தகாதவர், நெருங்கப்படாதவர்கள், கண்ணால் பார்க்கக் கூடாதவர்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தனர். அதாவது இந்திய மக்களில் ஒவ்வொரு ஐந்தாவது ஆணும் பெண்ணும் குழந்தையும் பல்வேறு இழிவான பெயர் களால் ஒதுக்கப்பட்டிருந்தனர்.

## அடிமை வாழ்வு

தீண்டப்படாதார், விரும்பிய உணவு வகைகளை உண்பதற்கும், விரும்பியவாறு ஆடை, அணிகளை அணி வதற்கும் குறிப்பிட்ட சில பிராணிகளை வளர்ப்பதற்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்தனர். ஆண்கள் இடையில் கோவணமும், தலையில் முண்டாசும் அணிந்து கையில் ஒரு தடியும் வைத்திருக்க வேண்டும். பெண்கள் ரவிக்கை போடாமல் சேலையை முழங்காலுக்குமேல் ஏற்றிக் கட்டி

யிருக்க வேண்டும். இதை மீறியவர்கள் தண்டனைக்கு உள்ளானார்கள். கிராமப் பொது இடங்களில் இவர்கள் தண்ணீர் எடுக்க முடியாது. ஆடுகளும் மாடுகளும் கலக்கிச் சென்ற குட்டைகளின் தண்ணீரையே இவர்கள் குடிக்க முடிந்தது. ஊருக்கு வெளியே தரையோடு தவழ்ந்து செல்லும் குடிசைகளில் நாய்களோடும், பன்றிகளோடும் குடியிருந்தனர். குளித்துச் சுத்தமான உடை உடுத்துவது தடுக்கப்பட்டிருந்தது. பிள்ளைகள் படிப்பதற்குத் தடையிருந்தது. வணங்கும் கடவுள்கள் சிறு தெய்வங்களாகவே இருந்தன. ஊருக்குப் பொதுவான கோயில்களில் சென்று வழிபட அனுமதி மறுக்கப்பட்டது.

ஊரில் செத்த மாடுகளை எடுத்துச் சென்று பங்கிட்டு உண்ணுதல், தோல் பதனிடுதல், கொத்தடிமைத் தொழில் புரிதல், விவசாயக் கூலிகளாக இருத்தல், ஊர்க் காவலர்களாக இருத்தல், மலம் எடுத்தல், தெருப் பெருக்குதல் ஆகியவை இவர்களுக்கு விதித்திருந்த தொழில்கள். அரசாங்கப் பணிகளும், நாகரிகமான தொழில்களும், வாணிபமும் இவர்கள் கனவிலும் கருத முடியாதவை. தீண்டாதோர் ஆண்களின் உயிரும் உழைப்பும், பெண்களின் கற்பும் குடும்ப வாழ்வும் மேல் சாதியாருக்கு மலிவுப் பொருள்களாகக் கருதப்பட்டன. தீண்டாதார், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எழுதவொண்ணாக் கொடுமைகளையும், துயரங்களையும் சுமந்துகொண்டு அறியாமையின் சின்னங்களாக, கருநிற உடலும் சுருங்கிய உள்ளமும் பெற்று மனிதர் என்னும் பெயர்கொண்டு உலவி வந்தனர்.

### வாழ்வளிக்க வந்தவர்கள்

தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்துக்கட்டக் காலந்தோறும் பலர் முயன்று வந்திருக்கிறார்கள். கௌதம புத்தர் (கி. மு. 500) இவர்களின் முன்னோடியாக விளங்கினார். அவரைப்போலவே, இந்தச் சமூக அநீதியை

ஒழித்து மனிதர் யாவரும் சமம் என வலியுறுத்துவதற்கு இந்து சமயப் பெரியோர்கள் பலர் முயன்றனர். வடக்கே இராமானந்தர், சைதன்யர், கபீர், ஏகநாதர் ஆகியோரும் தென்னாட்டில் இராமானுஜரும் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களின் பணிகள் சமயச் சீர்திருத்தங் களாகவே அமைந்தன.

இந்திய நாட்டிற்கு ஆங்கிலேயர் வந்து ஆட்சி யமைத்த பின்பே சாதி ஒழிப்பிலும் தீண்டாமை ஒழிப் பிலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியில் நடந்த கிறிஸ்தவ சமய மத மாற்றம் தீண்டா தாரிடையே புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. முயன்றால் தாங்களும் தீண்டாமையின் கொடுமையி லிருந்து விடுதலை பெறமுடியும் என்ற துணிவும் ஏற் பட்டது.

ஆங்கிலக் கல்வி இந்தியர்களின் கண்களைத் திறந்து வைத்தது. மேனாட்டில் வளர்ந்திருந்த சுதந்திரம், சமத் துவம், சகோதரத்துவம் பற்றிய கருத்துக்கள், இந்திய நாட்டு மக்களிடையே பரவியபோது, இந்திய நாட்டின் சாதிக் கொடுமையின் ஆழம் தெரிந்தது. மேனாட்டி லிருந்தும் உள்நாட்டிலிருந்தும் படையெடுத்து வந்தவர் கள் இந்த நாட்டு மக்களைச் சுலபமாக அடிமைகளாக்கி வெற்றி கொள்வதற்குச் சாதிகளால் மக்கள் பிளவுண்டு கிடந்ததே காரணம் என உணரமுடிந்தது. எனவே, பாரத நாட்டின் அரசியல் விடுதலைக்கு, சமுதாய ஒற்றுமையும் நல்லுறவும் அவசியம் எனக் கண்டுணர்ந்த விடுதலைப் போராட்டக் காலத் தலைவர்கள் பலர் சமத் துவத்தை வலியுறுத்திப் பேசத் தொடங்கினர்.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது, இந்நாட்டில் ஏற் பட்ட புதிய ஆட்சி முறையும், எல்லோருக்கும் சமநீதி என்று அமைந்த சட்டங்களும், பலவேறு அரசியல் சீர் திருத்தங்களால் கிடைத்த வாக்குரிமை வாய்ப்புகளும் மதத்தின் போர்வையில் அமைந்த சாதி அமைப்புகளைத்

தகர்க்கத் துவங்கின. மேனாட்டுக் கல்வியும், மேனாட்டுப் பயண அனுபவமும் பெற்ற பல சமூக சமயச் சீர்திருத்த வாதிகள் தொடங்கிய இயக்கங்கள் சாதி ஒழிப்பிற்காகப் பாடுபட்டன. இந்த வகையில் 19—ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் போன்ற சமூக-சமயச் சீர்திருத்தத்திற்காகப் பாடுபட்ட இயக் கங்கள் சாதிமுறையும், தீண்டாமையும் இந்து மதத் திற்குக் களங்கங்களாக இருப்பதை எடுத்துரைத்தன. இவற்றைப் போலவே மகாராஷ்டிர மாநிலத்தில் மகாத்மா ஜோதிபா பூலே என்பவர் சமூகச் சமத்துவத் திற்காக, 'சத்திய சோதக் சமாஜ்' (உண்மை நாடுவோர் சங்கம்) என்னும் இயக்கத்தை நடத்தி வந்தார். சாதிப் பிரிவுகளை எதிர்த்துப் பேசியதோடு மக்களிடையே தன்னம்பிக்கையையும், தன்மான உணர்வையும் ஜோதிபா பூலே வளர்த்தார்.

இரயில், பேருந்துப் போக்குவரத்து, பெரிய தொழிற் சாலைகளின் தோற்றம், நகரங்களில் மக்கள் பெருக்கம், சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றால் மக்கள் நெருங்கிப் பழகி வேற்றுமை உணர்வுகளை மறக்கத் தொடங்கினர்.

இவற்றின் பின்னணியில் இந்திய நாடெங்கும் தீண் டாமையை அழிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களின் துயரங் களைத் தீர்க்கவும் சமூகப் பெரியோர்கள் பல இயக்கங் களை நடத்த முன் வந்தனர். பத்திரிகைகளையும் புத்த கங்களையும் வெளியிட்டனர். 1906-ஆம் ஆண்டில் இந்த இயக்கங்களில் ஒன்றாக மகாராஷ்டிரத்தில் இந்தியத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மிஷன் சங்கம் தோன்றியது. நீதிபதி சந்திரவர்க்கர் அதன் தலைவராக விளங்கினார். அச்சங்கத்தினர் பல மாநாடுகளை நடத்தித் தாழ்த்தப் பட்டோருக்குச் சலுகைகள் வழங்கத் தீர்மானங்களை நிறைவேற்றினர். 1917-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த இந்தியத் தேசியக் காங்கிரஸ் மாநாட்டிலும் இந்தத் தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பரோடா மகாராஜாவும், கோல்காபூர் மகாராஜாவும் இந்த இயக்கத்திற்குத் துணை புரிந்தனர்.

இவை, டாக்டர் அம்பேத்கர் தோன்றிய நாளில் இந்தியாவில் குறிப்பாக மகாராஷ்டிரத்தில் நிலவிய சமூக, சமய, அரசியல் இயக்கங்களின் பின்னணியாகும்.

1891ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாளன்று அம்பேத்கர் பிறந்தார். அம்பேத்கரின் பூர்வீக கிராமம் 'அம்பாவதே' என்பதாகும். அது மகாராஷ்டிர மாநிலத்தில் இரத்தினகிரி மாவட்டத்தில் உள்ளது. அம்பேத்கரின் தந்தை பெயர் ராம்ஜி சக்பால்; தாய் பெயர் பீமாபாய் என்பதாகும். ராம்ஜி, மகாராஷ்டிர தாழ்த்தப்பட்டோரில் 'மகர்' என்னும் பிரிவைச் சார்ந்தவர்; அவரது தந்தை ஓய்வு பெற்ற இராணுவ வீரர். மகர் வகுப்பினர் அறிவாற்றலும் உடல் வலிமையும் மிக்கவர்கள். 'மகர்'களே அந்தப் பகுதியின் பழங்குடிகள். எனவே, அவர்களின் பெயரின் அடிப்படையிலேயே மகாராஷ்டிரம் என மாநிலத்தின் பெயர் ஏற்பட்டது என்பர். மகர் வீரர்கள் ஆங்கிலேயர்களுக்கு உற்ற துணையாக இருந்து உதவியவர்கள். ஆனால் 1892ஆம் ஆண்டில் 'மகர்களை' இராணுவத்தில் சேர்ப்பதை ஆங்கிலேயர் நிறுத்திவிட்டனர். இந்த அநீதியை எதிர்த்துப் பம்பாய் ஆளுநரிடம் போராடி 'மகர் படை' ஏற்படச் செய்தவர், ராம்ஜி. அவர், தம் தாய் மொழியான மராத்தியிலும், ஆங்கிலத்திலும் புலமை வாய்ந்தவர்; கணக்கும் அவருக்குப் பிடித்த பாடம். இராணுவப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிச் 'சுபேதார் மேஜர்' என்னும் பதவி வரை உயர்ந்தவர். கிரிக்கெட், கால்பந்து ஆகியவற்றிலும் வல்லவர்.

பீமாபாய், பம்பாய் மாநில முர்பாத் கிராமத்தில் பிறந்தவர். அவரது தந்தை பெரும் பணக்காரர்; தந்தையும் அவரது சகோதரர்களும் இராணுவத்தில் சுபேதார் மேஜர்களாக விளங்கியவர்கள். ராம்ஜி குடும்பத்தினரும்

பீமாபாய் குடும்பத்ினரும் கபீர்தாஸ் பக்தர்கள். கபீர்தாஸ் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டவர். ஆகையால் அவர் வழியை விரும்பி ஏற்றனர். பக்தியும் நல்ல பழக்க வழக்கங்களும் நிரம்பிய ராம்ஜியின் குடும்பத் தினர் ஊர் மக்களின் மதிப்பைப் பெற்றிருந்தனர் ராம்ஜிக்கும் பீமாபாய்க்கும் பதினான்கு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுள் மூன்று ஆண்களும், இரண்டு பெண்களுமே பிழைத்தனர். ஆண்களில் மூத்தவர் பெயர் பலராமன்; இரண்டாமவர் அனந்தராவ். சகோதரிகள் மஞ்சுளா, துளசி எனப் பெயர் பெற்றிருந்தனர். இவர்களுக்குப் பின் பதினான்காவது பிள்ளையாக அம்பேத்கர் பிறந்தார். அவருக்குப் 'பீமராவ்' என்று பெயரிட்டு மகிழ்ந்தனர். ராம்ஜி என்னும் தந்தை பெயரும் 'அம்பாவதே' என்னும் ஊரின் பெயரும் சேர்ந்து பீமா ராவ் இராம்ஜி அம்பாவத்கர் என அவரது பெயர் பள்ளி யில் பதிவாகியது. குடும்பத்தில் கடைக்குட்டியான அம்பேத்கர் எல்லோரின் அன்பையும் பாசத்தையும் பெற்று வளர்ந்தார்.

அம்பேத்கருக்கு இரண்டு வயதான போது தந்தை இராம்ஜி இராணுவ ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற் றார். அப்போது 'மோ' என்னுமிடத்தில் குடும்பம் இருந்தது. தந்தை ஓய்வு பெற்ற பின் 'தாபோலி' என்னுமிடத்திற்குக் குடியேறியது. அவருக்குக் கிடைத்த ஓய்வு ஊதியத்தைக் கொண்டு குடும்ப வாழ்க்கை சிக்கன மாக நடந்து வந்தது. பின்பு, பம்பாய்க்கு அருகே சதாரா என்னுமிடத்திற்குச் சென்று வாழ்ந்தனர்.

சதாராவில் குடியேறியிருந்த நாளில் அம்பேத்கரின் தாய் பீமாபாய் மரணம் அடைந்தார். அப்போது அம்பேத்கருக்கு வயது ஆறு. தாயின் மறைவினால் அம்பேத்கர் பெருந்துயரமடைந்தார். பீமாபாய் உயிருடன் இருந்தபோதே மகள்கள் மஞ்சுளாவுக்கும் துளசிக்கும் திருமணமாகிக் கணவர் வீட்டிலிருந்தனர். இராம்ஜிக்கு

உடன் பிறந்த தங்கை ஒருவர் இருந்தார். அவர் பெயர் மீராபாய் என்பதாகும். மீராபாய் கணவரை இழந்திருந் தார். சகோதரிகளும், அத்தையும் அம்பேத்கருக்குத் தாயில்லாக் குறையைப் போக்கி அன்புடன் அரவணைத்து வளர்த்தனர். தந்தை இராம்ஜியும் குழந்தைகளுக்குக் கல்வி, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றைப் புகட்டி வளர்த்தார்.

## தீண்டாமையின் பிடியில்:

சதாராவில் அம்பேத்கரின் ஆரம்பப்பள்ளி முடிந்தது. அண்ணனுடன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அப்போது அம்பேத்கருக்குத் தீண்டாமையின் கொடுமை தெரியத் தொடங்கியது. நலிவுற்ற சமுதாயத்தின் நிலை கெட்ட வாழ்க்கையையும், இந்த நாட்டில் அவர்கள் விலங்குகளைவிடக் கேவலமாக நடத்தப்பட்ட நிலையை யும் காண முடிந்தது.

உயர்நிலைப் பள்ளியில் அந்த நாள் வழக்கப்படி தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வகுப்பறையில் எல்லோ ருடனும் சேர்ந்து உட்கார முடியாது. தனியே ஒரு மூலை யில் உட்கார வேண்டும். அதற்கென்று தனியிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மற்றவர்கள் மரப்பலகையில் உட்காருவார்கள். இவர்கள் உட்காருவதற்குக் கோணிப் பையைக் கூடவே எடுத்துக்கொண்டு போக வேண்டும்.

உயர் சாதி மாணவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர் களுடன் பேசினால் தீட்டு, தொட்டால் தீட்டு என்று ஒதுங்கிக் கொண்டார்கள். மாணவர்கள் புத்தகங்களையும் பிற பொருள்களையும் தொடவிடமாட்டார்கள். மாண வர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் பெரும்பாலும் இந்தப் போக்கிலேயே இருந்தனர். இந்தப் பழக்கத்தின் விளை வாகத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அடைந்த அவமதிப் பும் கொடுமைகளும் ஏராளம்! ஏராளம்!

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் பள்ளிக்கு வந்தாலும் வராவிட்டாலும் எவரும் கவலைப்பட்டதில்லை. பள்ளியில் இந்த மாணவர்களின் குறிப்புப் புத்தகங்களை ஆசிரியர் தொட்டுத் திருத்தமாட்டார். பாடம் ஒப்புவிக்கும்போது தீட்டுப்பட்டுவிடும் என்பதால் எதையும் கேட்கமாட்டார். இந்த மாணவர்களுக்குத் தாகம் எடுத்தால் பள்ளியில் தண்ணீர் எடுத்துக் குடித்துவிட முடியாது. தனக்குத் தண்ணீர் தாகம் என்று என்று உயர் சாதி மாணவனிடம் சொல்ல வேண்டும். அந்த மாணவன் இரக்கப்பட்டால் இவனுக்குத் தண்ணீர் ஊற்றுவான்! எப்படி? தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவன் கீழே குனிந்து கொண்டு அண்ணாந்து வாயைத் திறந்து கொள்ள வேண்டும். உயர்சாதி மாணவன் தீட்டுப்பட்டு விடுமோ என்று அஞ்சிக் கொண்டே ஒதுங்கி ஒதுங்கிக் குவளையை மேலே தூக்கி வாயில் விழும்படித் தண்ணீர் ஊற்றுவான்.

அம்பேத்கர் பம்பாய் நகர அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது தீண்டாமைக்கு எடுத்துக்காட்டாக இன்னொரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு நாள் வகுப்பில் பாடம் நடந்து கொண்டிருந்தது. உயர் சாதி மாணவர்கள் தங்கள் உணவுப் பாத்திரங்களைக் கரும்பலகைக்குப் பின்னால் வைத்திருந்தார்கள். ஆசிரியர் கரும்பலகையில் கணக்கைப் போட்டுக் காட்டுவதற்காக அம்பேத்கரை அழைத்தார். அம்பேத்கர் கரும்பலகையை நோக்கிப் போனார்; உடனே மற்ற மாணவர்கள் தங்கள் உணவுப் பாத்திரங்களை எடுத்துக் கொள்ள ஓடினார்கள். அம்பேத்கர் அதன் பக்கத்தில் போனாலேயே தீட்டுப் பட்டுவிடும் என்ற பயத்தின் விளைவு அது.

பள்ளியில் மட்டுமா இந்த நிலை? சமுதாயத்திலும் இந்தக் கொடுமைகள் தாண்டவமாடின. ஒருநாள் அம்பேத்கரும் அவரது அண்ணனும் தந்தையைக் காணக் கோரேகான் என்னும் ஊருக்குப் போனார்கள். தாங்கள் வருவதைப்பற்றித் தந்தைக்குக் கடிதம் எழுதி இருந்தனர்.

மாசூர் நிலையத்திற்கு வந்து தங்களை அழைத்துக் கொண்டு போகும்படித் தெரிவித்திருந்தனர். அந்தக் கடிதம் ராம்ஜிக்குப் போய்ச் சேரவில்லை. தந்தையார் இரயில் நிலையத்திற்கு வருவார் என்று அம்பேத்கரும் அண்ணனும் நீண்ட நேரம் காத்திருந்து சோர்ந்து போனார்கள்.

சிறுவர்களின் நிலையைக் கண்டு இரயில் நிலைய அதிகாரி இரக்கப்பட்டார். கோரேகான் செல்வதற்கு மாட்டு வண்டி ஒன்றை வாடகைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். அவருக்கு நன்றி சொல்லிவிட்டுச் சகோதரர்கள் மகிழ்ச்சியுடன் வண்டியில் பயணத்தைத் தொடர்ந்தனர். ஆனால் அவர்களது மகிழ்ச்சி நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

வண்டிக்காரன் போகும் வழியில் பேச்சுவாக்கில் இச் சிறுவர்களின் சாதியைத் தெரிந்து கொண்டான். அவர்கள் கீழ்ச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்ததும் அவனது முகம் சிவந்தது; கடும் கோபத்தோடு கீழே குதித்தவன் வண்டியில் கட்டியிருந்த மாட்டை அவிழ்த்து விட்டான். அதனால் வண்டி குடை சாய்ந்தது. அம்பேத்கரும் அவரது அண்ணனும் குப்புற விழுந்தனர். உடலெங்கும் காயம் பட்டது; கண், மூக்கு, வாய் நிறைய மண்ணாகியது; உடைகள் புழுதி படிந்து அலங்கோலமாயின. இந்தக் காட்சியைக் கண்டு, வண்டிக்காரன் கோபம் தணியவில்லை அவர்கள் ஏறியதால் வண்டி தீட்டுப்பட்டுவிட்டதாக ஆவேசம் கொண்டு திட்டித் தீர்த்தான். சிறுவர்கள் அவனிடம் பயந்து நடுங்கி மன்னிப்பு கேட்டனர். அதிகக் கூலி தருவதாகக் கூறினார்கள். பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமல்லவா? வண்டிக் கூலி அதிகமானதும் அவனது கோபம் தணிந்தது ஆனால் புது நிபந்தனை போட்டான். வண்டியைச் சிறுவர்களே ஓட்டிக் கொண்டு வரவேண்டும் என்பது அவனது நிபந்தனை. சிறுவர்கள் அதற்கு ஒத்துக் கொண்

டனர். சிறுவர்கள் வண்டியில் உட்கார்ந்து ஓட்டிக் கொண்டுவர வண்டிக்காரன் மாட்டோடு மாடாக அவர்களுக்குப் பின்னால் நடந்து சென்றான்!

போகும் வழியில் சகோதரர்களுக்குத் தண்ணீர்த் தாகம் எடுத்தது. அங்கிருந்த வீடுகளில் குடிக்கத் தண்ணீர் கேட்டார்கள். இவர்களின் சாதியை அறிந்து கொண்டு ஒருவரும் தண்ணீர் தர முன்வரவில்லை: சோர்ந்த அவர்களின் முகத்தைப் பார்த்து இரக்கம் பிறக்கவில்லை. மாட்டுக்கும் எறும்புக்கும் தர்மம் செய்து புண்ணியம் தேடிக் கொள்ள அலைபவர்கள் மனிதனைக் கண்டு விலகி நின்றனர். தாகத்துடனேயே நள்ளிரவு நேரத்தில் சிறுவர்கள் தந்தையிடம் சேர்ந்தார்கள். தாங்கள் பட்ட அவமானத்தையும், துயரத்தையும் எடுத்துரைத்தனர். அதைக் கேட்டு அவரது கண்கள் கலங்கின; மூவரும் சேர்ந்து அழுதார்கள்.

## இளமையில் ஏற்பட்ட வடு

வேறொரு நாள், தண்ணீர்த் தாகத்தால் அம்பேத்கர் அருகிலிருந்த நீர்த்துறையில் இறங்கித் தண்ணீர் குடித்து விட்டார். இதைக் கண்டு விட்ட உயர் சாதிக்காரர்கள் ஆவேசம் கொண்டார்கள். அம்பேத்கரைக் கட்டிப் போட்டு உதைத்தார்கள். இந்தக் கொடுமை ஆறாத வடுவாகப் பதிந்தது.

ஒரு சமயம் அம்பேத்கர் முடிவெட்டிக் கொள்ள நாவிதர் ஒருவரிடம் சென்றார். தமக்கு முடிவெட்டும்படிக் கேட்டுக் கொண்டார். அதைக் கேட்ட நாவிதர் தாழ்த்தப் பட்டவருக்கு முடிவெட்டுவதைக் கேவலம் என்று கருதி மறுத்துவிட்டார். அதோடு விடவில்லை. ''நான் எருமை மாட்டிற்கு மயிர் வெட்டினாலும் வெட்டுவேன்; தாழ்த்தப்பட்டவனுக்கு முடி வெட்ட மாட்டேன்'' என்று கூறினார். அந்த நிலை கண்டு அம்பேத்கர் நெஞ்சம் கொதித்தது.

படிப்பதிலும் சாதியின் காரணமாகத் தடைகள் பல ஏற்பட்டன. உயர்நிலைப் பள்ளியில் சமஸ்கிருத மொழியை இரண்டாம் பாடமாக எடுத்துப் படிக்க அம்பேத்கர் விரும்பினார். சாதியின் காரணமாக அந்த உரிமை மறுக்கப்பட்டது.

சமூகத்திலும் பள்ளிக்கூடத்திலும் இந்தக் கொடுமை களைக் கண்டு, அனுபவித்துச் சோர்ந்து போயிருந்த அம்பேத்கரின் பிஞ்சு உள்ளத்திற்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது.

அன்னை பீமாபாய் மறைவுக்குப்பின், அம்பேத்கரின் தந்தை மறுமணம் செய்து கொள்ளாமல் இருந்தார். ஆனால் காலம் செல்லச் செல்ல அவர் மனம் மாறத் தொடங்கியது. மறுமணம் செய்து கொண்டார். இந்த நிகழ்ச்சியும் அம்பேத்கரின் மனவேதனையை அதிகரித்தது.

இந்த நிலையில் படிப்பதில் ஆர்வம் குறைந்தது. ஆடு மாடுகளை மேய்ப்பதை விரும்பினார். செடி கொடிகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார். மனத்தின் வேதனை தீரவில்லை. பம்பாய்க்கு ஓடிப்போய் ஏதாவதொரு பஞ்சாலையில் வேலை செய்ய முடிவு கட்டினார். பம்பாய் செல்ல பணம் வேண்டுமல்லவா? அத்தை மீராபாய் வைத்திருந்த துணிப்பை நினைவுக்கு வந்தது. அதிலே நிறைய பணம் இருக்கும் என்று எண்ணினார். அதை எடுத்துக் கொண்டால், பம்பாய் போய்ச் சேர்ந்து விடலாம் என்று கனவு கண்டார்.

ஆசை, அத்தையின் பையைத் திருடத் தூண்டியது. அத்தை தூங்கும்போது பையை எடுத்துவிட முயன்றார். மூன்று நாள் முயற்சி வீணாகி விட்டது; நாலாவது நாளில் வெற்றி கிடைத்தது; பையை ஆவலோடு திறந்தார். அங்கே அவர் கண்ட புதையல் எவ்வளவு தெரியுமா? அத்தையின் வறுமை மட்டுமல்ல — சமுதாயத்தின் வறுமைக் கோலம் அரையணா வடிவத்தில் காட்சி யளித்தது.

வீடும் உலகமும் அம்பேத்கருக்கு நல்ல பள்ளிக்கூடமாக அமைந்து அவருக்குப் பாடம் புகட்டின. தமது வாழ்க்கையில் புதிய திருப்பம் காண ஒரே வழி 'படிப்பு, படிப்பு, படிப்பே' என்று கண்டு கொண்டார். அதை நாடி அடையும் முயற்சியில் அயராது உழைக்கத் துணிந்து விட்டார்.

## துணிந்த பின் ஏது துயரம்?

துணிவு வந்தபின், சந்தர்ப்பமும் கூடி வந்தது. குடும்பம் பம்பாய் நகருக்கே சென்று குடியேறிற்று. ஆனால் அங்கே ஒரு சிறிய அறையே குடும்பத்திற்குக் கிடைத்தது. அனைவரும் சமைத்து உண்ண, படுக்க அம்பேத்கர் படிக்க எல்லாம் அந்த அறையே. அம்பேத்கர் படிக்கும் இடத்தில் தலைமாட்டில் ஆட்டுக்கல் இருக்கும். கால்மாட்டில் ஆட்டுக்குட்டி கிடக்கும். இந்தத் தொல்லையைப் போக்கி மகன் படிக்க இராம்ஜி நல்லதோர் ஏற்பாட்டைச் செய்தார். மகனை முன்னதாகத் தூங்கச் செய்வார். தாம் இரவு இரண்டு மணிவரை விழித்திருப்பார். பிறகு மகனை எழுப்பிப் படிக்க வைப்பார். 'சிம்னி' விளக்கு வெளிச்சத்தில் அம்பேத்கர் விடியும் வரையில் படிப்பார். அறியாமையும் அவமானமும் விடியத் துவங்கின.

## புதியதோர் உலகம்

அறிவு உலகம் அம்பேத்கருக்கு ஆறுதல் அளித்தது. எப்போதும் புத்தகமும் கையுமாகவே திகழ்ந்தார். இதைக் கண்டு தந்தை இராம்ஜியும் வேறு செலவுகளைக் குறைத்துக் கொண்டும், கடன் வாங்கியும் மகனுக்குப் புத்தகங்கள் வாங்கித் தந்தார். அம்பேத்கர் குடும்பம் வாழ்ந்த வீட்டிற்கு அருகிலேயே ஒரு பூங்கா இருந்தது. அங்கே சென்று அம்பேத்கர் படிப்பார். அங்கே நல்லார் ஒருவரின் தொடர்பும் அம்பேத்கருக்குக் கிடைத்தது.

அம்பேத்கர் சென்று படித்து வந்த பூங்காவிற்குக் கிருஷ்ணாஜி அர்ஜுன் கெலூஸ்கர் என்பவரும் வருவது வழக்கம். கெலூஸ்கர் பள்ளி ஆசிரியர்; சிறந்த மராட்டிய எழுத்தாளர், சமூகச் சீர்திருத்தத்தில் நாட்டமுடையவர். அம்பேத்கரை நாள்தோறும் பூங்காவில் பார்த்த கெலூஸ்கர் அவரைப்பற்றி அறிந்து கொண்டு அன்பு செலுத்தினார்; உற்சாக மூட்டி, புத்தகங்கள் பலவற்றைக் கொடுத்து மேலும் படிக்கத் தூண்டினார். தாம் எழுதிய 'கௌதம புத்தரின் வரலாறு' என்னும் புத்தகத்தையும் அம்பேத்கருக்கு அளித்தார். அந்த வரலாறு அம்பேத்கரின் மனத்தைக் கவர்ந்தது; பின்னர் அவர் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்குக் காரணமாகவும் அமைந்தது.

சாதியினால் வந்த சிறுமைக் குணத்தால் தாழ்த்தப் பட்ட மாணவர்களைக் கொடுமைக்குள்ளாக்கிய பள்ளி யிலேயே நல்லாசிரியர் ஒருவரும் இருந்தார். அவர் பெயர் அம்பேத்கர் என்பதாகும். அவர் அந்தண வகுப்பைச் சேர்ந்தவர். ஆசிரியர் அம்பேத்கர் தாம் கொண்டு வரும் உணவை மாணவர் பீமராவுக்குப் பகுத்தளித்து உண்பார். அன்பைப் பொழிந்தார்; அறிவுரைகள் வழங் கினார். அவர்களின் நட்பு வளர்ந்தது. அதுவரை பீமராவ் 'அம்பாவதே' என்னும் தமது ஊர்ப் பெயரைச் சேர்த்து பீமராவ் ராம்ஜி அம்பாவத்கர் என்றே பெயர் வைத் திருந்தார். ஆசிரியர் அம்பேத்கரின் அன்பையும் ஆதரவை யும் மறக்காமல் நினைவு வைத்திருக்கப் பள்ளிப் பதி வேட்டில் பீமராவ் அம்பேத்கர் என்று மாற்றிக் கொண் டார். அம்பேத்கர் தாம் செய்ந்நன்றி மறவாதவர் என்பதைக் காட்டினார்.

நல்லவர்கள் அளித்த ஊக்கத்தாலும், தளராத ஊக்கம், உழைப்பு ஆகியவற்றாலும் படித்து அம்பேத்கர் 1907ஆம் ஆண்டில் மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றி பெற்றார். அவரது வெற்றி, 'மகர்' வகுப்பு மக்களுக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தது. அந்த வெற்றியைக்

கொண்டாடப் பாராட்டு விழா நடத்தினார்கள். பம்பாய் நகரைச் சார்ந்த சீர்திருத்தவாதி எஸ். கே. போல் என்பவர் விழாவுக்குத் தலைமை வகித்தார். பூங்காவில் பழகிய ஆசிரியர் கிருஷ்ணாஜி கேலூஸ்கர் வாழ்த்துரை கூறினார். மேலும் மேலும் படித்து முன்னுக்கு வர வேண்டிய அவசியத்தைக் கூறியதோடு கல்லூரி சென்று படிப்பதற்கு வழிவகைகளையும் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்ச்சி அம்பேத்கர் மேலும் படிக்கத் தூண்டு கோலாக அமைந்தது. அம்பேத்கரின் அண்ணன், தம்பி படிப்பதற்காகத் தாம் படிப்பதை நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்று பொருளுதவி புரிய முன்வந்தார். இவற்றால் அம்பேத்கரின் படிப்பு தொடர்ந்தது.

## கருவாட்டுச் சந்தையிலே கல்யாணம்!

மகன் கல்லூரிப் படிப்புக்குப் போகுமுன்பே திருமணத்தை நடத்திவிடவேண்டுமென்று இராம்ஜி விரும்பினார். அப்போது அம்பேத்கருக்கு வயது பதினேழு. அம்பேத்கரின் விருப்பத்தைப் பற்றி கவலைப் படாமல், பல இடங்களில் பெண் பார்த்து, கடைசியில் வாலங்கர் என்பவரின் மகளை மணமகளாகத் தேர்ந் தெடுத்தார். பெண்ணின் தந்தை ஒரு போர்ட்டர்; பெண்ணுக்கு இளமையில் ராமி என்று பெயரிட்டிருந் தார்கள்; அவளது குடும்பத்தினர் பரம ஏழைகள். திருமணத்தின்போது தந்தையை இழந்திருந்தாள். ராமி அழகும், நற்பண்புகளும் நிறைந்தவள். அவள் பெயரை இராமாபாய் என்று மாற்றினார்கள்.

அம்பேத்கர்-இராமாபாய் திருமணம் நடந்த கதை சுவையானது. பம்பாய் நகர 'பைக்குல்லா' மார்க்கெட் பகுதியில் மீனும், காய்கறிகளும் விற்கும் ஒரு பெரிய கொட்டகையில் அந்தத் திருமணம் நடந்தது. மீன் விற்பவர்கள் வருவதற்கு முன்பே இரவோடு இரவாகத் திருமணத்தை முடிப்பதற்காகப் பெண் வீட்டாரும்,

பிள்ளை வீட்டாரும், கொட்டகையின் இரண்டு மூலை களில் தங்கிக் கொண்டார்கள். மண மேடையோ, அலங் காரமோ அங்கு இல்லை. குப்பைக் கூளங்களும், மீன் கிடந்த நாற்றமும், அங்காடிச் சாக்கடைத் தண்ணீரும் நறுமணம் வீசியது. மீன்காரர்கள் பயன்படுத்திய கல் பலகையில் மணமக்கள் அமர்ந்தனர். உற்றார் உறவினர் முன்னிலையில் அம்பேத்கரும் இராமாபாயும் தம்பதி களாயினர். பொழுது விடிவதற்குள் திருமண விருந்து, வேடிக்கை எல்லாம் முடிந்தது. சாதிக் கொடுமையால் வந்த வறுமையும் அறியாமையும் இந்த நாட்டின் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளித்திருந்த நிலையையே அம்பேத்கர் திருமணக் காட்சி எடுத்துக்காட்டியது.

## விடிவெள்ளிகள்

இத்தகைய இழிநிலைகளைப் போக்குவதற்குப் பல இயக்கங்களும் தலைவர்களும் தோன்றத் தொடங்கினர். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த தலைவர் சிவராம் ஜன்பா காம்லே என்பவர் இந்தியத் தாழ்த்தப்பட்ட மக்களின் முதல் மாநாட்டைக் கூட்டினார். தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகப் பூனாவிலிருந்து ஒரு மாத இதழை யும் வெளியிட்டு வந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் அறிக்கை அளித்தார். 1906 இல் தர்மவார் வி. பி. சிந்தே என்னும் சமூகச் சீர் திருத்தவாதியும் இணைந்து 'இந்தியத் தாழ்த்தப்பட்ட மக்களின் மிஷன்' என இயக்கத்தை ஆரம்பித்தனர். அதன் கிளைகள் இந்திய நாடெங்கும் தோன்றின. கோபால கிருஷ்ண கோகலே ஆரம்பித்து நடத்தி வந்த 'இந்திய ஊழியர் சங்கமும்' தீண்டாதார் உரிமைகளுக்காக அனுதாபம் காட்டியது. தமிழ் நாட்டில் 1857 முதல் ஆதி திராவிட மகாஜன சபை செயல்பட்டு வந்தது. தாழ்த்தப் பட்ட மக்களின் விழிப்புணர்ச்சிக்காகப் பாடுபட்ட வந்த இந்தச் சபைக்குத் திருவாளர்கள் பி. வி. சுப்பிரமணியம் பிள்ளை, எம். சி. சின்னத்தம்பி பிள்ளை, திவான்பகதூர்

எம். சி. இராஜா, ஆர். வீரையன், ஜே. சிவசண்முகம் பிள்ளை ஆகியோர் உறுதுணையாக இருந்து வளர்த் தார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களிடையே உருவாகி வந்த இந்த விழிப்புணர்ச்சி அம்பேத்கரின் எதிர்காலச் செயல்களுக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

# கல்லூரிப் படிப்பு 2

திருமணத்திற்குப் பின்பு, அம்பேத்கரின் கல்லூரிப் படிப்பு தொடங்கியது. பம்பாயிலுள்ள 'எல்பின்ஸ்டன்' கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்தார். கல்லூரிப் படிப்பு அவருக்குப் புதிய அனுபவமாகத் தோன் றியது. இராம்ஜி, மகனுக்கு நல்ல ஊக்க மூட்டினார். தமக்குக் கிடைத்த ஓய்வு ஊதியத்தையும் தமது மூத்த மகனின் சம்பளத்தையும் கொண்டு அம்பேத்கரின் கல்லூரிப் படிப்புக்கு உதவினார். முதலாண்டில் அம்பேத்கர் உடல் நலமில்லாததால் கல்லூரிக்கு ஒழுங் காகச் செல்ல முடியவில்லை. இதனால் அந்த ஆண்டுத் தேர்வில் தோல்வியுற்றார்; மீண்டும் தேர்வு எழுதி வெற்றி பெற்றார்.

## காலத்தால் செய்த உதவி

பின்னர் பி. ஏ. வகுப்பில் சேர்ந்து படிக்க அம்பேத்கர் விரும்பினார். ஆனால் குடும்பத்தின் நிலை அதற்கு உதவு வதாக இல்லை. எனினும் இராம்ஜி சோர்ந்து போக வில்லை. கிருஷ்ணாஜி கேலூஸ்கரின் உதவியை நாடினார். அவரும் அம்பேத்கருக்கு உதவ முயன்றார். அந்தச் சமயத் தில் பரோடா மன்னர் சாயாஜிராவ் கெயிக்வாட் வெளி

யிட்டிருந்த ஒரு முக்கிய அறிவிப்பு நினைவுக்கு வந்தது. தாழ்த்தப்பட்ட இளைஞர் எவராவது கல்லூரியில் படிக்க முன்வந்தால் அவருக்குத் தாம் பொருளுதவி செய்வதாகக் கெய்க்வாட் ஒரு பொதுக்கூட்டத்தில் அறிவித்திருந்தது நினைவுக்கு வந்தது. அம்பேத்கர் இந்த உதவியைப் பெறு வதற்குத் தகுதி வாய்ந்தவர் என்பதைத் தெளிவு படுத்தி மன்னருக்குக் கேலூஸ்கர் ஒரு கடிதம் எழுதித் தந்தார். மன்னரை அம்பேத்கர் நேரில் பார்த்தபோது சில கேள்வி கள் கேட்டார். பிறகு, மாதம் இருபத்தைந்து ரூபாய் பண வுதவி செய்ய ஒத்துக் கொண்டார். உதவியைப் பெற்று அம்பேத்கர் பி. ஏ. வகுப்பில் சேர்ந்தார்.

கல்லூரியிலும் தீண்டாமைக் கொடுமை தொடர்ந்து வந்தது. கல்லூரியில் விடுதி நடத்தி வந்தவர் உயர் சாதியைச் சேர்ந்தவர். அவர் அம்பேத்கருக்குத் தண்ணீர் கூடத் தர மறுத்துவிட்டார். கல்லூரி வாழ்வில் தமக்கேற் பட்ட தொல்லைகள், அவமதிப்புகள் ஆகியவற்றால் அம்பேத்கர் சோர்ந்து விடவில்லை; முயன்று படித்தார். அப்போது எல்பின்ஸ்டன் கல்லூரியில் பேராசிரியர் முல்லர் என்பவர் பணியாற்றி வந்தார். சிறந்த பண்பாள ரான முல்லர், அம்பேத்கரிடம் பரிவு கொண்டு புத்தகங் களையும் உடைகளையும் கொடுத்து உதவினார். அவற்றை நன்றியுடன் பெற்றுப் பயன்படுத்திக் கொண் டார் அம்பேத்கர். 1912 ஆம் ஆண்டில் பி. ஏ. பட்டத் தேர்வில் வெற்றி பெற்றார்.

பி. ஏ. பட்டதாரியான அம்பேத்கருக்குத் தமது பரோடா அரசாங்கத்திலேயே வேலை கிடைத்தது. பரோடா இராணுவத்தில் 'லெப்டினெண்ட்' பதவியை அளித்தார் மன்னர் கெய்க்வாட். ஆனால் இந்த வேலை யில் அம்பேத்கர் சேர்வதை, இராம்ஜி விரும்பவில்லை. மன்னரின் அன்புக்குரியவரானாலும், பரோடா அரசு அலுவலகத்தில் இருந்த உயர்சாதிக்காரர்களின் ஆணவ மும் அவமதிப்பும் தீராத தொல்லையாக இருந்தன.

அரசாங்க பைல்களை அவர் அருகில் சென்று கொடுத்தால் தீட்டுப்பட்டு விடும் என்பதற்காகப் பியூன்கள், 'பைல் களைத்' தூரத்திலிருந்தே வீசி எறிந்தார்கள். அவர் தங்கி இருப்பதற்கு வீடு கொடுக்க மறுத்தார்கள். மன்னருக்கு வருத்தம் ஏற்படக்கூடாது என்பதற்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு அங்கு பதினைந்து நாட்கள் வேலை பார்த்தார் அம்பேத்கர்.

அந்த நேரத்தில் தந்தையின் உடல்நிலை கவலைக்கிட மென்று தந்தி வந்தது. மன்னரின் அனுமதியுடன் அம்பேத்கர் பம்பாய் வந்து சேர்ந்தார். புதல்வனைக் கண்ட இராம்ஜி, பேசமுடியாமல் கண்ணீர் விட்டார். பக்கத்தில் அழைத்துத் தடவிக் கொடுத்தார். மனநிறை வுடன் அவரது உயிர் பிரிந்தது. தாய், தந்தையை இழந்து நின்ற அம்பேத்கர் அளவிலாத் துயரமடைந்தார்.

குடும்பச் சூழ்நிலையைக் காரணம் காட்டி வேலையை மீண்டும் ஏற்கமுடியவில்லை என்று பரோடா மன்னருக்குப் பக்குவமாகத் தெரிவித்து விட்டு அம்பேத்கர் பம்பாய் நகரிலேயே இருந்தார். வேறு வேலையையும் தேடவில்லை. மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வமே அவரிடம் மேலோங்கி நின்றது. இந்த நிலையிலேயே ஐந்து மாதங்கள் ஓடிவிட்டன. அச்சமயம் பம்பாய் வந்திருந்த பரோடா மன்னரைச் சென்று பார்த்தார். அவரிடம் மனம்விட்டுப் பேசினார்.

## அரிய வாய்ப்பு

தகுதியுள்ள மூன்று மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அமெரிக்காவுக்கு அனுப்பிப் படிக்க வைக்க உதவி செய்வது பற்றித் தாம் அறிவிப்பு வெளியிட்டிருப்பதை மன்னர், அம்பேத்கருக்கு நினைவூட்டினார். அந்த உதவியைப் பெற விண்ணப்பம் அனுப்புமாறும் தெரிவித்தார். அவ்வாறே அம்பேத்கர் அனுப்பிய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பரோடா சென்று உதவி பெறுவதற்

குரிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். "அமெரிக்கா வில் இருக்கும்போது குறிப்பிட்ட படிப்பிலேயே கருத்தைச் செலுத்த வேண்டும்; படிப்பு முடிந்து இந்தியாவுக்கு வந்த பிறகு பரோடா அரசில் பத்தாண்டுக் காலம் பணிபுரிய வேண்டும்'' என்னும் நிபந்தனைகள் அந்த ஒப்பந்தத்தில் இருந்தன.

பரோடா மன்னரின் உதவியைப் பெற்று 1913ஆம் ஆண்டு ஜூலை மூன்றாவது வாரத்தில் அம்பேத்கர் நியூயார்க் நகரைச் சென்று அடைந்தார். அமெரிக்கா சென்று படிக்கும் வாய்ப்பு அந்த நாளில் இந்தியருக்குக் கிடைத்தற்கு அரிய வாய்ப்பு; அதிலும் தாழ்ந்த வகுப்பைச் சார்ந்தவர்-ஒதுக்கப்பட்ட 'மகர்' இனத்தைச் சேர்ந்தவர் அறிவையும் புகழையும் தேடி, அடிமை விலங்கொடித்த ஆப்ரகாம் லிங்கனும், புக்கர் தி வாஷிங்டனும் பிறந்த பூமிக்குச் செல்லும் வாய்ப்பு கனவிலும் கருத இயலாத பெரும்பேறு எனலாம்.

காலத்தோடு ஒட்டி வளர்ந்து புதிய சமுதாயமாக விளங்கிய அமெரிக்காவைக் கண்டு பெருமிதமடைந்தார் அம்பேத்கர். அந்த நாடு அவரது கருத்தையும் காட்சியை யும் மாற்றியது. எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை என்று வாழ்ந்த அமெரிக்க மக்களின் சமத்துவ வாழ்க்கை அம்பேத்கரை மிகவும் கவர்ந்தது.

# அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில்... 3

அமெரிக்கா சென்றடைந்த அம்பேத்கர், கொலம்பியா பல்கலைக்கழக மாணவராகச் சேர்ந்தார். அங்கும் படிக் கும் அரிய வாய்ப்பினை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். அங்கிருந்த உணவு விடுதிகளில் அம்பேத்கருக்கேற்ற உணவு வகைகள் கிடைக்கவில்லை.

பல இடங்களில் சுற்றி அலைந்து 'லிவிங்ஸ்டன்' ஹால் என்னும் இடத்தை அடைந்து தங்கினார். அங்கே நேவல் பதேனா என்னும் பார்சி மாணவரின் நட்பும் கிடைத்தது. அவர்களின் நட்பு இறுதிவரை நீடித்தது.

கொலம்பியா பல்கலைக் கழகத்தில் அம்பேத்கர் அரசியல், தத்துவம், பொருளாதாரம், சமூகவியல் ஆகிய பாடங்களைப் படித்தார். ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் உழைத்தார். சினிமா, நாடகம், கேளிக்கை, உல்லாசப் பயணம் என்று பொழுது போக்கிற்குக் குறைவில்லாத நாட்டில் தம் கருத்தைச் சிதற விடாமல் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் படித்து வந்தார். எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, பரோடா மன்னர் அனுப்பி வந்த உதவிப்பணத்தில் மிச்சம் பிடித்து, மாதந்தோறும் தம் குடும்பத்திற்கு அனுப்பி வந்தார்.

அம்பேத்கர் தம் உழைப்பின் பயனாக 1915- ஆம் ஆண்டில் கொலம்பியா பல்கலைக்கழக எம். ஏ. பட்டத்தைப் பெற்றார். அந்தப் பட்டத்திற்குப் 'பண்டைக்கால இந்திய வாணிபம்' என்னும் தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையை அளித்தார். அதோடு, 'இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையெழுதிக் கருத்தரங்கு ஒன்றில் படித்தார்; அதைச் சிறு புத்தகமாகவும் வெளியிட்டார். அதுவே அம்பேத்கரின் முதலாவது அச்சிட்ட புத்தகமாகும். அந்தக் கட்டுரையில் சாதிமுறையின் வளர்ச்சியையும் அது மறையாததற்கு முக்கிய காரணங்களையும் தெளிவுபடுத்தினார்.

## டாக்டர் அம்பேத்கர்

1916-இல் 'இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்' என்னும் தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையைக் கொலம்பியா பல்கலைக் கழகத்திற்கு அளித்தார். அந்தக் கட்டுரைக்காக 'டாக்டர்' (தத்துவப் பேரறிஞர்) பட்டம்

அம்பேத்கருக்குக் கிடைத்தது. எட்டாண்டுகளுக்குப் பின் 'ஆங்கில ஆட்சியில் மாநில நிதிநிலை வளர்ச்சி' என்னும் பெயரில் அதனைப் புத்தகமாக வெளியிட்டார். அந்தப் புத்தகத்தைத் தமது கல்வி வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த பரோடா மன்னர் சாயாஜிராவ் கெய்க்வாட் அவர்களுக்கு அன்புக் காணிக்கையாக ஆக்கினார். பொருளாதார வல்லுநர்களும், புகழ்மிக்க பேராசிரியர் களும் அந்தப் புத்தகத்தின் சிறப்பைப் பாராட்டிப் புகழ்ந் தனர். மாணவர்களும், அந்த நாள் சட்டமன்ற உறுப் பினர்களும் அதைப் போற்றிப் பயன்படுத்திக் கொண் டார்கள்.

அமெரிக்காவில் தமது படிப்பை வெற்றியுடன் முடித்துக் கொண்ட டாக்டர் அம்பேத்கர், மேலும் படித்துப் பட்டங்கள் பல பெற விரும்பினார். அதற்காக 1919-இல் இலண்டனுக்குச் சென்றார். அங்கே அரசியல், பொருளாதாரப் பாடங்களில் எம். எஸ்ஸி பட்டம் பெறு வதற்குப் பதிவு செய்து கொண்டார். இலண்டனில் மேற் கல்வியைத் தொடர்வதற்குப் பரோடா மன்னரின் அனுமதியைக் கோரினார். ஆனால், ஒப்பந்தப்படி உதவிப் பணம் அளிக்கும் காலம் முடிந்து விட்டதால், உடனே நாடு திரும்பும்படிப் பதில் வந்தது. இந்தத் திருப்பம் டாக்டர் அம்பேத்கருக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித் தது. நான்கு ஆண்டுகளுக்குள் மீண்டும் வந்து படிப்பை முடிப்பதாக அனுமதி வாங்கிக் கொண்டு இந்தியாவுக்குப் புறப்பட்டார். அப்போது முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. எனவே, தமது சாமான்களையும் புத்தகங்களையும் ஒரு கப்பலில் ஏற்றி அனுப்பிவிட்டு, வேறொரு கப்பல் மூலம் டாக்டர் அம்பேத்கர் பம்பாய் வந்து சேர்ந்தார்.

# மீண்டும் இந்தியாவில்... 4

1917-இல் டாக்டர் அம்பேத்கர் மீண்டும் இந்தியா விற்கு வந்தபோது, அரசியல் நிகழ்ச்சிகளில் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த ஆங்கில அரசு பல முனைகளில் நெருக்கடி யைச் சந்தித்துக் கொண்டிருந்தது. உலகப்போர் முனை யில் ஏற்பட்ட தோல்விகள், இந்திய சுயாட்சி இயக்கத் தினரின் போராட்டங்கள், இந்தியப் புரட்சி வீரர்களைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடி ஆகியவற்றால் சோர்ந்து போயிருந்தது. இந்த நிலையில் இந்தியருக்குச் சுயாட்சித் திறனை வளர்ப்பதற்காக இந்தியத் தலைவர்களின் கருத் துக்களைக் கேட்டறிய மாண்டேகு பிரபு இந்தியா வந் திருந்தார். இந்திய நாட்டின் பல்வேறு அரசியல் கட்சி களின் குழுக்கள் அவரிடம் குறைகளை எடுத்துரைத்தன. அப்போதுதான் இந்திய அரசியல் வரலாற்றிலேயே முதன் முதலாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளின் குழு, தங்கள் குறைகளைத் தெரிவிக்க முன் வந்தது. சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பஞ்சமர் கல்வி அபிவிருத்தி அபிமான சங்கமும், சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சங்கமும், வங்காளத் தாழ்த்தப்பட்டவர்களின் அமைப்பும் இதில் பங்கு கொண்டன. ஒடுக்கப்பட்டோர் மிஷனைச் சார்ந்த சர் என் ஜி. சந்திரவர்க்கரும் மாண்டேகு பிரபுவைப் பேட்டி கண்டார். டாக்டர் அம்பேத்கர் நீண்ட காலம் வெளிநாட்டிலிருந்து வந்ததால் இந்த வளர்ச்சியில் தொடர்பில்லாமல் போயிற்று.

இந்தியா திரும்பிய டாக்டர் அம்பேத்கருக்குப் பாராட்டுக் கூட்டமொன்று நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டவர்கள் அம்பேத்கரின் அறிவையும் முயற்சியையும் மனமாரப் பாராட்டினார்கள். தன் னடக்கம் காரணமாக அம்பேத்கர் அந்தக் கூட்டத்தில்

கலந்து கொள்ளவில்லை. ஆனால் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள் அம்பேத்கரின் இல்லத்திற்கு வந்து தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துச் சென்றனர். புகழ் அம்பேத்கரைத் தேடி வந்தது; அம்பேத்கர் புகழை நாடிப் போனதில்லை.

## தொடர்ந்து வந்த அவமானம்

அமெரிக்காவுக்குப் போகுமுன், பரோடா மன்னருடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, பரோடா ராணுவச் செயலாளராகப் பொறுப்பேற்க முன் வந்தார் அம்பேத்கர். பரோடா இரயில் நிலையத்தில் அம்பேத்கரை வரவேற்று அழைத்து வரும்படி உத்திரவிட்டிருந்தார் மன்னர். ஆனால் பரோடா இரயில் நிலையத்தில் டாக்டர் அம்பேத்கரும் அவரது சகோதரரும் வந்திறங்கியபோது அவர்களை யார் என்று கேட்பதற்கும் ஆளில்லாமல் போயிற்று. அதுமட்டுமா? 'மகர்' சாதியைச் சார்ந்த ஒருவரை மன்னர் உயர்ந்த பதவியில் நியமித்திருக்கும் செய்தி ஊரெங்கும் பரவி இருந்தது; அவர்கள் தங்குவதற்கு இடம் கொடுக்க மறுத்தனர். தாங்கள் யார் என்று தெரிவிக்காமலே, சகோதரர்கள் பார்சிக்காரர்களுடைய சத்திரம் ஒன்றில் சில நாள் தங்கினார்கள்.

ஒரு நாள் பார்சிகள் சிலர் அவர்களைத் தேடி வந்தனர். கைகளில் கழிகளுடன் கண்கள் சிவந்து கடும் கோபத்தோடு டாக்டர் அம்பேத்கரைப் பார்த்து ''நீ யார்?'' என்று கேட்டார்கள். டாக்டர் அம்பேத்கர், 'நான் ஓர் இந்து' என்று பதிலளித்தார். ''இல்லை இல்லை, நீ ஒரு மகர் என்பது எங்களுக்குத் தெரியும்; இந்த இடத்தைவிட்டு உடனே காலி செய்'' என்று வெறி பிடித்தவர்களாய் ஓலமிட்டனர். எட்டு மணி நேரத்திற்குள் காலி செய்வதாக அம்பேத்கர் கூறினார். வந்தவர்கள் கலைந்து சென்றனர்,

புதிய இடம் தேடி டாக்டர் அம்பேத்கர் ஊரெல்லாம் அலைந்தார். இந்துக்களையும் முஸ்லீம்களையும் கேட்டுப் பார்த்தார். எவரும் இடமளிக்க முன் வரவில்லை. இறுதி யில், நடந்ததை விளக்கமாக எழுதி மன்னருக்கு அனுப் பினார். மன்னர் அந்தக் கடிதத்தைத் திவானுக்கு அனுப்பி வைத்தார். திவான் இந்த விஷயத்தில் தலையிட முடியாது என்று ஒதுங்கிக் கொண்டார்.

அம்பேத்கர் ஓய்வில்லாமல் அலைந்ததால் களைத்துப் போனார். உண்ண உணவும் கிடைக்கவில்லை. பசியும் தாகமும் ஒரு பக்கம். பிறப்பினால் ஏற்பட்ட அவமானம் ஒருபக்கம். ஓய்ந்து ஒடுங்கி ஒரு மரத்தடியில் அமர்ந்தார். அழுதார்; தேம்பித் தேம்பி அழுதார். அந்தக் கண்ணீரைத் துடைக்கும் கைகள் இல்லாமல் அழுதார் டாக்டர் அம்பேத்கர்.

ஊரில் மட்டுமா இந்தக் கொடுமை? அலுவலகத்திற்கு உள்ளேயும் இதைவிடக் கொடிய சாதி வெறி தாண்டவ மாடியது. அங்கே அவரை மதிப்பார் எவருமில்லை. பியூன்கள் தூரத்திலிருந்தே 'பைல்' களை மேசைமீது வீசியெறிந்தனர். அலுவலகத்தைவிட்டு அவர் வெளி யேறும்போதும் வரும்போதும் தரையில் விரித்திருக்கும் நடைவிரிப்பைச் சுருட்டி விடுவார்கள். குடிக்கத் தண்ணீர் கொடுக்கமாட்டார்கள். இந்த அவமானங்களிலிருந்து தப்புவதற்காக அடிக்கடி அங்கிருந்த நூலகத்திற்குச் சென்று விடுவார். அவருக்கு அங்கே ஒரு நாள் ஒரு யுகம் கழிவது போலிருந்தது.

சாதிக் கொடுமை பொறுக்க முடியாத நிலையை யடைந்தபோது டாக்டர் அம்பேத்கர், பம்பாய்க்குத் திரும்பி வந்தார். தமக்கு இழைக்கப்பட்ட கொடுமை களைக் கேலூஸ்கருக்கு எடுத்துச் சொன்னார். கேலூஸ்கர் மனம் வருந்தினார்; பரோடா மன்னருக்குக் கடிதம் எழுதினார். அதற்குப் பதில் வராமல் போகவே, பரோடாவிலிருந்த பேராசிரியர் ஒருவருக்கு உதவி

செய்யும்படிக் கேட்டுக் கொண்டு எழுதினார். முதலில் அந்தப் பேராசிரியர், அம்பேத்கர் தங்க இடமளித்து, உணவளிக்க ஒப்புக்கொண்டு பதில் எழுதினார். அதை நம்பி டாக்டர் அம்பேத்கர் மீண்டும் பரோடாவுக்குப் பயணமானார். டாக்டர் அம்பேத்கர் பரோடா ரயில் நிலையத்தில் வந்திறங்கியபோது அந்தப் பேராசிரியரின் இன்னொரு கடிதம் கிடைத்தது. அம்பேத்கர் தன்வீட்டில் வந்து தங்கி இருப்பதற்கு வைதிக மனம் கொண்ட தன் மனைவி இணங்காததால் வரவேண்டாம் என்று எழுதிய கடிதம் அது. அதைப் பார்த்த அம்பேத்கர் அங்கிருந்தே பம்பாய்க்குத் திரும்பினார்.

இச்சமயத்தில் பம்பாயில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நடத்திய இரண்டு மாநாடுகள் குறிப்பிடத்தக்கவை. முதல் மாநாடு 1917 ஆம் ஆண்டில் நடைபெற்றது. சர் என். ஜி. சந்தவர்க்கர் அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்றும், தாழ்த்தப் பட்ட மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந் தெடுத்துக் கொள்ள உரிமை வேண்டும் என்றும் ஒரு தீர்மானமும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மதம், பழக்க வழக்கத்தின் பேரால் இழைக்கும் கொடுமைகளை ஒழிக்க வேண்டும் என்று மற்றொரு தீர்மானமும் அம்மா நாட்டில் நிறைவேற்றப்பட்டன. சில நாட்களுக்குப் பின் நடந்த இன்னொரு மாநாட்டிலும் இதே போல் தீர்மானங்கள் நிறைவேறின. இம்மாநாடுகளில் அம்பேத்கர் கலந்து கொள்ளவில்லை.

1918ஆம் ஆண்டில் முதலாவது அகில இந்தியத் தாழ்த்தப்பட்டோர் மாநாடு பம்பாயில் நடைபெற்றது. பரோடா மன்னர் சாயாஜிராவ் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். பாலகங்காதரத் திலகர், வித்தல்பாய் படேல், எம். ஆர். ஜெயகர், விபின் சந்திரபால் முதலிய பெருந் தலைவர்கள் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தீண்டாமை ஒழிப்பை ஆதரித்து அவர்கள் பேசினார்கள். ஆனால் அவர்கள் பேச்சில் டாக்டர் அம்பேத்கருக்கு முழு நம்பிக்கை ஏற்படவில்லை.

பரோடாவிலிருந்து வந்த பிறகு, வேலை எதுவுமில்லாமல் அம்பேத்கர் தவித்தார். அமெரிக்காவில் நண்பரான நேவல் பதேனா இதை அறிந்து கணக்கு எழுதவும், கடிதப் போக்குவரத்துக்களைக் கவனித்துக் கொள்ளவும் ஒரு வேலையில் அம்பேத்கரை அமர்த்தினார். டாக்டர் பட்டம் பெற்றிருந்த அம்பேத்கர் அந்த வேலையை அலட்சியமாக நினைக்காமல் திருத்தமாகச் செய்தார்.

இச்சமயத்தில் பம்பாய் சிடென்காம் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியர் பதவி காலியாக இருப்பதை அம்பேத்கர் அறிந்தார். பம்பாய் முன்னாள் ஆளுநரான சிடென்காம் பிரபுவின் துணையால் அந்தப்பதவியை டாக்டர் அம்பேத்கர் பெற்றார். அந்த வேலையில் சேர்ந்து கொண்டு இலண்டனில் குறையாகவிட்டு வந்த சட்டப் படிப்பைத் தொடங்குவதற்குப் பணத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருந்தது.

சிடென்காம் கல்லூரி மாணவர்கள், டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவரானதால் அவரைப் பற்றி ஏளனமாக நினைத்தனர். ஆனால் டாக்டர் அம்பேத்கர் பாடம் நடத்தத் தொடங்கிய பிறகு அவர்களின் எண்ணம் மாறியது; மெய் மறந்து கேட்டார்கள். நாளடைவில் அம்பேத்கரின் புகழ் வெளிக் கல்லூரிகளிலும் பரவியது. மற்ற கல்லூரி மாணவர்களும் அனுமதி பெற்று வந்து அம்பேத்கர் நடத்திய பாடங்களைக் கேட்டுப் பயன் அடைந்தனர். மாணவர்களிடையே அம்பேத்கரின் மதிப்பு உயர்ந்தது.

பேராசிரியராகப் பணியாற்றிய நாளில் கோல்காப்பூர் சிற்றரசர் சாகு மகராஜ் என்பவரின் தொடர்பு

அம்பேத்கருக்குக் கிடைத்தது. சாகு மகராஜ் சீர்திருத்த நோக்கம் கொண்டவர்; தீண்டாமையை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்; பல சீர்திருத்தங்களைச் செய்து வந்தவர். இவரது உதவியைப் பெற்று டாக்டர் அம்பேத்கர் 'மூக் நாயக்' (ஊமைகளின் தலைவன்) என்னும் மாதம் இருமுறைப் பத்திரிகையை ஆரம்பித்தார். மகாராஷ்டிர மாநிலத்தில் நடந்த தாழ்த்தப்பட்டோர் மாநாடுகளில் சாகு மகாராஜாவுடன் டாக்டர் அம்பேத்கர் கலந்து கொண்டார். இந்த மாநாடுகள் டாக்டர் அம்பேத்கரின் அரசியல் நுழைவுக்குப் படிகளாக அமைந்தன.

## நல்ல பெண்மணி இராமாபாய்

அம்பேத்கர் அமெரிக்காவில் இருந்தபோது அவரது மனைவி இராமாபாய் ஆதரவற்றவராகவே வாழ்ந்தார். தொல்லைகள் ஆயிரம் என வந்த போதும் துயரத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் மனத்துக்குள்ளேயே அடக்கிக் கொண்டார். அமெரிக்கா சென்றுள்ள தம் கணவர் நன்றாகப் படிக்க வேண்டும், பத்திரமாகத் திரும்ப வேண்டும் என்று வேண்டிய வண்ணமே இருப்பார்.

அம்பேத்கர் அமெரிக்காவுக்குச் செல்லும்போது இராமாபாய் கருவுற்றிருந்தார்; அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது; அதற்கு 'ரமேஷ்' என்று பெயரிட்டார்கள். அந்தக் குழந்தை பிறந்த சில நாட்களுக்குள் இறந்து போயிற்று. அம்பேத்கர் இந்தியா திரும்பி வந்த பிறகு மற்றுமோர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு, 'கங்காதர்' என்று பெயரிட்டார்கள். அந்தக் குழந்தையும் இளமையிலேயே இறந்துவிட்டது. மூன்றாவதாகப் பிறந்த குழந்தைக்கு, 'எஸ்வந்த்' என்னும் பெயரிட்டு வளர்த்தனர். இந்தக் குழந்தையைக் கண்ணாகக் கருதிக் காத்தனர்,

இராமாபாய், தமது கணவரின் பணிகளுக்கும் படிப் பிற்கும் இடையூறு செய்யாமல் ஒதுங்கியே வாழ்ந்தார். தம் உடல்நிலை சரியில்லை என்றாலும் அதனால் கணவருக்குத் தொல்லை தரக்கூடாது எனக் கருதி அமைதி காத்தார். உறவினர்கள் எவரும் கணவரின் படிப்பிற்குத் தடையாக இல்லாமல் பார்த்துக் கொண்டார். கணவரின் துணையால் சிறிது எழுதப் படிக்கவும் கற்றுக் கொண் டார். கடமை உணர்வும், அன்பும், அமைதியும் மிக்க இராமாபாய் கணவர் தன்னிடம் கொடுத்த பணத்தினா லேயே குடும்பச் செலவுகளையும் பார்த்துக் கொண்ட தோடு, அம்பேத்கரின் சகோதரர் இறந்து போனபோது அவரது குடும்பத்தினரையும் ஆதரித்துக் காத்தார். இராமாபாயின் நல்ல பண்புகள் அம்பேத்கரின் உயர்வுக்குத் துணை புரிந்தன.

பேராசிரியர் பணியில் கிடைத்த சம்பளத்தில் சிக்கன மாகச் செலவு செய்து ஓரளவு பணத்தை அம்பேத்கர் சேர்த்திருந்தார். அதோடு கோலாப்பூர் மன்னரிடமும், நண்பர் நேவல் பெதேனாவிடமும் உதவி பெற்று வேண் டிய பணத்தைச் சேர்த்துக்கொண்டு இங்கிலாந்திற்குப் புறப்பட்டார்.

# பாரிஸ்டர் அம்பேத்கர் 5

1920ஆம் ஆண்டில் டாக்டர் அம்பேத்கர், பொருளா தாரப் படிப்பிற்காக இலண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் கல்லூரியில் சேர்ந்தார். அதோடு, ‘பாரிஸ்டர்’ பட்டம் பெறுவதற்குக் ‘கிரேஸ் இன்’ கல்லூரியிலும் சேர்ந்தார். சாகு மகாராஜா, நேவல் பெதேனா ஆகியோ ரின் உதவிகள் அவருக்குக் கிடைத்து வந்தன.

தமது படிப்பிற்காக இலண்டனில் இருந்த பல பெரிய நூலகங்களில் எல்லாம் பதிவு செய்து கொண்டு புத்தகங்களைப் படித்தார். 'பிரிட்டிஷ் மியூசியம்' நூலகம் அவரது மனதைக் கவர்ந்தது. பொதுவுடைமைத் தத்துவத்தின் சிற்பி காரல் மார்க்சும், மாமனிதர் இலெனினும், இத்தாலியப் பேரறிஞர் மாஜினியும் பயன்படுத்திக் கொண்ட நூலகம் அது. நூலகம் திறந்திருக்கும் நேரமெல்லாம் அம்பேத்கர் அங்கிருப்பார். நேரத்தையும் பணத்தையும் சேமிக்க மதிய உணவு உண்ணாமலும் படிப்பார். நூலகம் திறக்கும்போது முதல் ஆளாகவும், மூடும்போது கடைசி ஆளாகவும் நின்றார் அம்பேத்கர். நூலகத்திலிருந்து வீடு திரும்பும்போது ஆராய்ச்சிக்கான குறிப்புகள் பை நிறைய கொண்டு வருவார். அவற்றைக் கொண்டு இரவெல்லாம் கண்விழித்து எழுதுவார்.

அம்பேத்கர், ஓய்வு, உல்லாசம் என வாழ விரும்பவில்லை. பொழுது போக்கு, பூங்கா என எங்கும் செல்லவுமில்லை. மாலை நேரத்தில் அரை மணி நேரம் நடப்பார். அதுவே அவர் வீணாக்க முடிந்த நேரமென்று கருதினார். தங்கியிருக்க ஓட்டல்களையோ, வீடுகளையோ நாடவில்லை. பணம் வாங்கிக் கொண்டு உணவளிக்கும் ஓர் அம்மையார் வீட்டில் தங்கினார். அங்கு கிடைத்த எளிய உணவையே உண்டார். பம்பாயில் இராமாபாய் குடும்பம் நடத்தப் பணமில்லாமல் தவித்தபோது, உடமைகளை விற்று, செலவுகளைப் பார்த்துக் கொள்ளும்படி எழுதினார். அந்த நெருக்கடி மிகுந்த நாளில் பிறர் உதவி செய்ய முன் வந்த போதும் அதை ஏற்றுக்கொள்ள இராமாபாய் மறுத்தார்.

வலிய ஏற்றுக்கொண்ட வறுமையிலும், துன்பத்திலும் நாட்கள் ஓடின. அம்பேத்கரின் அயராத உழைப்பிற்குப் பலன் கிடைத்தது. 1921-ஆம் ஆண்டில் அவரது பொருளாதார ஆராய்ச்சிக் கட்டுரைக்கு இலண்டன் பல்கலைக் கழகம் 'எம். எஸ்ஸி' பட்டம் அளித்தது. அங்கி

ருந்து, ஜெர்மன் நாட்டிற்குச் சென்று 'பான்' பல்கலைக் கழகத்தில் சில மாதங்கள் பொருளாதாரம் பயின்றார். இவற்றை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய அம்பேத்கர், 1923-ஆம் ஆண்டில் பம்பாயில் இருந்த படியே 'ரூபாய் பற்றிய பிரச்னை' என்னும் தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை அளித்துப் பொருளாதாரத்தில் 'டி. எஸ்ஸி', பட்டமும் பெற்றார். இவற்றோடு அதே ஆண்டில் 'பாரிஸ்டர்' என்னும் தகுதியும் அடைந்தார். அறிவுத் துறையின் சிகரத்தை எட்டிப் பிடித்த அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவர்களும் உழைப்பினால் படித்து முன் னேற முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டானார்.

படிப்பதற்காக இலண்டன் சென்றிருந்த அம்பேத்கர், தம் சொந்த உயர்விலும் பெருமையிலும் தம் வாழ்வின் இலட்சியத்தை மறந்துவிடவில்லை. மனிதர் என்னும் பெயரில் பாமரராய், விலங்குகளாய் உலவிக் கொண் டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களின் சமுதாய விடுதலை பற்றிய நினைவை அவர் மறந்துவிடவில்லை. இங்கிலாந் தில்,இந்திய அரசாங்கச் செயலாளராக இருந்த மாண்டேகு பிரபுவைச் சந்தித்துத் தீண்டாதார் பிரச்னைகளைப் பற்றிப் பேசினார். இலண்டனுக்கு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் வித்தல்பாய் வந்திருந்தபோது, தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை உயர்வு பற்றி விவாதித் தார்.

நீண்ட நாட்களாக இலண்டனில் தங்கிவிட்டாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்புகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களை ஒருமுனைப்படுத்துவது பற்றி நண்பர் களுக்குக் கடிதம் எழுதி வந்தார். தாம் தொடங்கி வைத்த 'மூக் நாயக்' பத்திரிக்கை நின்றுவிடாமல் வெளிவர வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார். அதைக் குறித்து ஒரு கடிதத்தில்,

''வெற்றியோ தோல்வியோ எதுவரினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும் பாராட்டா விட்டாலும்
கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்போது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்''

என்று எழுதினார். சமுதாய நலனில் ஆர்வமுள்ளவர்களின் குடும்ப சுக, துக்க நிகழ்ச்சிகளை விசாரித்து அறிவார். பல்வேறு பிரிவினராகப் பிரிந்திருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள், வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டால்தான் தீண்டாமைக்கு முடிவு கட்ட முடியும் என்று தம் கடிதங்களில் தவறாமல் குறிப்பிடுவார்.

பாரிஸ்டர் அம்பேத்கர் இலண்டன் பல்கலைக் கழகத்தில் டி. எஸ்ஸி பட்டமும், அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் பி. எச். டி. பட்டமும், ஜெர்மன் நாட்டுப் பான் பல்கலைக் கழகப் பட்டமும் பெற்று ஆற்றல் மிக்க வழக்கறிஞராக, பொருளாதாரம், சமூகவியல் ஆகியவற்றில் எவருக்கும் பின்வாங்காத பேரறிஞராக விளங்கினார். இவை அனைத்திற்கும் மேலாக, தம்மைத் தகுதிமிக்கவராக உயர்த்திக்கொண்டு இந்தியாவின் களங்கமாக இருந்த தீண்டாமைக் கொடுமையை எதிர்த்துத் தகர்ப்பதற்குப் பெரும் புயலாகவும் கிளம்பினார். தாழ்த்தப்பட்டோரின் உரிமைக்குரல் திக்கெலாம் கேட்க எதிரொலித்தார்.

## பொது வாழ்வில் ஈடுபாடு 6

டாக்டர் அம்பேத்கர் வழக்கறிஞர் தொழில் புரிவதற்கு ஆரம்பத்தில் நண்பர் நேவல் பெதேனா பணவுதவி செய்தார். அம்பேத்கர் வழக்கறிஞரான காலம் ஆங்கிலேயர் காலம். பம்பாய் உயர்நீதி மன்றத்தில் ஆங்கிலேய வழக்

கறிஞர்களின் ஆடம்பர உடையும், சாதி, பரம்பரைப் பெருமை ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு தொழிலை வளர்த்துக்கொண்ட இந்திய வழக்கறிஞர் களின் ஆர்ப்பாட்டமும் மேலோங்கி நின்றது. இவர்களை எதிர்த்து நின்று தம் தொழிலில் முன்னேறினார் அம்பேத்கர். அவரது தொழில் வளர்ந்தது; வருமானமும் பெருகி வந்தது. தம் நிலை உயர்ந்தபோதும், கோடிக் கணக்கில் தாழ்த்தப்பட்டுக் கிடந்த மக்களுக்காகப் பாடு படுவதைக் குறைத்துக் கொள்ளவில்லை. இந்த வகையில் அவரது பணிகள் புதிய வேகத்தோடு தொடர்ந்தன.

முதலாம் உலகப் போரின் விளைவாக இந்திய நாட்டிலும் பலவகையான மாற்றங்கள் ஏற்படத் தொடங் கின. நகரங்களில் தொழிற்பெருக்கம் ஏற்பட்டது. தொழிற்சாலைகளில் வேலைக்குச் சேர்ந்த தாழ்த்தப் பட்ட மக்களின் பொருளாதார நிலை உயர்ந்தது. அவ்வாறே உலகப் போரில் ஈடுபடுவதற்காக ஆங்கிலேயர் திரட்டிய இராணுவத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரு மளவில் சேர்ந்தனர். நாட்டில் மேலோங்கி வந்த விடுதலைப் போராட்டத்தின் விளைவாக, இந்தியர்கள் அனைவரும் ஒன்றாக வேண்டும் என்ற உணர்வு பரபபப் பட்டது. இவற்றால் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இந்த மக்களின் அவல நிலையை எடுத்துரைப்பதற்குப் பல சங்கங்கள் நாடெங் கும் தோன்றின. சட்டசபைகளில் இந்த மக்களின் குறை களைத் தீர்ப்பதற்குத் தீர்மானங்கள் கொண்டு வரப் பட்டன. தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி வாய்ப்பு, சுத்தமான குடிநீர் வசதி ஆகியவற்றை அளிக்கவும், மாணவர் விடுதிகளை ஏற்படுத்தவும் வேண்டுகோள் விடப் பட்டது. 1923ஆம் ஆண்டு பம்பாய் சட்டமன்ற மேலவை யில் ஒரு தீர்மானத்தின்மீது பேசுகையில் எஸ்.கே. போலே என்னும் சமூக சீர்திருத்தவாதி பின்வருமாறு குறிப்பிட்

டார்: ''தென்னாப்பிரிக்காவில் நிற அடிப்படையில் இன ஒதுக்கல் கொள்கையை எதிர்க்கும் நாம் முதலில் நம் நாட்டிலுள்ள குறைகளைப் போக்கிக்கொள்ளவேண்டும். நமது நன்மையைக் கருதியும் நாட்டின் நலனைக் கருதியும் தாழ்த்தப்பட்ட மக்களைச் சரிசமமாக நடத்தவேண்டும்.'' இந்த மக்களின் குறைகளைப் போக்காவிட்டால் அவர்கள் கிளர்ந்தெழுந்து போராடத் தொடங்கும் நாள் நெருங்கி விடும் என எச்சரிக்கையும் விடுத்தார். இதுபோன்ற எச்ச ரிக்கைகளை யொட்டித் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக் காகப் பல உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

## ஒதுக்கப்பட்டோர் நல்வாழ்வுச் சங்கம்

இந்த எச்சரிக்கைகள் வீண் போகவில்லை. டாக்டர் அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் போராட சமூக இயக்கமொன்றைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து வந்தார். அதன் விளைவாக 1924, மார்ச் மாதம் 9-ந் தேதியன்று பம்பாயில் நகரப் பெரு மக்களின் கூட்டமொன்றைக் கூட்டினார். தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துரைக்கவும், அவர்களின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளவும் சங்கம் ஒன்று ஏற்படுத்த முடிவு எடுக்கப் பட்டது. நீண்ட விவாதத்திற்குப் பிறகு அந்தச் சங்கத் திற்குப் 'பகிழ்கரித் ஹிதகர்னி சபா' (ஒதுக்கப்பட்டோர் நல்வாழ்வுக் சங்கம்) எனப் பெயரிடப் பெற்று, பதிவு செய்யப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி வசதியை அளித்தல், உணவு விடுதிகள் ஏற்படுத்துதல், பண் பாட்டை வளர்க்க நூல் நிலையங்கள், படிப்பகங்களை அமைத்தல், பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக வேலை வாய்ப்புத் தரும் வகையில் தொழிற்கல்விக் கழகங்கள், விவசாயக் கல்விக் கழகங்கள் ஆகியவற்றை நடத்துதல், தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளையும்

கோரிக்கைகளையும் அரசாங்கத்திற்குத் தெரிவித்தல் ஆகியவை சபையின் நோக்கங்களாக அமைந்தன.

இந்தச் சபைக்குப் பம்பாய் நகரப் பெருமக்கள் ஆதரவளித்ததோடு பலர் பதவிகளை ஏற்று உதவினார்கள். டாக்டர் அம்பேத்கர், இச்சபையில் நிர்வாகக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். இச்சபையின் சார்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்க்கு உணவு விடுதிகள் பல நடத்தப்பட்டன. இலவச உடை, பாடப் புத்தகங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இச் சபையின் உதவிகளைத் தம் இன மக்கள் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்ததை அறிந்து அம்பேத்கர் மகிழ்ந்தார். வழக்கறிஞர் தொழிலில் தமக்குக் கிடைத்த வருவாயை இச்சபையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார்.

## மக்கள் தலைவர்

இந்தச் சபை தொடங்கிய காலத்திலேயே, பல அரசியல் கட்சிகளும், சீர் திருத்த இயக்கங்களும் தீண்டாமையை ஒழிக்கவும், தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவும் முன்வந்தது உண்மையே. எனினும் அனுதாபத்திற்காக மற்றவர்கள் செய்யும் உதவிகளைவிட, தன்மான உணர்வுடனும் சுயமுயற்சியுடனும் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களை உயர்த்திக்கொள்ள பாடுபடுவதே நீண்ட பயனை விளைக்கும் என்பதை டாக்டர் அம்பேத்கர் மக்களுக்கு உணர்த்தினார். இந்த மக்களுக்காக மற்றவர்கள் 'தொண்டு' என்ற அடிப்படையில் பணியாற்றியபோது, அம்பேத்கர் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமை என்று உழைத்தார். இந்த மக்களின் உணர்ச்சிகளையும், நீண்ட நாள் கொடுமைகளையும் தாமே உணர்ந்து அனுபவித்தவர் என்ற காரணத்தால் இவரது உழைப்பு மக்களின் மனத்தைக் கவர்ந்தது. தங்களுக்கெனத் தகுதிமிக்க ஒரு தலைவர் கிடைத்ததை எண்ணி அவரைப் போற்றினார்கள்,

மகாராஷ்டிர மாநிலத்தில் இதனால் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது.

விடுதலைப் போராட்டத் தலைவர்களுக்குச் சிறப்பிடம் அளித்து, டாக்டர் அம்பேத்கரின் பணிகளையும், உயர்வையும் பத்திரிகைகள் மூடி மறைத்து வந்தன. அரசியல் விடுதலையை விட ஒடுக்கப்பட்ட மக்களின் சமுதாய விடுதலைக்கு முதலிடம் அளித்துப் போராடி வந்த அம்பேத்கருக்கு அவை ஆதரவளிக்கத் தயங்கின. இந்தத் தடைகளையும் மீறிக்கொண்டு டாக்டர் அம்பேத்கரின் புகழ் இந்திய நாடெங்கும் பரவியது. அவரைப் பின்பற்றிச் சமூக மறுமலர்ச்சிச் சங்கங்கள் எங்கும் தோன்றின; பல மாநாடுகள் நடைபெற்றன. அவற்றில் பங்குகொண்டு மக்களுக்கு எழுச்சியூட்டினார். ஆரம்ப காலத்தில் இந்தக் கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் ஆதரவளிப்பதற்குத் தயங்கிய மக்கள, அம்பேத்கரின் விடாமுயற்சியால் ஒன்று திரண்டு ஆதரவளித்தார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்குத் தடையாக இருந்த தீய பழக்க வழக்கங்களை விட்டொழிக்க வேண்டுமென்று அறிவுரை கூறினார். சூதாட்டம், குடி போன்ற பழக்கங்களை அறவே வெறுத்து ஒதுக்க வேண்டினார். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிப்பிலும் விளையாட்டிலும் ஈடுபடுவதன் மூலம் உயர்நிலை அடைய முடியும் என்று கருதினார். அதற்காகப் படிப்பகமும், ஆக்கி விளையாட்டுச் சங்கமும் ஏற்பட்டன. கருத்துகளை வளர்ப்பதற்காக மாணவர்களே மாத பத்திரிகையொன்றை நடத்துவதற்கும் உதவினார். இவற்றால் ஒருவருக்கொருவர் உதவுவதன்மூலம் எல்லோரும் உயர முடியும் என்பதை உணர்த்தினார்.

டாக்டர் அம்பேத்கரின் பணிகளுக்காக, அவருக்குப் பம்பாய் மாநில ஆளுநர், பம்பாய்ச் சட்ட மேலவை உறுப்பினர் பதவியை அளித்துப் பெருமை படுத்தினார். இதை அறிந்து மக்கள் மகிழ்ந்தனர். பம்பாய் தாழ்த்தப்

பட்ட வகுப்பு ஆசிரியர்கள் அம்பேத்கருக்குப் பாராட்டுக் கூட்டம் நடத்திப் பணமுடிப்பு அளித்தனர். தமக்களித்த பணமுடிப்பை அம்பேத்கர், ஒதுக்கப்பட்டோர் நல் வாழ்வுச் சங்கத்திற்கே அளித்தார்.

படிப்பும் பதவிகளும் பெற்று உயர்ந்த போதும் டாக்டர் அம்பேத்கர் தொழிலாளர் குடியிருப்பில் சிறிய வீட்டிலேயே வாழ்ந்தார். நாட்டின் பெரிய தலைவர்க ளெல்லாம் அந்த இடத்திற்கே சென்று டாக்டர் அம்பேத் கரைக் கண்டு பேசினார்கள். தம்மை நாடி வந்த மக்க ளுக்கு உண்ண உணவும் தங்க இடமும் அளித்து ஆதரித் தார். அடிக்கடி சிற்றூர்களுக்குச் சென்று, மக்களைச் சந்தித்து அவர்கள் முன்னேறுவதற்கு வழி வகைகளைக் கூறி வந்தார். தீண்டாமைக்கு ஆளான மக்களின் துயர நிலையைக் கண்டு மனம் நொந்தார். அவர்களின் வழக்கு களுக்காக இலவசமாக வாதாடினார். நமது பொதுப் பணிக்கு இடையூறாக இருக்கும் என்பதால் நிரந்தரமான பதவி எதையும் தேடிக் கொள்ளாமல் தொண்டாற் றினார்.

## தணலில் பழுத்த தங்கம்

டாக்டர் அம்பேத்கர் இவ்வாறு பொதுப் பணியில் ஈடுபட்டிருந்த நாளில், மீண்டுமொரு மகளும், மகனும் பிறந்தனர். மகளுக்கு ‘இந்து’ என்றும், மகனுக்கு இராஜ ரத்னா என்றும் பெயரிட்டார். ஏற்கனவே இருந்த எஸ்வந்தோடு மூன்று பிள்ளைகளும் பிழைத்திருப்பார்கள் என்று மகிழ்ந்தார். ஆனால் அவரது மகிழ்ச்சி நீடிக்க வில்லை. இந்துவும் இராஜரத்னாவும் இறந்து போனார் கள் பிறந்த குழந்தைகளில் மூன்று பையன்களையும் ஒரு பெண்ணையும் பறிகொடுத்ததோடு, உடல்நலம் குன்றிப் போன மனைவி இராமாபாயைப் பற்றிய கவலையும் டாக்டர் அம்பேத்கருக்குப் பெருந்துயரத்தை அளித்தது. ஆறுதல் பெறமுடியாமல் துறவியைப்போல நீலவானத்தை

வெறித்துப் பார்த்தவராய் நாட்கள் பலவற்றைக் கழித்தார். நிரந்தரமான வருவாய் வரும் தொழிலை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அவரது பிடிவாத குணத்தால் யாரிடத்திலும் பணிந்து வாழ விரும்பவில்லை. இவற்றால் வந்த துன்பங்களும் துயரங்களும் அவரைப் புடம்போட்டு எடுத்த தங்கமாக மாற்றிவிட்டன.

இந்த நிலையில் தம்மைப் பொதுப்பணிக்கே முழுவது மாக ஆளாக்கிக் கொண்டார், டாக்டர் அம்பேத்கர். எளிமையும் நேர்மையும் மிக்க அந்தத் தலைவரை நாடிச் சென்று ஏழை மக்கள் ஆறுதல் பெற்றார்கள்; நன்றிப் பெருக்கோடு அவரிடம் தங்கள் அன்பைப் பொழிந்தார் கள். அப்பழுக்கற்ற அந்த மக்கள் தலைவனுக்குச் சொந்த நாட்டில் அனாதைகளாகவும், அடிமைகளாகவும் ஆக்கப் பட்டிருந்த மக்கள் தங்கள் இன்னுயிரையும் கொடுப்ப தற்குத் தயாரானார்கள்.

## போராட்டக் களத்தில்... 7

தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்கும் உரிமைப் போருக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட டாக்டர் அம்பேத்கர், மதம், சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லா வகைகளிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் போராடியே சம உரிமையைப் பெற்றாக வேண்டிய நிலை யில் இருப்பதை உணர்ந்தார். போராட்டங்கள் இல்லாமல் இந்த மக்களின் தாழ்வு மனப்பான்மையும் அடிமைத் தன்மையும் மறையாது என்பதை அறிந்தார். எனவே, அதற்கான வாய்ப்பு வந்துற்ற போது அதைப் பயன் படுத்திக் கொள்ள முன் வந்தார்.

பிராமணரல்லாதார் கட்சியின் தலைவரும் சீர்திருத்த வாதியுமான எஸ்.கே.போலே, அரசு சார்புள்ள நிறுவனங்

களால் நிர்வகிக்கப்பட்டு, பொதுமக்களின் வரிப்பணத்தில் நடத்தப்படும் பள்ளிகள், வழக்கு மன்றங்கள், அலுவலகங்கள், மருத்துவமனைகள் போன்ற பொது நிறுவனங்களும் பொதுக் கிணறுகள், பொதுச் சத்திரங்கள், குழாய்கள், போன்றவைகளும் தாழ்த்தப்பட்டோர்களும் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்னும் ஒரு தீர்மானத்தைப் பம்பாய் சட்டமன்ற மேலவையில் 1923ஆம் ஆண்டிலேயே கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தார்.

இந்தத் தீர்மானத்திற்குப் பிறகும் பல நகராட்சிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சம உரிமை அளிக்க மறுத்து வந்தன. எனவே, 1926இல், இவ்வாறு சம உரிமை அளிக்காத நகராட்சிகளுக்கு மானியம் அளிப்பதை நிறுத்த வேண்டும் என்று மீண்டுமொரு தீர்மானத்தை எஸ். கே. போலே கொண்டு வந்தார். இந்தத் தீர்மானத்தின் விளைவாக 'மகாத்' என்னும் நகரத்தின் நகராட்சி, நகராட்சிக்குச் சொந்தமான 'சவுதார்' என்னும் குளத்தில் எல்லா வகுப்பினரும் தண்ணீர் எடுக்கலாம் என்று அறிவித்திருந்தது. ஆனால் அந்த அறிவிப்பு ஏட்டளவிலேயே நின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தக் குளத்தில் தண்ணீர் எடுக்க உயர் சாதிக்காரர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள்.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

1927ஆம் ஆண்டு 'கொலாபா' மாவட்டத் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் இந்தப் பிரச்னை பற்றிப் பேசப்பட்டது. குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். டாக்டர் அம்பேத்கர் அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் தமக்குள்ளே ஏற்றத் தாழ்வு பார்க்காமல் ஒன்றுபட வேண்டிய அவசியத்தையும், தன்மான உணர்வும், சுயமுயற்சியும் இந்த மக்களின் உயர்வுக்கு

அவசியம் என்பதையும் அந்த மாநாட்டில் எடுத்துரைத்தார். மாநாட்டின் முடிவில், மகாத் நகராட்சி அனுமதித்துள்ளபடி 'சவுதார்' குளத்தில் தண்ணீர் எடுத்து உரிமையை நிலைநாட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மாநாடு முடிந்த பின்பு, மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் நான்கு நான்கு பேராக 'சவுதார்' குளத்தை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். ஆயிரமாயிரம் ஆண்டுக் காலமாக அடங்கி ஒடுங்கிச் சிதறிக் கிடந்த மக்களின் அந்த ஊர்வலம் கண் கொள்ளாக் காட்சியாக, வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக விளங்கியது. இந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் அரசியல் உரிமைகளுக்காக, ஆள்வோருக்கு எதிராக இது போன்ற ஊர்வலங்கள் நடத்துவது எளிதாக இருக்கலாம். ஆனால் அறியாமையாலும் மூடத்தனத்தாலும், கூனிக் குறுகிக் கிடந்த மக்கள், சமுதாயச் சமத்துவத்திற்காகத் தங்களை அடிமைப்படுத்தி மகிழ்ந்தவர்களின் கண்ணெதிரிலேயே அணி அணியாகத் திரண்டு, தலை நிமிர்ந்து சென்ற காட்சியை அன்று தான் இந்த நாடு முதன் முதலாகக் கண்டது. அமைதியே உருவாகச் சென்ற அந்த ஊர்வலத்திற்கு டாக்டர் அம்பேத்கர், தலைமை வகித்து நடத்திச் சென்றார். ஒன்றுபட்டால் தங்களுக்கும் உரிமையும், மரியாதையும் கிடைக்கும் என்று அந்த ஊர்வலத்தில் சென்ற மக்கள் உணர்ந்து கொண்டனர்.

மகாத் நகரத் தெருக்களின் வழியே ஒழுங்கு, கட்டுப்பாடு மீறாமல் சென்ற அந்த ஊர்வலம் 'சவுதார்' குளத்தை அடைந்தது. ஆடும் மாடும் அந்தக் குளத்தில் இறங்கிக் கலக்கித் தண்ணீர் குடிப்பதைப் பொறுத்துக் கொண்ட சமுதாயம், இந்த நாட்டின் மண்ணில் பிறந்து மனிதரோடு மனிதராக வாழ்ந்து வருபவர்களுக்கு மறுத்து வந்த உரிமையை டாக்டர் அம்பேத்கர், அந்தக் குளத்துத் தண்ணீரை இரு கைகளாலும் எடுத்துக் குடித்து நிலை நாட்டினார். அவரைப் பின் தொடர்ந்து ஆயிரக்கணக்

கான மக்களும் அந்தக் குளத்துத் தண்ணீரைப் பருகினர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, ஊர்வலத்தில் வந்த மக்கள் அமைதியாகக் கலைந்து, பல்வேறு பாதைகளில் மாநாட்டுப் பந்தலை அடைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சி நடந்து முடிந்த இரண்டு மணி நேரத் திற்குள் சில கயவர்கள், மாநாட்டிற்கு வந்திருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அடுத்து, நகரிலுள்ள வீரேசுவரர் கோயிலில் நுழையப் போகிறார்கள் என்னும் புரளியைப் பரப்பினார்கள். இந்தப் புரளியை மெய்யென்று நம்பிய சாதி இந்துக்கள் ஆவேசம் கொண்டு கொதித்து எழுந்தார் கள். கையில் கம்பும், கட்டையும், கத்தி அரிவாளும் தூக்கிக்கொண்டு திரண்டார்கள். மாநாட்டிலும், நகரிலும் சிதறிக் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கினார்கள். எதிர்பாராத இந்தத் தாக்குதலால் பலருக்கு மண்டை உடைந்தது. சிலருக்கு எலும்பு முறிந்தது குருதி கொட்டக் கொட்டக் கதறிக்கொண்டு ஓடினார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த சோற்று மூட்டைகள் மண்ணில் கலந்தன. கலைந்தோடிய மக்க ளைச் சாதி வெறியர்கள் துரத்திச் சென்று தாக்கினார்கள். குழந்தைகள், பெண்கள் என்றும் பாராமல் அடி உதை விழுந்தது.

மாநாட்டிற்கு வந்திருந்தவர்களுக்கு இந்த நிலைமை புரிய சில மணி நேரம் பிடித்தது. சிதறி இருந்தவர்கள் ஒன்று திரண்டார்கள். அம்பேத்கர் தங்கியிருந்த இடத் திற்குச் சென்று நடந்ததைத் தெரிவித்தார்கள். டாக்டர் அம்பேத்கர் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஆவேசம் உண்டாக்காமல் அனைவரையும் அமைதியாக இருக்கச் செய்தார். மிகத் துணிவோடு நண்பர்கள் சிலருடன் நகரத்திற்குச் சென்று தாக்குதல் நடத்திய கும்பலைச் சந்தித்துப் பேசினார். கோயில் நுழைவு திட்டமெதுவும் இல்லை என்று தெளிவுபடுத்தி னார். தாக்கியவர்களைத் திருப்பித் தாக்காமல், சட்ட

பூர்வமான வழியிலேயே உரிமையை அடைவதற்குப் போராட வேண்டும் என்று மாநாட்டுக்கு வந்திருந்தவர்களுக்கு ஆறுதல் கூறி ஊர்களுக்குத் திருப்பி அனுப்பினார்.

இவ்வாறு, தாழ்த்தப்பட்ட மக்களின் முதல் உரிமைப் போர் முடிவடைந்தது.

ஆனால் சாதி இந்துக்கள் அதோடு ஓய்ந்து விடவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை அதற்குப் பின்னும் பழிவாங்கத் தொடங்கினர். ஊர்களில் வேலை வாய்ப்பைப் பறித்தனர். சாதிக் கட்டுப்பாடுகள் விதித்தனர். சவுதார்குளம் தீட்டுப்பட்டு விட்டதென்று, சடங்குகள் செய்து, சுத்தப்படுத்தினர். இந்த நிகழ்ச்சிகள் அம்பேத்கருக்குக் கடுங்கோபத்தை உண்டாக்கியது. அவர் மனம் வருந்தினார். இந்த அநீதியை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்ய ஏற்பாடு செய்தார். அதில் கலந்து கொள்பவர் பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. சத்தியாக்கிரகத்தை நடத்துவதற்கு முன் மகாத் நகரில் மீண்டுமொரு மாநாடு கூடியது.

இதை அறிந்த சாதி இந்துக்கள் பரபரப்பு அடைந்தார்கள். சவுதார் குளம் தனிப்பட்டவர்க்குச் சொந்தமானதென்றும், தாழ்த்தப்பட்டவர்கள் அதில் தண்ணீர் எடுக்கத் 'தற்காலிகத் தடை' விதித்க வேண்டும் என்றும் கோர்ட்டில் மனுகொடுத்தார்கள். அந்த மனு ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தடையும் விதிக்கப்பட்டது. அதோடு, மாநாடு நடத்த எங்கும் இடமளிக்க மறுத்தார்கள். இறுதியில் ஒரு முஸ்லீம், மாநாட்டிற்கு இடமளித்தார் மாநாட்டிற்குக் கடைகளில் சாமான்கள் விற்க மறுத்தார்கள். சவுதார் குளத்தைச் சுற்றி போலீஸ் காவல் போடப்பட்டது.

சவுதார் குளச் சத்தியாக்கிரக மாநாடு குறித்த நாளில் ஆரம்பமாகியது. மாநாட்டில் சாதி வேறுபாடுகளுக்கும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்கும் காரணமான மனுதர்ம

நூல், தீக்குழியில் போட்டுக் கொளுத்தப்பட்டது. சத்தியாக்கிரகம் செய்வதற்கு நாலாயிரம் பேர்கள், தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருந்தனர். அவர்கள் சத்தியாக்கிரகத்திற்குத் தயாரான நேரத்தில் மாவட்ட அதிகாரிகள் மாநாட்டுப் பந்தலுக்கு வந்து அம்பேத்கருடன் பேச்சு நடத்தினர். சவுதார் குளம் தனிப்பட்டவர்களுக்கு உரியதென்று ஒரு வழக்கு நடந்து வருவதால், அது முடியும் வரை சத்தியாக்கிரகத்தை நிறுத்தி வைக்க யோசனை கூறினார்கள். அம்பேத்கர் அதற்கு இணங்கினார். ஆனாலும் சவுதார் குளத்தைச் சுற்றி மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. அந்த நேரத்தில் சாதி இந்துக்கள் தெருக்களில் காணப்படவில்லை வீடுகளுக்குள் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு பதுங்கிக் கிடந்தார்கள்.

சவுதார் குளத்தைப் பற்றிய வழக்கு மூன்று ஆண்டுக் காலம் நடந்தது. முடிவில் அது பொதுக்குளமே என்று தீர்ப்பளிக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கரின் முதல் போராட்டம் வெற்றி பெற்றது.

# கோயில் நுழைவுப் போராட்டம் 8

டாக்டர் அம்பேத்கர் போராட்டங்களிலும் பொதுப் பணியிலும் ஈடுபட்டதின் காரணமாக நீதிமன்றத்தில் வழக்குகளைக் கவனிக்க நேரமில்லாமற் போயிற்று. அதனால் வருவாய் குறைந்தது. இந்தக் குறையைப் போக்குவதற்காகப் பம்பாய்ச் சட்டக் கல்லூரியில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பம் போட்டு அதனைப் பெற்றார். இது 1928ஆம் ஆண்டில் நடந்தது. இதே ஆண்டில், இந்தியாவில் வலுத்து வந்த விடுதலைப் போராட்டத்தையொட்டி இந்திய மக்களின் நிலையை ஆராய்வதற்குச் சைமன் குழு இந்தியாவிற்கு வந்தது.

இந்தக் குழு வருவதற்கு முன்பே, இந்தியத் தேசியக் காங்கிரஸ், இந்தியாவுக்கு முழு அரசியல் விடுதலை வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. அவ்வாறே டாக்டர் அம்பேத்கர் அவர்களும் மகாத் சத்தியாக்கிரகத்தின்போது இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சமத்துவமுள்ள மனித உரிமைகள் வேண்டும் எனச் சமுதாய விடுதலைக்கு அறைகூவல் விடுத்திருந்தார். நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்றவர்கள் இதனால் டாக்டர் அம்பேத்கரைக் குறை கூறினார்கள்,

இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதற்குப் பதிலாக, குறைகளை அறிந்து சீர்திருத்தம் செய்யவந்த சைமன் குழுவின் வருகையை காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார் கள். இந்தக் குழு சென்ற இடமெல்லாம் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இதனால் தடியடியும், கண்ணீர்ப் புகை வீச்சும் நடந்தன; ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

சைமன் குழுவிற்கு ஒத்துழைப்பு தந்து, கருத்துக் களைத் தெரிவிப்பதற்காக இந்தியாவிலிருந்த ஆங்கில அரசு குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழுவில் டாக்டர் அம்பேத்கர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இதனால் அவரை, ஆங்கில அரசின் கையாள் என்றும் துரோகி என்றும் தூற்றினார்கள்; அதைப்பற்றி டாக்டர் அம்பேத்கர் கவலைப்படவில்லை. இந்திய மக்களின் குறைகளை அறிய வந்திருக்கும் குழுவினிடத்தில், இந்தியா வில் தாழ்த்தப்பட்ட மக்கள் படும் அவதிகளை எடுத்துரைப்பது தம் கடமை என்று கருதினார்.

டாக்டர் அம்பேத்கரைப் போலவே இந்தியாவில் இருந்த பதினெட்டுத் தாழ்த்தப்பட்டோர் சங்கங்கள் சைமன் குழுவிடம் சாட்சியங்கள் அளித்தன. அவற்றுள் பதினாறு குழுக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனி வாக்காளர் தொகுதிகள் வேண்டும் என்று கோரின, சென்னையிலிருந்த ஆதிதிராவிடர் மகாஜன சபை, சட்ட

சபைகளில் தாழ்த்தப்பட்டவர்களை நியமன உறுப்பினர் களாக்க வேண்டும் என்று கோரியது. டாக்டர் அம்பேத்கர் சைமன் குழுவிடம் தமது தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்வுச் சங்கத்தின் சார்பில் தாழ்த்தப்பட்டோருக்குப் பொதுத் தொகுதிகளில் வாக்களிக்கும் உரிமைகளோடு, ஒதுக்கப் பட்ட இடங்களும் வேண்டும் என்று கோரினார். அதோடு இந்தியாவில் தாழ்த்தப்பட்டோரின் இழிநிலைகளை எடுத்துக்காட்டி அவற்றை ஒழிப்பது உடனடித் தேவை என்பது குறித்துக் குறிப்பொன்றும் அளித்தார்.

டாக்டர் அம்பேத்கர், பத்து மாதங்களுக்குப்பின் தமது சட்டக் கல்லூரிப் பேராசிரியர் பதவியிலிருந்து விலகினார்; முழு நேரப் பொதுப் பணியில் ஈடுபட்டார். அவரது செல்வாக்கினால் பம்பாய் அரசாங்கம், தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர் நிலையை அறிந்து நன்மைகள் செய்யக் குழுவொன்றை நியமித்தது. அந்தக் குழுவில் அம்பேத்கரும் இடம் பெற்றார். மாநிலமெங்கும் சென்று நிலைமைகளை அறிந்து, தாழ்த்தப்பட்டோர் கல்வி, சமயம், பொருளாதாரத் துறைகளில் சமத்துவம் பெறுவதற்குரிய வழிவகைகளைத் தெரிவித்து அக்குழு அறிக்கை அளித்தது. அதையொட்டி அரசு, பல நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்தப் பணிகளுக்கிடையே தாழ்த்தப்பட்டோரின் நிலை உயர்வதற்குக் கல்வியறிவே மிக முக்கியம் என உணர்ந்து பகிஷ்கரித் இதகர்ணி சபையைக் கலைத்து விட்டுத் தாழ்த்தப்பட்டோர் கல்விச் சங்கத்தை ஆரம்பித் தார். அதற்கு அரசின் பொருளுதவி கிடைக்கவும் ஏற்பாடு செய்தார். கல்விச் சங்கத்தின் சார்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் பள்ளிகளில் இடம் பெற உதவி செய்ததோடு, மாணவர்கள் தங்கியிருக்க உணவு விடுதி களையும் ஏற்படுத்தினார். இவற்றிற்காக அரசாங்க உதவியோடு பலரிடம் நன்கொடைகளும் வாங்கியளித்

தார். இந்த வகையில் அம்பேத்கரின் பணி நல்ல பயனளித்தது.

## உரிமைப் போர்

1930இல் தீண்டாமை ஒழிப்புப் பணிக்காக அம்பேத்கர், மீண்டுமொரு போராட்டத்தை நடத்த வேண்டியவரானார். அந்த ஆண்டில் இந்திய நாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இரண்டு போராட்டங்கள் நடைபெற்றன. ஒன்று ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துக் காந்தியடிகள் மேற்கொண்ட உப்புச் சத்தியாக்கிரகம். இன்னொன்று டாக்டர் அம்பேத்கர் நடத்திய கோயில் நுழைவு உரிமைச் சத்தியாக்கிரகம். முதலாவது அரசியல் விடுதலைக்காக நடத்தப்பட்டது. இரண்டாவது சமுதாயச் சமத்துவத்திற்காக நடத்தப்பட்டது. உப்புச் சத்தியாக்கிரகத்திற்காகத் தண்டி யாத்திரை தொடங்குவதற்குப் பத்து நாட்களுக்கு முன்பே 'நாசிக்' கோயில் நுழைவுச் சத்தியாக்கிரகம் தொடங்கியது. டாக்டர் அம்பேத்கர் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு மூன்று மாதங்களுக்கு மேலாக முறைப்படி ஏற்பாடுகளை ஒழுங்காகச் செய்து வந்தார். போராட்டத்திற்கு நண்பர்கள் ஆதரவாளர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு தொண்டர்களைத் திரட்டினார். சுமார் 15,000 பேர்கள் தொண்டர்களாகப் பதிவு செய்து கொண்டனர்.

'நாசிக் நகரிலுள்ள காலாராம் கோயிலைத் தாழ்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டிற்குத் திறந்துவிட வேண்டும்' என்று அம்பேத்கர் வேண்டுகோள் விடுத்தார். கோயில் நிர்வாகிகள் இந்தக் கோரிக்கையை ஒப்புக்கொள்ளாததோடு அதை மூடிவிட்டார்கள். கோயிலைச் சுற்றிப காவல் போடப்பட்டது. நிலைமையைச் சந்திப்பதற்காக மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டும், காவல்துறை அதிகாரிகளும் கோயில் அருகிலேயே இருந்தார்கள்.

கோயில் நுழைவுச் சத்தியாக்கிரகத்திற்கு முன்னே டாக்டர் அம்பேத்கர் தலைமையில் மாநாடு ஒன்று நடந்தது. போராட்டம் நடக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. மாநாடு முடிந்து மாலை மூன்று மணிக்குப் போராட்ட வீரர்கள் நான்கு நான்கு பேராக அணிவகுத்து ஊர்வலமாகப் புறப்பட்டனர். நாசிக் நகர வரலாறு காணாத நீண்ட ஊர்வலமாக அது விளங்கியது. ஊர்வலத்திற்கு முன்னே இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற வீரர்கள் பாண்டு வாத்தியம் இசைத்துக் கொண்டு சென்றனர். அவர்களை அடுத்து சாரணர் படை சென்றது. அவர்களுக்குப் பின் 500 பெண் தொண்டர்கள் புரட்சி வீராங்கனைகளாகச் சென்றனர். இறுதியில் உள்ளத்தில் உறுதியும், உடல் திண்மையும் மிக்கவராய், கட்டுப்பாடு குலையாத தொண்டர்கள் வீரநடை போட்டு வந்தனர். கோயில் கதவு பூட்டிக் கிடந்ததால், கோயிலின் வாயில்களில் தொண்டர்கள் பாடல்களைப் பாடிக்கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். 125 ஆண்களும், 25 பெண்களும் தொடர்ந்து இவ்வாறு கோயிலின் நான்கு வாயில்களிலும் சத்தியாக்கிரகம் செய்ய நியமிக்கப்பட்டனர். போராட்டத்திற்குப் பதிவு செய்துகொண்ட 8000 பேர்கள் தங்கள் வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். தினசரி பாட்டும் பஜனையுமாக ஒரு மாதம் கழிந்தது; போலீஸ் காவலும் பலமாக இருந்தது. எவரும் கோயிலுக்குள் போக முடியாமல் மூடிக் கிடந்தது.

அதற்குள் கோயில் திருவிழா நாள் வந்ததால் உயர்சாதி இந்துக்கள் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்தார்கள். இரண்டு பிரிவினரும் சேர்ந்து தேர் இழுப்பது என்று தீர்மானமாயிற்று. அம்பேத்கர் நல்ல உடல் பலமுள்ள இளைஞர்கள் சூழக் கோயில் வாசலில் நின்றார். ஆனால் உயர்சாதியினர் இரகசியமாகத் திட்டமிட்டிருந்தபடி, தேர் இழுக்கும் நேரத்தில், போலீஸ்காரர்கள் சுற்றி இருக்கச்

சத்தியாக்கிரகிகளை அப்புறப்படுத்திவிட்டுத் தேரைத் தாங்கள் மட்டுமே இழுத்துக்கொண்டு ஓடத் தொடங்கினார்கள். தேர், குறுகிய ஒரு தெருவழியே ஓடியது. அந்தத் தெரு முனையில் போலீஸ்காரர்கள் தடையாக இருந்ததால் சத்தியாக்கிரகிகள் எதுவும் செய்ய முடியாமல் துடித்தார்கள். கதிரேகர் என்னும் இளைஞன் துணிந்து போலீஸ் காவலை விலக்கிக்கொண்டு தேர்வடத்தைப் பிடிக்க ஓடினான். அவனைத் தொடர்ந்து கூட்டத்தினரும் ஓடித் தேரைப் பிடித்து விட்டார்கள். அவர்கள்மீது கற்கள் வீசப்பட்டன. கதிரேகர் தாக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தான். இருபிரிவினரும் தாக்கிக் கொண்டார்கள். அம்பேத்கரைக் காப்பதற்கென்று தொண்டர்கள் பிடித்துக் கொண்டிருந்த குடை கிழிந்து துணி பறந்தது. அவருக்கும் அடி விழுந்தது. நகர முழுதும் இந்தக் கலவரம் பரவியது.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்பு, தாழ்த்தப்பட்ட மக்கள் சுற்று வட்டாரங்களில் தாக்கப்பட்டார்கள்; பிள்ளைகள் பள்ளிகளிலிருந்து விரட்டப்பட்டனர். சாலைகளில் நடக்க அனுமதிக்கப்படவில்லை. கடைகளில் அவர்களுக்குச் சாமான்களை விற்க மறுத்தார்கள். இத்தனை கொடுமைகளையும் ஏற்றுக்கொண்டு சத்தியாக்கிரகிகள் ஐந்தாண்டுக்காலம் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். ஓராண்டு முழுதும் அந்தக் கோயில் திறக்கப்படவில்லை. பலருடைய சமரச முயற்சிகள் தோல்வியடைந்தன.

இந்த நிலையில் இலண்டனில் வட்டமேசை மாநாட்டிற்கு வரும்படி டாக்டர் அம்பேத்கருக்கு அழைப்பு வந்தது.

# வட்டமேசை மாநாடுகளில்... 9

இந்திய நாட்டு விடுதலைக்காக நடைபெற்று வந்த போராட்டம் வலுத்துக் கொண்டிருந்ததால் சீர்திருத்தங்களைச் செய்து இந்தியர்களை அமைதியாக்க வந்த சைமன் கமிஷன் இந்திய நாடெங்கும் எதிர்ப்பையே சந்தித்தது. எனினும் அதன் சுற்றுப் பயணத்திற்குப் பின் 1930 மே மாதத்தில் சைமன் கமிஷனின் அறிக்கை வெளியாயிற்று. தேசியத் தலைவர்களின் கருத்துக்களுக்கு எதிராக அந்த அறிக்கை அமைந்திருந்தது எனவே, ஆங்கில அரசிற்கு எதிரான அரசியல் போராட்டங்கள் மேலும் பலம்பெற்று வந்தன.

சைமன் கமிஷனை வரவேற்று, இந்திய நாட்டின் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்ட சபைகளில் இடம் வேண்டும் என்று கோரிக்கை அளித்த டாக்கர் அம்பேத்கர், துரோகி என்று தூற்றப்பட்டார் அல்லவா? ஆனால் உண்மையில் டாக்டர் அம்பேத்கர், நாட்டுப் பற்றில் வேறு எந்தத் தலைவருக்கும் பின் தங்கியவர் அல்லர் என்பதைக் காட்டும் வாய்ப்புகள் பல ஏற்பட்டன.

1930 இல் நாகப்பூரில் நடைபெற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பினர் மாநாட்டிற்குத் தலைமை வகித்து டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய உரை, அவர் கற்பனை வாதி அல்லர் என்பதையும், உலக வரலாற்றையும் இந்திய மக்களின் மனப்போக்கையும் நன்குணர்ந்து தெளிவான அறிவோடு எதிர்காலத்தைக் கணித்துணரும் ஆற்றல் மிக்கவர் என்பதையும் காட்டியது. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டதனால் விளைந்த நன்மைகளைப் பாராட்டிய அதே நேரத்தில் இந்திய மக்களுக்கு ஏற்ற ஆட்சியாக அது தொடர்ந்து இருக்க முடியாது என்பதையும் தெளிவாக்கினார்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள், இந்திய நாட்டில் மக்களாட்சி முறை வெற்றி பெற முடியுமா என்று சந்தேகப்பட்ட நாளில் டாக்டர் அம்பேத்கர் பல இன மக்கள் வாழும் நாடுகள் பலவற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டு மக்கள் விடுதலைக்குத் தகுதியுடையவர் களே என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார். ஆனால் அரசியல், சமூகப் பொருளாதாரத் துறைகளில் அனை வருக்கும் சமவாய்ப்பு இருந்தால்தான், இந்திய நாட்டில் மக்களாட்சி சிறக்க முடியும் என்பதையும் விளக்கிக் கூறினார். இத்துறைகளில் சமவாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொள்ளுமளவுக்குத் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அறிவுரை கூறினார். இந்த மக்கள் சமமாக உயர்வதற்குச் சட்ட சபைகளிலும், வேலை வாய்ப்பு களிலும் இடம் பெறுவதற்குச் சலுகைகள் அளிக்க வேண் டிய கடமை அனைவர்க்கும் இருப்பதையும் எடுத்துரைத் தார். அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் இந்திய மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமாக வாழ் வதே முழு விடுதலை என்பதற்குப் பொருளாகும் என்று ரைத்த அம்பேத்கரின் பேச்சு அவரது நாட்டுப் பற்றுக்கும், எதிர்காலத்தை முன்கூட்டி உணரும் திறனுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். சாதி இந்துக்கள், தமக்கு ஆயிரம் கொடுமைகள் இழைத்த போதும், இந்துமதத்திற்குத் தீங்கு இழைக்க மாட்டேன் என்றும் அந்த மாநாட்டில் அம்பேத்கர் பேசினார்.

இந்திய நாட்டிலிருந்த சமுதாய ஏற்றத்தாழ்வையும், அநீதிகளையும் ஒழிக்க வேண்டும் என்று போராடிய போது அவரைச் சாதி வெறியர் என்றவர்கள் பலர். சிதறுண்டுக் கிடந்த நாட்டை ஒன்றாக்கிச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் தத்துவத்தை அறிமுகப்படுத்திய ஆங்கில ஆட்சியின் நன்மைகளைப் பற்றிப் பேசியபோது அவரை ஆங்கில ஆட்சியாளரின் கைக்கூலி என்று ஏளனம் பேசியவர்கள் பலர். நாகப்பூர்

மாநாட்டில், இந்திய நாட்டு விடுதலையைப் பற்றிப் பேசியதைக் கேட்டு, அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக மாறிவிட்டார் என்றார்கள் பலர். ஆனால் டாக்டர் அம்பேத்கர் அறிவு நிலையில் நின்று இலட்சியத் தெளிவுடன் பேசவல்லவர் என்பதை உணர மறுத்தவர்களே இவர்கள் அனைவரும். எனவே அவரது ஆற்றலையும், பணிகளையும் குறைத்து மதித்து அலட்சியப்படுத்தினார்கள். இவற்றால் துவண்டு போகாதவராய், தமது பணிகளைத் தொடர்ந்து செய்தார் டாக்டர் அம்பேத்கர்.

அவரது தெளிந்த அறிவும், தொண்டு மனமும் வெளிப்படுவதற்கு வாய்ப்பாக அமைந்தன இலண்டனில் நடந்த வட்ட மேசை மாநாடுகள்.

சைமன் குழுவின் வருகையின்போதும், அதற்குப் பின்னரும் இந்தியாவெங்கும் நடைபெற்ற போராட்டங்கள், இந்தியாவை ஆங்கிலேயர் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதை எடுத்துக் காட்டின. வெறும் சீர்திருத்தங்களை மட்டும் செய்தால் போதாது என்று உணர்ந்து, இந்தியாவுக்கு ஏற்ற வகையில் ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கித் தர ஆங்கில அரசு முன் வந்தது இதற்காக இந்திய மக்களின் பிரதிநிதிகள், இங்கிலாந்து நாட்டு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரடங்கிய மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது. அந்த மாநாடு வட்ட மேசை மாநாடு எனப் பட்டது.

மொத்தம் எண்பத்தொன்பது உறுப்பினர்கள் அந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட்டனர். இந்தியாவிலிருந்து இந்து, முஸ்லீம், கிறித்துவ சமுதாயத் தலைவர்களும், சுதேச மன்னர்களும், அறிஞர்களும் எழுபத்து மூன்று பேர்கள் கலந்து கொண்டனர். தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக டாக்டர் அம்பேத்கரும், இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசனும் இடம் பெற்றனர். இந்த மாநாட்டில், காங்கிரஸ் கட்சியின்

தலைவர்கள் ஒத்துழைக்க மறுத்து, கலந்து கொள்ள வில்லை.

வட்டமேசை மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர் கலந்து கொள்ளப் போவதை அறிந்து மகிழ்ச்சியடைந்த மக்கள், ஒரு பெரிய பாராட்டுக் கூட்டத்தை நடத்திப் பணமுடிப்பும் அளித்தனர். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை வலியுறுத்தியும், பாரத நாட்டின் விடுதலையை ஆதரித்தும் வட்டமேசை மாநாட்டில் பேசப்போவதாக அந்தக் கூட்டத்தில் அம்பேத்கர் அறிவித்தார். மக்களின் அன்பையும், நல்லெண்ணத்தையும் சுமந்துகொண்டு இலண்டன் சென்றடைந்த டாக்டர் அம்பேத்கர், அங்கு பல அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களின் அவல வாழ்க்கையை எடுத்துரைத்தார். மாநாட்டில் அவரது கோரிக்கைகளை ஆதரிப்பதாக அவர்கள் உறுதியளித்தனர். அவர்களின் நல்லெண்ணம் அம்பேத்கருக்கு உற்சாகத்தை அளித்தது.

1930ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் நாளில் முதல் வட்ட மேசை மாநாடு கூடியது. மாநாட்டிற்குப் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டனால்டு தலைமை வகித்தார். இந்திய நாட்டில் எதிர்காலத்தில் அமையவேண்டிய ஆட்சி முறையைப் பற்றி முடிவு செய்வதற்கு இந்திய நாட்டு அரசியல் தலைவர்களும், அறிஞர்களும், சமஸ்தான மன்னர்களும், ஆங்கில நாட்டு ஆட்சியாளர்களோடு ஓரிடத்தில் கூடிய வரலாற்றுச் சிறப்பு மிக்க முதல் கூட்டம் அதுவே ஆகும். ஆங்கில நாட்டு மன்னர் மாநாட்டைத் துவக்கி வைத்து இந்தச் சிறப்பினைக் குறிப்பிட்டுப் பேசினார்.

சமஸ்தான மன்னர்களும், பரம்பரைச் சிறப்பு மிக்க மேதைகளும், செல்வாக்குச் சிறப்பு மிக்கவர்களும் ஆடம்பரத்தோடு கூடியிருந்த அந்த மாநாட்டில் உள்ளத்தில் உறுதியும் வாக்கினில் தெளிவும் தன்னம்பிக்கையும்

கொண்ட உருவமாய் டாக்டர் அம்பேத்கர் எழுந்து நின்றார். சமுதாயத்தின் அடித்தளத்தில் வறுமையின் சின்னங்களாய், உரிமைகளைக் கேட்டுப் பெறும் திறனை இழந்துவிட்ட ஊமைகளாய் உலவிக் கொண்டிருந்த மக்களின் பிரதிநிதியாய், வறுமை என்றால் என்னவென்று கேட்கும் கூட்டத்தினர் முன்பு பேசினார். செல்வம், செல்வாக்கு, அறிவாற்றல் மிக்க அந்தக் கூட்டத்தில் அவர் ஒருவரே படிப்பில் உயர்ந்த பட்டங்களைப் பெற்ற வராய் விளங்கினார்.

இங்கிலாந்திலும், பிரான்சு நாட்டிலும் வாழும் மக்கள் தொகை அளவுக்கு இந்திய நாட்டில் ஐந்தில் ஒரு பங்கினராய் அடிமைகளாகப் வாழ்ந்து வரும் மக்களின் இதயக் குமுறலை அந்தக் கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் எடுத்துரைத்தார். பன்னெடுங்காலமாக புனித பாரத பூமியில் நிலவி வந்த சமுதாயக் கொடுமையின் கோர உருவம் அன்றுதான் முதன் முதலில் உலக அரங்கின் முன் தோலுரித்துக் காட்டப்பட்டது.

தமது சமுதாய மக்களின் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததோடு டாக்டர் அம்பேத்கர் நின்றுவிட வில்லை. இந்தியாவில் மக்களால் மக்களுக்காக மக்களின் அரசு அமைவதையே தாழ்த்தப்பட்ட மக்களும் விரும்பு வதாக அவர் அறிவித்தபோது, அவரது நாட்டுப் பற்று பளிச்சிட்டது. இந்தியாவில் மதத்தின் காரணமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை களை நினைவில் கொண்டு, அவர் அப்போது ஆண்டு கொண்டிருந்த ஆங்கிலேயருக்குத் துதிபாடும் துரோகச் செயலைச் செய்யவில்லை. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பிறகும் தாழ்த்தப்பட்டோரின் அவல நிலை நீங்காததை, நீக்குவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளாததைத் துணிவாக எடுத்துக் காட்டி னார். அதைக்கேட்ட ஆங்கில நாட்டுப் பிரதிநிதிகளும் இந்தியப் பிரதிநிதிகளும் ஒருவரையொருவர் பார்த்து

விழிக்கத் தொடங்கினார்கள். சமூகப் பொருளாதாரச் சமத்துவமும், எல்லோர்க்கும் சமநீதியும் கிடைக்கும் வகையில் இந்திய மக்கள் அனைவரின் விருப்பத்தையும் அறிந்த பிறகே அரசியல் சட்டத்தை உருவாக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார். அமைச்சரவையிலும், சட்டசபைகளிலும், அரசாங்க உத்தியோகங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தக்க பிரதிநிதித்துவம் வேண்டும் என்னும் கோரிக்கையும் விடுத்தார்.

அவரது சொல்லாற்றலையும், கருத்துத் தெளிவையும் மாநாட்டில் கூடியிருந்தோர் வியந்து பாராட்டினர். பத்திரிகைகள் அவரது பேச்சை விரிவாக வெளியிட்டுப் புகழ்ந்தன. டாக்டர் அம்பேத்கருக்கு இளமை முதல் உதவியளித்து, வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்து அவர் பட்டங்கள் பல பெறுவதற்கு உதவி புரிந்து வந்த பரோடா மகாராஜா சாயாஜிராவ் கெய்க்வாட் அந்தப் பேச்சை நேரில் கேட்டுப் பூரித்துப் போனார். டாக்டர் அம்பேத்கருக்குச் சிறப்பான விருந்தளித்துப பாராட்டினார். மாநாட்டையொட்டி அமைந்த குழுக்களில் உறுப்பினராக இடம் பெறும் அளவுக்கு டாக்டர் அம்பேத்கரின் செல்வாக்கு உயர்ந்தது

இந்த மாநாட்டில், இந்திய நாட்டு விடுதலையைக் கோரிப் போராட்டம் நடத்தி வந்த காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவில்லையல்லவா? அப்போது அக்கட்சியின் தலைவர்கள் சிறையிலிருந்தனர். இதனால் மாநாட்டின் முடிவுகள் பலன் தராமல் போயின. எனவே, இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்குப் பிரிட்டிஷ் அரசு ஏற்பாடு செய்தது. சிறையில் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் விடுதலை அடைந்தனர்; இந்திய அரசியல் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டது. இரண்டாவது மாநாட்டில் கலந்துகொள்ள காங்கிரஸ் தலைவர்கள் சம்மதித்தனர். காந்தியடிகள் அவர்களுக்குத் தலைவராகச் செல்ல ஏற்பாடாயிற்று. மாநாட்டிற்குச் செல்லு

முன் டாக்டர் அம்பேத்கரைச் சந்தித்துப் பேச அவர் விரும்பினார்.

காந்தியடிகளும் அம்பேத்கரும் முதன் முதலாகச் சந்தித்தனர். டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்டு பணிபுரியும் யாரோ ஒரு பிராமணர் என்றே காந்தியடிகள் நினைத்துக் கொண்டிருந்தார். பாரத நாட்டு விடுதலைப் போராட்டம் காந்தியடிகளைச் சுற்றியே சுழன்று கொண்டிருந்த காலம் அது. அவருக்கு எதிரே நேருக்கு நேராகத் தங்கள் கருத்து மாறுபாட்டை எடுத்துரைக்கும் துணிவு எவருக்கும் அந்த நாளில் இருந்ததில்லை. அப்படிச் செய்தவர்கள் செல்வாக்கிழந்து மறைந்து போகுமளவுக்கு நாட்டு மக்களின் மனப்போக்கும், பத்திரிகைகளின் செல்வாக்கும் அவருக்குத் துணை இருந்தன. சந்திப்பின்போது சிறு வயதிலிருந்தே தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று தாம் நினைத்து வந்திருப்பதாகவும், காங்கிரஸ் இயக்கம் தீண்டாமை ஒழிப்புப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் காந்தியடிகள் கூறினார்.

டாக்டர் அம்பேத்கர், தம் உரையாடலில், சொந்த நாட்டிலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் அந்நியர்களாக நடத்தப்படுவதை உணர்ச்சி மிக்கவராய் எடுத்துக் காட்டினார். தாகம் தீரத் தண்ணீர் குடிப்பதற்கும் தடைகள் இருக்கும் நாட்டையும், நாயினும் கேவலமாக நடத்தப்படும் மதத்தையும் தன்னுடையதென்று தன்மானமுள்ள தாழ்த்தப்பட்ட மகனொருவன் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியாதிருப்பதைச் சுட்டிக் காட்டினார் தம்மைத் தேசத் துரோகி என்று குற்றம் சாட்டுவதற்குரிய வகையில் தமது செயல்கள் அமைவதற்கு இந்த நாட்டின் நிலையே காரணமாக இருப்பதால் அந்தக் குற்றச்சாட்டைப் பற்றி வருத்தப்படவில்லை என்றும், காலாகாலமாகத் தம்முடைய மக்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களை மிதித்து ஒடுக்கி வைத்திருக்கும்

நிலையில் இந்த நாட்டுக்கு எதிராக எத்தகைய துரோகத்தைச் செய்தாலும் அது பாவமாகாது என்றும் எடுத்துரைத்தார். தம்முடைய மனச்சாட்சியை மதித்தே பிறந்த நாட்டிற்குத் தீங்கு செய்யாமலிருப்பதையும் கூறினார். அந்த மனச்சாட்சியின் தூண்டுதலாலேயே நாட்டுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்காமல், தம் மக்களுக்கு மனித உரிமைகளைப் பெற்றுத் தரப் பாடுபடுவதாகவும் விளக்கினார்.

தாழ்த்தப்பட்ட மக்களை, அரசியல் உரிமைகளுக்காக இந்து மதத்திலிருந்து தனிமைப்படுத்துவதைத் தாம் எதிர்ப்பதாகவும், அது தற்கொலைக்குச் சமம் என்றும் காந்தியடிகள் பதிலளித்தார்.

உரையாடலில் வளர்ந்த இந்தக் கருத்து வேறுபாட்டின் காரணமாக மேற்கொண்டு பேச முடியாமல் டாக்டர் அம்பேத்கர் நன்றி தெரிவித்து விடைபெற்றார்.

1931 ஆம் ஆண்டில் இரண்டாவது வட்டமேசை மாநாடு கூட்டப்பட்டது. அதற்கு அழைக்கப்பட்டிருந்த அம்பேத்கருக்கு மாபெரும் வழியனுப்பு விழா நடத்தப் பட்டது மாநாட்டிற்காக இலண்டன் வந்தடைந்த அம்பேத்கர், கடும் சுரத்தினால் அவதிப்பட்டார். காய்ச்சலுடன் வயிற்றுப் போக்கும் குமட்டலும் சேர்ந்து அவரை வாட்டியது. மாநாடு தொடங்கிய போது நலமுற்றிருந்த அம்பேத்கர், உடல்சோர்வு இருந்தாலும் தளராத உழைப்பினால் தாம் சென்ற பணியைச் சிறப்பாக நிறைவேற்றினார்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதில் பயனேதும் இல்லை என்று முடிவு செய்திருந்த காங்கிரஸ் தலைவர்கள் கடைசி நேர ஆலோசனைக்குப் பின் காந்தியடிகள், பண்டித மதன்மோகன் மாளவியா, கவிக்குயில் சரோஜினி நாயுடு ஆகியோரை மாநாட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

மாநாட்டில் பேசிய காந்தியடிகள், காங்கிரஸ் இந்திய மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறது என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தாமே பிரதிநிதி என்றும் கூறினார். அவர் பேச்சை மறுத்து டாக்டர் அம்பேத்கர் பேசுகையில், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாகத் தாமே வந்திருப்பதாகவும் இந்தியாவுக்குச் சுதந்திரத்தைக் கொடுத்து அதிகாரத்தை மாற்றுவதானால் அது ஒரு இயக்கத்தினிடமோ, குறிப்பிட்ட வகுப்பாரிடமோ போய்விடக் கூடாதென்றும் மக்கள் தொகைக்குத் தகுந்தவாறு அதிகாரம் பரவலாகக் கிடைக்க வேண்டும், அதன்படித் தாழ்த்தப்பட்டோருக்குத் தேர்தலில் தனித் தொகுதிகள் வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இம்மாநாட்டில் சிறுபான்மையோர் பிரச்னை பற்றி முடிவு ஏற்படவில்லை.

மாநாடு முடிந்தபிறகு அம்பேத்கர், அமெரிக்கா சென்று தம் பழைய நண்பர்களையும், பேராசிரியர்களையும் கண்டு மகிழ்ந்தார். தாய்நாடு திரும்பிய போது, 24 பெட்டிகள் நிறைய புத்தகங்களையும் கொண்டு வந்தார்.

## பூனா ஒப்பந்தம் 10

1932 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் டாக்டர் அம்பேத்கர் பம்பாய் வந்திறங்கினார். பொழுது புலரும் நேரத்தில் பம்பாய் துறைமுகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்து வரவேற்பளித்தார்கள். அவர் வந்த கப்பலிலேயே முஸ்லீம்களின் தலைவர் மவுலானா சவுகத் அலியும் வந்திருந்தார். டாக்டர் அம்பேத்கரின் இலட்சிய வேட்கையையும், கொண்ட கொள்கையை உறுதியுடன் எடுத்துரைக்கும் துணிவையும் சவுகத் அலி புகழ்ந்துரைத்தார். இரு தலைவர்களையும் ஊர்வலமாக அழைத்துச் சென்று மக்கள் பெருமைப்படுத்தினார்கள்,

அன்று மாலை நடந்த மாபெரும் பாராட்டுக் கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கருக்கு நூற்றுப் பதினான்கு சங்கங்கள் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது. தங்கள் நிலையையும், தேவைகளையும் உலகறியச் செய்த ஒப்பற்ற தலைவருக்கு அளவிலா அன்பையும் நன்றியையும் தெரிவிக்கக் கூடி யிருந்த மக்கள் திரளின் உணர்ச்சியைக் கண்டு டாக்டர் அம்பேத்கர் மனம் நெகிழ்ந்து போனார்; அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்குச் சொற்களில்லாமல் தவித்தார்.

வட்ட மேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைகளை விடாப் பிடியாக வலியுறுத்தியதற்காகத் தம்மைத் 'தேசத் துரோகி' என்று குற்றம் சாற்றியதை மறுத்துப் பேசிய டாக்டர் அம்பேத்கர், எதிர்காலத்தில் வட்டமேசை மாநாட்டின் நிகழ்ச்சிகளையும், பேச்சுக் களையும் ஊன்றிப் படிக்கும் வருங்கால இந்து இளைஞர் கள் தம்முடைய நிலையைப் பாராட்டத் தவற மாட்டார் கள் என நம்பிக்கை தெரிவித்தார். இந்தக் கூட்டத்திற்குப் பிறகு தாழ்த்தப்பட்ட மககளின் பல மாநாடுகளில் அம்பேத்கர் கலந்துகொண்டு பேசினார்.

1932, ஆகஸ்டு 17 ஆம் நாளன்று சட்டசபைகளில் சிறுபான்மையோர் தொகுதிகள் பற்றிய அறிவிப்பைப் பிரிட்டிஷ் பிரதமர் வெளியிட்டார், அதன்படி மாநிலச் சட்டசபைகளில் முஸ்லீம்கள், சீக்கியர்கள், கிறித்தவர்கள் முதலிய சிறுபான்மைச் சமூகத்தினருக்குத் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அத்தொகுதிகள் தனித் தொகுதிகள் எனப்பட்டன. இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் சிறுபான்மையோர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கும் தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. அதோடு பொதுத் தொகுதிகளில் போட்டியிடும் உரிமை யும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அதாவது, தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு இரண்டு வாக்குச் சீட்டுகள் உண் டென்றும், அவற்றுள் ஒன்றின் மூலம் தங்கள் பிரதிநிதி களைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும், மற்றொன்றை

பொதுத் தொகுதியில் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. இதன் வாயிலாக, இந்திய நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களின் அரசியல் உரிமைக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, தங்களின் எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்கள். டாக்டர் அம்பேத்கரின் முயற்சியால் இது விளைந்தது.

இந்த அறிவிப்பைக் காங்கிரஸ் கட்சியினரும், இந்தியப் பத்திரிகையாளர்களும் எதிர்த்தனர். இதனால் பெரும்பான்மை சமூகத்தினர், சிறுபான்மையினராவார்கள் என்று கருதினார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி அளிப்பதன் மூலம், இந்துக்களிடமிருந்து அவர்கள் தனிமைப்பட்டு, என்றைக்கும் தீண்டாதவர்களாகவே இருப்பார்கள் என்று காந்தியடிகள் எதிர்த்தார். தீண்டாமை இந்து மதத்தின் ஓர் அங்கமன்று என்றும், தீண்டாமை இருப்பதைவிட இந்துமதம் அழிவதையே தாம் விரும்புவதாகவும் கூறினார். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி அளிக்கும் முடிவை மாற்றிக் கொள்ளாவிட்டால் தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார். அப்போது அவர், பூனா 'எரவாடா' சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறையிலிருந்து விடுதலையானாலும் தமது உண்ணாவிரதம் தொடரும் என்றும் உறுதியாக இருந்தார். தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி அளிப்பதனால் ஏற்படவிருக்கும் நெடுங்கால விளைவுகளை ஆராய்ந்து பார்க்கும்படியும், உயர்சாதி இந்துக்கள் விழித்தெழுந்து தமது கடமையைச் செய்ய வேண்டும் என்றும் தமது உண்ணாவிரதம் இதற்குத் தூண்டுகோலாக இருக்கட்டும் என்றும் அறிக்கை வெளியிட்டார்.

காந்தியடிகளின் இந்த முடிவு நாட்டு மக்களுக்குப் பேரதிர்ச்சியை அளித்தது! தாழ்த்தப்பட்டவர்க்குத் தனித் தொகுதி அறிவிப்பைத் திரும்பப் பெற வேண்டு

மென்று நாடெங்கும் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறை வேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன. மக்களின் உணர்ச்சிகளைப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எதிரொலித்தன. தனித் தொகுதி வருவதற்குக் காரண மாக இருந்த டாக்டர் அம்பேத்கர்மீது நாட்டு மக்கள் அனைவரின் கண்ணும் கருத்தும் திரும்பின. உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவரைக் கொடியவராகவும், தேசத்துரோகியாகவும் கற்பனை செய்து கொண்டார் கள். இந்திய நாடெங்கும் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை உணர்ந்து அதற்காக அவர்கள் வெட்கப்படவில்லை. தன்மான வாழ்வுக்காக இந்த மக்கள் நடத்தும் வாழ்க் கைப் போராட்டத்தின் பின்னணியையும் உணர்ந்து கொள்ளவில்லை. தங்களின் அரசியல் தலைவரின் உயிருக்கு ஆபத்து வந்துவிடக் கூடாதே என்றே அவர்கள் அஞ்சினர்.

டாக்டர் அம்பேத்கர் ஒத்துக் கொண்டாலேயே தனித் தொகுதி அறிவிப்பைப் பிரிட்டிஷ் அரசாங்கம் திருத்திக் கொள்ள முடியும் என்று உணர்ந்த, இந்து மதத் தலைவர் கள் பண்டித மதன் மோகன் மாளவியா தலைமையில் 1932, செப்டம்பர் 19ஆந் தேதியன்று பம்பாயில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். அந்தக் கூட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கரும் அழைக்கப்பட்டு அதில் கலந்து கொண் டார். இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற தேசியத் தலைவர்களும் பொது வாழ்வில் செல்வாக்கு மிக்கவர்களும் நிரம்பியிருந்த அந்தக் கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தாம் போராடிப் பெற்ற உரிமைகளைப் பற்றித் தெளிவாக எடுத்துரைத்த டாக்டர் அம்பேத்கர், தம்மைத் தூக்கி லிட்டுக் கொன்றாலும் கடமையிலிருந்து பின்வாங்க மாட்டேன் என்று உறுதியாகக் கூறினார். ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் தாழ்த்தப்பட்டவர்களைத் தம்மவர்களாகக் கருத மறுப்பவர்கள், தங்கள் பேராசை

யின் காரணமாக இந்துக்கள் என்ற போர்வையில் பொதுத் தொகுதிகள் மட்டுமே இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் உரிமை அற்றவர்கள் என்பதை எடுத்துரைத்தார். காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்றுவது அனைவருடைய கடமை என்றும் ஆயின் அறிவிக்கப் பட்ட திட்டத்திற்கு மாற்றுத் திட்டம் எதையும் அவர் அறிவிக்காத நிலையில் மேற்கொண்டு பேசுவதில் பயனில்லை என்றும் தம் நிலையை விளக்கினார்.

இந்த நிலையில் சர் தேஜ் பகதூர் சாப்ரு ஒரு திட்டத்தை உருவாக்கினார். அத்திட்டத்தின்படி, தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்குள் ஒவ்வொரு தனித் தொகுதிக்கும் மூன்றுக்குக் குறையாத வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அந்த மூவருள் ஒருவரைத் தாழ்த்தப்பட்ட மக்களும் உயர்சாதி இந்துக் களும் சேர்ந்து பொது வாக்களிப்பின் மூலம் தேர்ந் தெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். நெருங்கிய நண்பர்களுடன் கலந்து யோசித்த பின்பு டாக்டர் அம்பேத்கர் இத்திட்டத்தை ஒப்புக் கொண்டார். ஆனால் பிரிட்டிஷ் பிரதமர் அறிவித்திருந்ததைவிட அதிக இடங்களைத் தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டார். கூடியிருந்த தலைவர்கள் இதை ஏற்றுக் கொண்டனர். இந்த முடிவு ஏற்படுவதற்கு மூன்று நாட்கள் கழிந்தன.

புதிய திட்டத்தைக் காந்தியடிகளுக்குத் தெரிவிக்க எம். ஆர். ஜெயகர், சர். தேஜ் பகதூர் சாப்ரு, பிர்லா, இராஜாஜி, பாபு இராசேந்திர பிரசாத் ஆகிய தலைவர் கள் பூனாவிற்குச் சென்று எரவாடா சிறையை அடைந்த னர். உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த காந்தியடிகள் மிகவும் சோர்ந்திருந்தார்.

1932, செப்டம்பர் 21ஆம் நாள் நண்பகல் நேரத்தில் காந்தியடிகள் சிறையின் வெளி வராண்டாவிற்கு வந்தார்.

அவரோடு பேசிய பின்பு தேஜ் பகதூர் சாப்ரு பூனாவுக்கு வரும்படி டெலிபோன் மூலம் டாக்டர் அம்பேத்கரை அழைத்தார். அன்றைய இரவு இரயிலில் டாக்டர் அம்பேத்கர் பம்பாயிலிருந்து புறப்பட்டு அடுத்த நாள் காலை பூனா போய்ச் சேர்ந்தார். அவரைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலிருந்து எம். சி இராஜாவும் வந்து சேர்ந் தார்.

டாக்டர் இராசேந்திர பிரசாத், இராஜாஜி ஆகியோர் முதலில் காந்தியடிகளுடன் பேச்சு வார்த்தையைத் தொடங்கினர். புதிய திட்டத்தின்படி, தாழ்த்தப்பட்டவர் களுக்கெனத் தனித்தொகுதியில் முதலில் மூன்று பேர் களைத் தேர்ந்தெடுத்துப் பின்னர் பொது வாக்கெடுப்பின் மூலம் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் முறையையே பொதுத் தொகுதிகளிலும் பின்பற்றலாம் என்று காந்தியடிகள் தம் கருத்தை தெரிவித்தார். அன்றைய பகல் நேரத்தில் பல பெருந்தலைவர்கள் காந்தியடிகளைச் சந்தித்து தம் முயற்சிகளை எடுத்துரைத்தனர்.

அன்று மாலை, எம். ஆர். ஜெயகர், பிர்லா, இராஜாஜி ஆகியோர் காந்தியடிகளைச் சந்திக்க டாக்டர் அம்பேத்கரை அழைத்துச் சென்றனர். எரவாடா சிறைக் குள் இருந்த மாமரத்தடியில் காந்தியடிகள் ஒரு கட்டிலில் படுத்திருந்தார். அவர் அருகில் சர்தார் படேலும், சரோஜினி தேவியும் அமர்ந்திருந்தனர். டாக்டர் அம்பேத்கர், காந்தியடிகள் படுத்திருந்த கட்டிலை நெருங்கியபோது அங்கே முழு அமைதி நிலவியது. காந்தி யடிகளின் மோகனப் புன்னகை டாக்டர் அம்பேத்கரின் மனதை நெகிழச் செய்துவிடும் என்று எதிர்பார்த்தனர் சிலர். அம்பேத்கரின் பிடிவாதத்திற்குக் காந்தியடிகளின் உயிர் பலியாகிவிடுமோ என்று பயந்தனர் சிலர். இந்தச் சூழ்நிலையில் டாக்டர் அம்பேத்கர் ஆழ்ந்த சிந்தனையை முகத்தில் தேக்கியவராக மௌனமாக அங்கே நின்றார். காந்தியடிகள் அப்போதிருந்த நிலையும் அதனால் நாட்டு

மக்களிடையே ஏற்பட்டிருந்த கொந்தளிப்பும் அவரது மனதைக் குழைய வைப்பதாக இருந்தது. பிறர் துயரையும், துன்பங்களையும் கண்டு மனம் கலங்கிவிடும் டாக்டர் அம்பேத்கர், அந்த நிலையில் அழுதுவிடுவாரோ என்று தோன்றியது.

ஆனால்...

தலைமுறைத் தலைமுறையாகக் கொடுமைக்கும் அவமானங்களுக்கும் ஆளாகித் தம் துயரங்களை எடுத்துச் சொல்லவும் ஆளில்லாமல் மௌனமாகப் புலம்பிக் கொண்டிருக்கும் மக்களின் அவலக்காட்சி, அவரது கண்ணிலிருந்து மறைந்து விடவில்லை. எனவே, மகாராஷ்டிர மண்ணுக்குரிய மனத்திண்மையோடு தம் கொள்கையே பெரிதென உறுதியாக நின்றார் டாக்டர் அம்பேத்கர்.

பேச்சு வார்த்தை தொடங்கியது. தேஜ் பகதூர் சாப்ரு, தம் திட்டத்தை விளக்கியுரைத்தார். பண்டித மதன மோகன் மாளவியா, சாதி இந்துக்களின் கருத்தை எடுத்துரைத்தார். டாக்டர் அம்பேத்கர் தம் நிலையை விளக்கினார். தன்மானத்தையும் மனித உரிமைகளையும் காத்துக் கொள்ளத் தவிக்கும் சமுதாயத்தின் மெல்லிய குரலாக அது எதிரொலித்தது. அந்தக் குரலில் அடங்கியிருந்த நியாயம் காந்தியடிகளுக்குப் புலப்பட்டது; அந்த உணர்ச்சியை அவரது முகம் காட்டியது.

''டாக்டர், நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், என் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்பதிலும் அக்கறை கொள்வதாகச் சொல்கிறீர்களே'' என்றார் காந்தியடிகள்.

''ஆம், எனது மக்களின் நல உரிமைகளுக்காக நீங்கள் உங்களை முழுதும் ஈடுபடுத்திக் கொண்டால் எங்களின் வீரத் தலைவராகவும் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையில் அப்படிச் சொல்கிறேன், மகாத்மாஜி'' என்றுரைத்தார் டாக்டர் அம்பேத்கர்.

''அப்படியானால், அந்த உயிரைக் காப்பாற்றுவது எப்படி என்பதையும் நீங்கள் அறிவீர்களல்லவா, அதைச் செய்து என் உயிரைக் காப்பாற்றுங்கள். தனித் தொகுதி திட்டத்தினால் உங்கள் மக்களுக்குக் கிடைத்திருக்கும் உரிமையை இழக்க விரும்ப மாட்டீர்கள் என்பதை அறிவேன். நானும் அதை ஏற்றுக் கொள்கிறேன். தனித் தொகுதிகளுக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தைப் போலவே பொதுத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடக்கட்டும். நீங்கள் பிறப்பினால் தாழ்த்தப்பட்டவர்; நானோ அந்த இன மக்களால் தத்து எடுத்துக் கொள்ளப் பட்டவன். நாம் இருவரும் இணை பிரியாதிருப்போம். இந்து சமுதாயம் சிதைந்து சீரழிவதைத் தவிர்க்க எனது உயிரையும் தரத் தயாராக இருக்கின்றேன்'' என்றார் காந்தியடிகள்.

அவரது யோசனையை டாக்டர் அம்பேத்கர் ஏற்றுக் கொண்டார். அவர்களின் உரையாடல் அதோடு முடிந் தது. இந்த உரையாடலைத் தொடர்ந்து, புதிய ஒப்பந்தம் ஒன்றை வரைவதற்குத் தலைவர்கள் முனைந்தனர். அப் போது தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதியை எத்தனை ஆண்டுகளுக்கு வைத்திருப்பது என்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப்பின் தனித் தொகுதி இருப்பதா, வேண்டாமா என்பதை வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார். காந்தியடிகள், இந்தக் காலக்கெடு ஐந்தாவது ஆண்டில் முடிய வேண்டும் என்று உறுதியாகச் சொன்னார். இதற்கு உடன்படாவிட்டால் உண்ணாவிரதத்தை நிறுத்த முடியாது என்றும் தெரிவித்தார். செப்டம்பர் 23-ந் தேதி ஒவ்வொரு மணி நேரமும் இந்த உரையாடலில் இழுபறி யாக ஓடிக்கொண்டிருந்தது. காந்தியடிகள் மிகவும் சோர்ந்து போனார். அவரது உடல்நிலை நெருக்கடியான கட்டத்தை அடைந்தது. பேச்சு வார்த்தை இரவு ஒன்பது

மணிக்கு மீண்டும் தொடங்கியபோது, சிறைச்சாலை டாக்டர்கள், காந்தியடிகள் மேலும் பேசுவது ஆபத்தாக முடிந்துவிடும் என்று தடுத்தனர். எனவே, தலைவர்கள் வெளியே வந்தனர். டாக்டர் அம்பேத்கர் பிடிவாதமாக இருக்கிறார் என்று உடன் வந்த தலைவர்கள் முணுமுணுத்தார்கள்; அவருக்குக் கொலை மிரட்டல் கடிதங்கள் வந்து குவிந்தன.

எந்த முடிவும் ஏற்படாமல் அன்றைய இரவு கழிந்தது. நாட்டு மக்கள் அனைவரும் பூனாவிலிருந்து வரும் செய்திக்காகக் காத்திருந்தனர். அடுத்த நாள் காலை பேச்சு வார்த்தை மீண்டும் தொடங்கியது. மாநிலச் சட்டசபைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு 148 இடங்களை ஒதுக்கி வைப்பதென்றும், மத்திய அரசின் சட்ட சபையில் இந்துக்களுக்காக உள்ள இடங்களில் 10 சதவீதம் தாழ்த்தப்பட்டோருக்குத் தருவதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது, எனினும் தனித் தொகுதியை ஒழிப்பது பற்றிய வாக்கெடுப்பு எடுக்கும் கால அளவில் முடிவு ஏற்படாமல் அன்றைய நாளும் கழிந்து வந்தது. இறுதியாக டாக்டர் அம்பேத்கர், இராஜாஜியுடன் சென்று காந்தியடிகளைச் சந்தித்தார். டாக்டர் அம்பேத்கரின் வாதத்திலுள்ள நியாயத்தை மறுக்க முடியாதென்றாலும் வெறும் சட்ட விதிகளின் மூலம் சமுதாயத்திலுள்ள நோயை வேரறுக்க முடியாது என்று காந்தியடிகள் கூறினார். இந்து மதத்தில் பழங்காலத்தில் படிந்து போயுள்ள பாவக்கறையைப் போக்கிக் கொள்வதற்கு ஒரு கடைசி வாய்ப்பு தரும்படியும், தனித்தொகுதி பற்றிய வாக்கெடுப்புக் காலத்தை ஐந்தாண்டுகளுக்கு மேல் நீட்டிக்க வேண்டாம் என்றும் அம்பேத்கரை வேண்டினார்.

நீண்ட யோசனைக்குப்பின் டாக்டர் அம்பேத்கர், வாக்கெடுப்புப் பற்றிய நிபந்தனை இல்லாமலேயே ஒப்பந்தத்திற்கு உடன்பட்டார். ஒப்பந்தத்தில் டாக்டர்

அம்பேத்கர், எம்.சி. ராஜா, இரட்டைமலை ஸ்ரீனிவாசன், ராஜ்போஜ், எம். ஆர். ஜெயகர், மதன் மோகன் மாளவியா, இராஜாஜி, டாக்டர் இராசேந்திர பிரசாத், தேவதாஸ் காந்தி ஆகியோரும் பிறரும் கையெழுத்திட்டனர். 1932ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் தேதி மாலை 5 மணிக்குக் கையெழுத்தான இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் என்று பெயர் பெற்றது.

ஒப்பந்தத்திற்குப்பின் காந்தியடிகள் தமது உண்ணா விரதத்தை நிறுத்தினார். ஒப்பந்த விவரம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், வைசிராய்க்கும் அனுப்பப்பட்டது. மகிழ்ச்சிப் பெருக்கினால் டாக்டர் அம்பேத்கரும் இராஜாஜியும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தங்கள் பேனாக்களை மாற்றிக் கொண்டனர்.

## புதிய திக்கு நோக்கி... 11

பூனா ஒப்பந்தம் இந்து சமுதாயத்திற்கு ஓர் அதிர்ச்சி வைத்தியமாக அமைந்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமை வேட்கையையும் எழுச்சியையும் இனிமேலும் தடுக்க முடியாது என்று அனைவரும் உணரத் தலைப்பட்டனர். இந்த மக்களின் உரிமைப் போராட்டத்திலிருந்த நியாயத்தையும் உணர்ந்தனர். இவர்களின் சிக்கல்களைத் தீர்த்தாக வேண்டிய கட்டாயத்திற்குள்ளான நிலையில்; தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோயில் நுழைவு பெரு விழாவாக நாடெங்கும் நடத்தப்பட்டது. தாழ்த்தப்பட்டோரும் சாதி இந்துக்களும் சமமாக அமர்ந்து விருந்துண்ணும் நிகழ்ச்சிகளும் நடந்தன. இவற்றைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பெரிதுபடுத்தப்பட்டு வெளியாகி வந்தன.

நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தை டாக்டர் அம்பேத்கர் நடத்தியபோது எதிர்த்தவர்களும், கேரளத்தில் குருவாயூரப்பன் கோயில் நுழைவுக்காகக் கேளப்பன் என்பவர் போராட்டம் நடத்தியபோது ஆதரிக்க மறுத்தவர்களும் இப்போது தாழ்த்தப்பட்டவர்களைப் பஜனைக் குழுவோடு கூட்டம் கூட்டமாக இந்துக் கோயில்களுக்குள் அழைத்துச் சென்றனர்.

காங்கிரஸ் கட்சியினர் தீண்டாமை ஒழிப்புப் பணியைப் பெருமளவில் மேற்கொண்டனர். இதற்காகக் காங்கிரஸ் கட்சியின் ஓர் அங்கமாக இயங்கிவந்த 'தீண்டாமை ஒழிப்பு லீக்' என்னும் அமைப்பு 'ஹரிஜன் சேவக் சங்கம்' எனப் பெயர் மாற்றப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் 'ஹரிஜனங்கள்' எனப்பட்டனர். இவர்களுக்கும் சாதி இந்துக்களுமிடையே நல்லுறவு ஏற்படுவதற்காக 'ஹரிஜன' என்னும் பத்திரிகையைக் காந்தியடிகள் நடத்தினார்.

இவற்றைக் கண்ட டாக்டர் அம்பேத்கர், கோயில் நுழைவு மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மையை உண்டாக்கிவிட முடியாது என்று கருதினார். உண்ண உணவும், உடுக்க உடையும், பிள்ளைகள் படிக்க வசதியும், மருத்துவ உதவிகளும் வேண்டுமானால் பண வருவாய்க்கு வாய்ப்பிருக்க வேண்டும். சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கு 'ஹரிஜன் சேவக் சங்கம்' பாடுபட வேண்டும் என்று எதிர்பார்த்தார். இதற்கு மாறாக, அந்தச் சங்கம் மனிதாபிமான உணர்வு என்ற அளவோடு பாடுபடுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது, அம்பேத்கருக்கு ஏமாற்றத்தை அளித்தது. ஹரிஜன் சேவக் சங்கம், காங்கிரஸ் கட்சியின் ஓர் அங்கமாகவே இருந்துகொண்டு அம்பேத்கரின் அரசியல் இயக்கங்களை எதிர்த்து வந்தது. எனவே, சங்கத்தின் நடவடிக்கைகளை ஆதரிக்க இயலாத நிலைக்கு ஆளானார்.

தீண்டாமை என்பது சாதி அமைப்பின் ஓர் அங்கமே. சாதிகள் இருக்கும்வரை தீண்டாமையும் இருந்தே தீரும். சாதி அமைப்பை ஒழித்தாலொழிய, தீண்டாதாரை மீட்க முடியாது என்று கருதினார் டாக்டர் அம்பேத்கர். இக் கருத்தினால் அன்றைய அரசியல் தலைவர்களிடமிருந்து வேறுபட்டார்.

1927இல் 'மகாத்' குளச் சத்தியாக்கிரகம் நடந்த நாளிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களின் சமய, சமூகப் போராட்டங்கள் எதிர்நீச்சல் போட்டே நடைபெற்று வந்திருந்தன. 'மகாத்' சத்தியாக்கிரகத்திற்குப் பின்னர் நடந்த மாநாடுகளில் இந்து மதத்திற்கு முழுக்குப் போட வேண்டும் என்று தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன.

பூனா ஒப்பந்தத்திற்குப் பின்னர் இந்து மதத்திலிருந்து விலகுவது பற்றி டாக்டர் அம்பேத்கரின் சிந்தனைப் போக்கு தீவிரமடைந்தது.

## எண்ண அலைகள்

இந்தச் சூழ்நிலையில், இந்திய அரசியல் நடவடிக்கை களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. 1932 நவம்பர் மாதத்தில், வட்டமேசை மாநாட்டின் மூன்றாவது கூட்டம் இலண்டனில் கூடியது. அதில் கலந்து கொள்ள அம்பேத்கர் புறப்பட்டார். அவர் புறப்படுவதற்கு முன்னர் வழக்கம் போலவே மக்கள் பெருந்திரளாகக் கூடிப் பாராட்டுக் கூட்டமும், வழியனுப்பு விழாவும் நடத்தினார்கள். இந்தக் கூட்டம், ஆரவாரம், விருந்து உபசரிப்புகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, கப்பல் பயணத்தின்போது அம்பேத்கர் ஓய்வாகச் சிந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. இளமை முதல் அவரது வாழ்க்கை, புயலும் போராட்டமும் நிரம்பியதாகவே இருந்து விட்டது. புயலுக்குப்பின் அமைதி என்பது இயற்கையின்

விதி. இந்த விதி டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கையில் செயல்பட்டதாகத் தெரியவில்லை. நெடுங்காலமாக ஒடுக்கப்பட்டு வந்துள்ள மக்களின் உரிமைகளுக்காக வாதாடுவதைப் பாராட்ட மறுத்துத் தம்மை குறைகூறி வந்த இந்திய அரசியல் மற்றும் பொதுவாழ்விலிருந்த பெரிய மனிதர்களின் போக்கு ஒரு பக்கமும், தமது பணி யினால் விழிப்படைந்த ஏழை, எளிய மக்கள் ஆயிரக் கணக்கில் கூடிப் பாராட்டு, புகழ் மாலை என்று அன்பைப் பொழிந்து, மாவீரனாகத் தம்மை மாற்றிவரும் போக்கு மறு பக்கமும் தொடர்ந்து வருவது அவருக்குச் சலிப்பாக இருந்தது. தமது முழு ஆற்றலையும் அறிவையும் செல விட்டு, தொடர்ந்து போராட வேண்டிய சூழ்நிலை அவரது மன அமைதியைக் கெடுத்தது.

மக்கள் பணிக்குத் தம் உழைப்பைப் பயன்படுத்திக் கொண்டு தமது தொண்டுகளை கடமை உணர்வினால் செய்யப்பட்டவை என்ற அளவோடு ஏற்றுக் கொள்ளும் மிகவும் நாகரிகமான பொது வாழ்வையே அவர் விரும் பினார். ஆதரிப்பு, எதிர்ப்பு ஆரவாரங்கள், தம் கடமை யுணர்வைப் புரிந்து கொள்ளாமலேயே மிகக் கொடியவ ராகவும் இந்திய நாட்டின் விடுதலைக்கு எதிரியாகவும், இந்து மதத்தின் பகைவனாகவும் தம்மைச் சித்திரிக்கும் பத்திரிகைகளின் பிரச்சாரம் ஆகியவை அவருக்கு வெறுப்பை அளித்தன. தமக்கும் தம் குடும்பத்திற்கும் என ஓய்வான வாழ்க்கை எப்போது கிடைக்கும் என்று ஏங்கிய அவருக்கு, எடுத்துக் கொண்ட இலட்சியப் பயணம் முடி வதற்கு நீண்ட நாளாகும் போலிருந்தது.

ஆழ்ந்த யோசனைக்குப் பின், தமது சொந்த இன்ப வாழ்வைத் தியாகம் செய்து, தொடங்கிவிட்ட பெரும் பணியை முடித்தே தீர்வது என்னும் முடிவுக்கு வந்தார்.

கப்பல் பயணத்தின்போது, உடன்சென்ற பயணிகள் அம்பேத்கரின் போராட்டங்களை அறிந்து பாராட்டி

னார்கள். ''இந்திய வரலாற்றில் புதிய பக்கங்களை எழுதும் இளைஞர் இவர்'' என ஐரோப்பியர் ஒருவர், டாக்டர் அம்பேத்கரைச் சுட்டிக் காட்டிச் சொன்னார். அப்போது மாவீரன் நெப்போலியனின் வரலாற்றைப் படிப்பதில் மூழ்கியிருந்தார் அம்பேத்கர். தாம் எப்போதும் புத்தகங்களைப் படிப்பதிலும்; படித்ததைப் பற்றிச் சிந்திப்பதிலுமே காலம் கழித்ததாலும், சமூக அநீதிகளை நினைத்து வெறுப்புற்ற முகத் தோற்றத்தோடு இருந்த தாலும் எல்லோரையும் நண்பர்களாக்கிக் கொள்ள முடிய வில்லையே என்று வருந்தினார்.

## எல்லோரும் வல்லவர்களே

இந்தியாவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிமை களைத் தர மறுப்பவர்கள் சாதி இந்துக்கள் மட்டுமே என்று எண்ணி வந்தவர்க்கு, புதிய உண்மைகள் பல புலப் பட்டன. மாநிலச் சட்டசபைகளில் தாழ்த்தப் பட்டோர்க்குத் தனித் தொகுதியை உருவாக்கிய ஆங்கில ஆட்சியினர், மத்திய அரசாங்கச் சட்டசபையில் அவ்வாறு செய்யாதது ஏமாற்றத்தை அளித்தது. இதனால் பூனா ஒப்பந்தத்தில் இந்த உரிமையை இந்துக்களோடு போராடிப் பெற நேரிட்டது. மத்திய சட்ட சபைகளிலும் வசதியாகத் தனித் தொகுதிகளைப் பெற்றுக் கொண்ட முஸ்லீம்களும், கிறித்தவர்களும் தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைப் போரைப் பற்றிய அக்கறையில்லாதவர்களாக இருந்தார்கள். தங்களுக்குத் தனிச் சலுகைகளும், உரிமை களும் வேண்டுமென்பதில் ஒன்றுபட்டு நின்ற முஸ்லீம்கள் கேட்டதையெல்லாம் பெற்றார்கள். ஆனால் தாழ்த்தப் பட்டவர்களுக்குக் கோயில்களில் நுழையும் உரிமையைக் கூட மறுத்து வந்த இந்துக்கள் சிறுசிறு கூட்டங்களாகச் சிதறிப்போய் பலமற்று இருந்தார்கள். அதுமட்டுமல்ல, கோயில் நுழைவுப் போராட்டத்தை எதிர்ப்பதற்குத் தங்க ளோடு ஒத்துழைக்கும்படி முஸ்லீம்களின் துணையையும் நாடினார்கள் சிலர்.

ஏற்கனவே ஒடுக்கப்பட்டும் வஞ்சிக்கப்பட்டும் கிடந்த மக்களுக்கு எதிராக நாட்டை ஆண்டுக் கொண்டிருந்த ஆங்கிலேயரும், அவர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தவர்களும் ஓரணியில் நின்ற காட்சி மிக்க கொடுமையானதென்று உணர்ந்தார். அரசியல் முனையில் இந்த அணியை எதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்குத் தாம் ஆளாகியிருப்பதும் அவருக்குச் சோர்வை அளித்தது.

இலண்டனில் மூன்றாவது வட்டமேசை மாநாட்டு நிகழ்ச்சிகள் முன்போல், விறுவிறுப்பு இல்லாமல நடந்து முடிந்தன, இந்தியாவில் அரசியல் சீர்திருத்தங்கள் செய்வதற்குச் சிறிய குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்த வேலைகள் முடிந்து பம்பாய்க்குத் திரும்பினார்.

**'இராசகிருகம்'**

அயராத உழைப்பினாலும், பொதுப்பணியினால் ஏற்பட்டிருந்த மனப்போராட்டங்களாலும் டாக்டர் அம்பேத்கரின் உடல் நலன் கெட்டுவந்தது. உடல் நலத்திற்காக மருத்துவம் பார்த்துக் கொள்ளவும் நேரமில்லாமல் கூட்டங்கள், மாநாடுகள் எனக் கலந்து கொண்டார். வீட்டிற்கு வந்து பேசுவோரிடம், தம் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் விடுதலைக்குச் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி மணிக்கணக்கில் பேசினார். இவற்றால் அவருக்கு நரம்புத் தளர்ச்சி நோய் ஏற்பட்டது. அப்போதுதான் அவர் தம் உடல் நலத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்திற்கு ஆளானார். மருத்துவம் செய்து கொள்ளவும், ஓய்வு எடுத்துக் கொள்ளவும் போர்டி, மகாபலேசுவர் ஆகிய இடங்களுக்குச் சென்று தங்கினார். தலையை மொட்டையடித்துக் கொண்டும் உடலில் நீண்ட சட்டை அணிந்து கொண்டும் உலவி வந்தார், அவரது அந்தத் துறவுக் கோலத்தைப் பத்திரிகைகள் படம் பிடித்துப் போட்டன.

கடற்கரையை ஒட்டியிருந்த 'போர்டி' என்னுமிடத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போது, பார்வையாளர்கள் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. கடற்கரைக் காட்சியும் கடற்பரப்பும் அவருக்குப் பரவசம் அளித்தன. ''கடல் என்னை அழைக்கிறது; அதில் போய் நான் குளித்து மகிழவேண்டும்'' என்றார். கடல்பரப்பு, மேலே அமைதியாக இருந்தாலும் உள்ளே அதன் அலைகள் ஓயாதிருந்தது போலவே அவரது மன நிலையும் இருந்தது.

தாம் சேர்த்துப் பாதுகாத்து வந்த புத்தகங்களை அடுக்கி வைப்பதற்கு ஏற்ற வகையில் புதிய வீடு கட்டும் எண்ணம் தோன்றியது. அதற்கான வரைபடங்களைத் தாமே தீட்டினார். அதற்காக, கட்டிடக்கலை பற்றிய புத்தகங்களை வாங்கிப் படித்தார்.

ஓய்வுக்குப் பின்பு அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். மனத்தின் பாரங்கள் குறைந்திருந்தன. உடனடியாகப் போராட்டங்களும், தீர்க்க வேண்டிய சிக்கல்களும் அவர் முன் இல்லை அவரது வாழ்வில் அதுவரை நடந்த நிகழ்ச்சிகளால் தாழ்த்தப்பட்ட மக்கள் சட்டசபைக்குள் செல்லும் உரிமை பெற்றிருந்தனர். அவர்கள் கனவிலும் கண்டறியாத வாய்ப்பிது. அதோடு தாழ்த்தப்பட்டோர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றதனால் அரசியலில் அவர்களை யாரும் புறக்கணித்துவிட முடியாத நிலையை அடைந்தனர் இந்த மாற்றங்கள் அவரது உழைப்பினால், அறிவின் திறத்தினால் விளைந்தவை. இந்த வகையில் மேலும் போராடிப் பெறுவதற்கு எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. எனவே, தமக்கென ஒரு தொழிலைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணினார்; அதற்கான அவசியத்திலும் அவரது குடும்ப நிலையிருந்தது.

சட்டத்துறையில் மேதையாய், மக்களிடையே இயற்கையாக மலர்ந்த தலைவராய், வரலாற்றுச் சிறப்பு

மிக்க நிகழ்ச்சிகளை உருவாக்கியவராய் அரசியல் செல் வாக்குள்ளவராய் உயர்ந்திருந்த டாக்டர் அம்பேத்கர், 1934 இல் பம்பாய் அரசு சட்டக்கல்லூரியில் பகுதி நேரப் பேராசிரியராகப் பணியாற்ற உடன்பட்டார். அவரைப் பேராசிரியராகப் பெற்றதற்கு அந்தச் சட்டக் கல்லூரி பெருமைப்பட்டது. ஆனால் அவரது தகுதிக்கும், திறமைக்கும் இடைவெளி மிகுந்த அந்தப் பணியை நாடி அவரைப் போகச் செய்த இந்த நாட்டின் அவலத்தையும் அது காட்டியது.

சட்டக் கல்லூரியில் பணியாற்றிய அந்த நாளில், தமது நெடுங்காலக் கனவில் உருவாகி வந்த இலட்சிய மாளிகையைக் கட்டத் தொடங்கினார். தமது வாழ்க்கை வசதிக்காக அல்லாமல், நூல்களை அடுக்கி வைப்பதற்கு வசதியாக இருப்பதற்கென்றே ஒரு மாளிகையை உரு வாக்கிய பேரறிவாளர் என ஆசியாக் கண்டத்திலேயே குறிப்பிடத்தக்கவர் என்று போற்றப்பட்டார். உலகப் பெருநகரங்களில் உள்ள நூலகங்களைப் பார்த்தும், கட்டிடக்கலை நூல்களைப் படித்தும் அந்த மாளிகையைத் தம் மனம் நிறைவு பெறும் வரையில் இடித்தும் திருத்தியும் கட்டி முடித்தார். அந்த மாளிகைக்கு ‘இராசகிருகம்’ எனப் பெயரிட்டார்.

இராசகிருகத்தின் மேல்மாடியில் அவரது நூலகம் இடம் பெற்றது; கீழே உறைவிடமாக அமைந்தது. வாழ் நாளெல்லாம் எளியவராகவும், தமது அன்புக் கணவர் நலமுற அடிக்கடி உண்ணாநோன்பு முதலியவற்றை மேற் கொண்டு உடல்நலத்தைக் கெடுத்துக் கொண்டவராகவும் வாழ்ந்த இராமாபாய், அந்த மாளிகையில் மிகுந்த கூச்சத் தோடு வாழ்ந்தார். இராமாபாய் ‘சாகேப்’ என அன்புடன் அழைத்து வந்த டாக்டர் அம்பேத்கர், உண்பதும் உறைவதும், உறங்குவதும் சிந்தனையாளர்

களின் களஞ்சியமாக விளங்கிய தம் நூலகத்திலேயே வைத்துக் கொண்டார்.

பூனா ஒப்பந்தத்தையொட்டி அவருக்கெதிராக இந்த நாட்டில் வளர்ந்திருந்த வெறுப்புணர்ச்சியைக் கண்டு மனம் வருந்திய டாக்டர் அம்பேத்கர். அரசியலில் முழு ஈடுபாடு கொள்ளாமல் தமது தொழிலில் முழு கவனத்தைச் செலுத்தி வந்தார்; அந்த நேரத்தில் இராமாபாயின் உடல் நலக்குறைவும் பொதுப் பணியில் முன்புபோல ஈடுபட அவரை அனுமதிக்கவில்லை. உழைப்பும், வறுமையும், ஏக்கமும் இராமாபாயை ஏற்கனவே உருக்குலைத்திருந்தன. ஆண் பிள்ளைகள் மூவரையும் ஒரு மகளையும் இழந்திருந்த துக்கமும் அவர் மனதை விட்டு அகலவில்லை. பலரிடம் காட்டி மருத்துவம் பார்த்தும் அவர் உடல் நலம் தேறவில்லை.

## குடும்ப விளக்கு

வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, தம் கணவரின் மகிழ்ச்சியே தம் மகிழ்ச்சியென வாழ்ந்தவர் இராமாபாய். பிறருடைய உதவியைப் பெற்று தம் கணவர் வெளிநாடுகளில் படிக்கப் போயிருந்த நாட்களிலெல்லாம், குடும்பத்தின் வறுமை பிறர்க்குத் தெரியாமல் வாழ்ந்து தனிமையில் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தவர். இளமையில் இழந்துவிட்ட இன்ப வாழ்வை,‘இராசகிருகத்தில்’ பெற முடியாமல் தவித்தவர். இறுதி நாட்களில் தமது ஆருயிர்க் கணவர்க்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்பதிலேயே கவனமாக இருந்தவர் அவரது பாதுகாப்பு, அவரது உடல்நலம், அவரது மகிழ்ச்சியென்றே வாழ்ந்து தம்மை எலும்பும் தோலுமாக ஆக்கிக் கொண்டவர் இராமாபாய்.

எப்போதும் மென்மையாக, சில சொற்களையே பேசும் இராமாபாய் தம் இறுதி நாளில் கணவரைக்

கூட்டமென்றும் மாநாடுகள் என்றும் அழைத்துப் போக வந்தவர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளப் போராட வேண்டியிருந்தது. வாழ்விழந்து போயிருந்த மக்களுக்குப் புதுவழியைக் காட்டுவதற்குப் பெரிய கூட்டங்களும், மாநாடுகளும், போராட்டங்களும் தேவையாக இருந்ததை அவர் ஒத்துக் கொள்ள மறுத்தார். ஒருநாள் டாக்டர் அம்பேத்கர், மாநாடு ஒன்றிற்குத் தலைமை வகிக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவரை விட்டுப் பிரிந்திருக்க விரும்பாத இராமாபாய், படுக்கையைச் சுற்றியெடுத்துக் கொண்டு, தாமும் அவருடன் வருவதாகப் புறப்பட்டு விட்டார். கணவரை இழந்துவிடுவோமோ என்ற பயத்தால். தம்மைத் தனியே விட்டுப் போக வேண்டாமென்று மன்றாடினார். அவரை அமைதி படுத்திய பிறகே அம்பேத்கர் புறப்பட முடிந்தது.

## புதிய கோவில்; புதிய தெய்வங்கள்!

கடவுள் பக்தி மிகுந்த இராமாபாய், தாமும் தம் குடும்பத்தினரும் மகிழ்ச்சியுற வேண்டிக்கொண்டு பந்தார்பூர் கோயிலுக்குப் போய்வரவேண்டுமென்று ஆசைப்பட்டார். ஆயிரமாயிரம் பக்தர்களுக்குக் காட்சியளித்து நலம்புரிய பந்தார்பூரில் குடிக்கொண்டிருந்த கடவுளைக் காண்பதற்கு நெருங்க முடியாத நிலையிருப்பதை அவருக்கு அம்பேத்கர் எடுத்துரைத்தார்.

''சாதியின் காரணமாக நாம் காண முடியாதவாறு தடுக்கப்பட்டிருக்கும் பந்தார்பூர் சிலையைப் போய்ப் பார்த்து வருவதால் என்ன பயன்? தூய வாழ்வினால், தன்னலம் கருதாத தொண்டினால் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலையற்றிருக்கும் மனிதருக்கு உழைப்பதன் வாயிலாகப்புதியதொரு பந்தார்பூரை உருவாக்குவோம்'' என்று இராமாபாய்க்கு ஆறுதல் கூறித் தேற்றினார்,

மக்கள் தொண்டிற்குத் தம்மை அளித்துவிட்ட டாக்டர் அம்பேத்கர் புதிய பந்தார்பூர்களை உருவாக்குவதற்குக் கௌதம புத்தர் தமக்கு முன்னோடியாக இருப்பதை உணர்ந்தே அவ்வாறு கூறினார்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனக் கருதி உழைத்த டாக்டர் அம்பேத்கர் ஒரு வாரக்காலம் வெளியூருக்குச் சென்றிருந்து திரும்பிய இரவே 'இராமாபாயின் கடைசி இரவாகியது. இராசகிருகத்தின் சுடர் விளக்கு அணைந்து போயிற்று. பொது வாழ்வில் துரோகத்தையும், பழிகளையும் சந்தித்துத் துன்புற்ற நாளில் கண்ணீரைத் துடைக்கும் கைகளாக விளங்கிய வாழ்க்கைத் துணையை இழந்து டாக்டர் அம்பேத்கர் ஆற்ற முடியாத துயரமுற்றார். சின்னஞ் சிறு குழந்தையைப் போல ஒரு வாரக்காலம் தேம்பியழுதார். அவருக்கு ஆறுதல் சொல்ல எவராலும் முடியவில்லை. துயரமே வடிவாகித் தலையை மொட்டையடித்துக் கொண்டு, காவியுடையோடு எவருடனும் பேசாமல் துறவியைப் போல வாழத்தொடங்கினார் டாக்டர் அம்பேத்கர்.

அவரது இந்தத் துறவு வாழ்வு நெடுநாள் நீடிக்கவில்லை. 1935ஆம் ஆண்டில் பம்பாய் அரசாங்கம் அவரை அரசினர் சட்டக் கல்லூரியின் முதல்வராக்கியது. இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டதன் மூலம் டாக்டர் அம்பேத்கர் முடிவில் உயர்நீதி மன்ற நீதிபதியாகப் போகின்றார் என்றும் அரசியலிலிருந்து விலகிவிடுவார் என்றும் வதந்திகள் எழுந்தன. ஆனால், அவர் கொண்டிருந்த இலட்சியத்திற்குமுன் நீதிபதி பதவி மட்டுமல்ல, வல்லமை மிக்க வைசிராய் பதவியும்கூடச் சமமாக முடியாது என்று முன்னொரு முறை அவர் அறிவித்திருந்ததை வதந்தியைக் கிளப்பியவர்கள் மறந்துவிட்டிருந்தனர்.

## அதிர்ச்சி வைத்தியம்

இந்த நிலையில், இந்திய நாடெங்கும் பெரும்புயலைக் கிளம்பிய இன்னொரு செய்தியும் பரவியது. 'யேலா' என்னுமிடத்தில் ஒரு மாநாடு நடக்க போவதாகவும் அந்த மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர் மதம் மாறப் போவதாகவும் பரவிய அந்தச் செய்தி அனைவர்க்கும் அதிர்ச்சியை அளித்தது. பத்தாண்டுகளுக்கு மேலாகப் போராடியும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடிக்கத் தண்ணீரும், படிக்க வசதியும், முழு மனிதர்களாகத் தலை நிமிர்ந்து வாழும் வாழ்க்கையும் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர், சாதி பேதமற்றதொரு மதத்தில் சேருவதென்ற முடிவுக்கு வந்திருந்ததே அச்செய்திக்கு ஆதாரமாக இருந்தது.

இந்துக்களின் மனம் மாறுவதற்கு வாய்ப்பளிக்கு மாறும் மதமாற்றம் வேண்டாமென்றும் நண்பர்களும், அவருக்கு அறிமுகமானவர்களும் எழுதிய கடிதங்கள் குவிந்தன. ஆனால் அனுபவம் அவரது உள்ளத்தை உறுதி வாய்ந்ததாக ஆக்கிவிட்டிருந்தது. அதிலும் மகாத் குளச் சத்தியாகிரக நிகழ்ச்சி அவருக்குப் பெரிய வருத்தத்தை அளித்தது. மகாத் நகர சவுதார் குளப் போராட்டம் பற்றிய வழக்கு நீண்ட நாட்களாக நடந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக டாக்டர் அம்பேத்கர், அடிக்கடி மகாத் நகருக்குச் சென்று வந்தார்; அந்த வழக்கு ஓயாத போராட்டமாகத் தொடர்ந்தது.

ஒருநாள் மகாத் நகருக்குச் சென்று கொண்டிருந்த போது பெருமழையின் காரணமாக போகும் வழியிலிருந்த ஆற்றில் பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடி கொண் டிருந்தது. அதனைக் கடக்க முடியாமல் ஆற்றோர ஊரி லேயே தங்க நேர்ந்தது. அங்கே தாழ்த்தப்பட்டோர் குடி யிருப்பு எதுவுமில்லை. உயர் சாதியினரோ அவர் தங்க இடமளிக்க மறுத்தனர்; இரண்டு நாட்கள் உண்ண

உணவும் உறக்கமுமின்றித் தவித்தார். இந்த வேதனை யோடு மகாத் நகருக்குப் போய், திரும்பி வந்த டாக்டர் அம்பேத்கர் மனமுடைந்து போனார்; தம்முடைய அறைக்குள் புகுந்து உள்ளே தாழிட்டுக் கொண்டார். வெளியே வர மறுத்தார். நண்பர்களின் மிகுந்த முயற் சிக்கும் வேண்டுகோளுக்கும் பின்பே கதவைத் திறந்தார். அந்த அளவுக்கு அவர் மனம் தீண்டாமைக் கொடுமையை யும் அதனால் அடைந்த அவமானத்தையும் நினைத்து புண்பட்டுப் போயிருந்தது.

இதன் விளைவாகவே, மதமாற்றம் பற்றி அவரது சிந்தனை வேகமாகச் செயல்பட்டது; வெறுப்புணர்ச்சி ஆவேசமாக வெளிப்பட்டது. எனினும் இந்து மதத்தைத் தூய்மையாக்கக் கடைசி வாய்ப்பு வரை பொறுத்திருக்க வேண்டுகோள் விடுத்தார். மதமாற்றம் பற்றி அனைவ ருடனும் கலந்து யோசிக்க 1935ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 'யேலா' என்னுமிடத்தில் ஒரு மாநாடு கூடியது. அந்த மாநாட்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பிரதிநிதிகளும் பிறரும் பத்தாயிரம் பேர் கலந்து கொண் டனர். இந்து மதம், பிராமணீயத்தின் செல்வாக்கினால் சடங்குகளும், சாதிகளும், நிறைந்து சீர்குலைந்து போயிருப்பதைப் பலர் எடுத்துரைத்துப் பேசினர்.

அந்த மாநாட்டில் பேசிய டாக்டர் அம்பேத்கர், தீண் டாமையை எதிர்த்துத் தாம் நடத்தி வந்துள்ள போராட் டங்களை எடுத்துரைத்து, அவற்றினால் பயனேதும் விளையாமல் போனதையும், சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சி மற்றும் அரசியல் முனைகளில் அடிப்படையான மனித உரிமைகளைக் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் பெற முடியாமல் இருப்பதையும் விளக்கினார். சமத்துவத்தை யும் சம உரிமைகளையும் அளிக்கும் மதத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்றும் தம்மைப் பொறுத்தவரையில் இந்துவாகச் சாக விரும்பவில்லையென்றும் முழங்கினார்.

இந்த மாநாட்டிற்குப் பிறகு அவரை எதிர்த்தும் ஆதரித்தும் கடிதங்கள் பல வந்தன. முஸ்லீம் மதத் தலைவர்களும், கிறித்துவ மற்றும் சீக்கியப் பெரியோர் களும் தத்தம் மதங்களில் சேரும்படி அழைப்பு விடுத்தனர். காசி மகா போதிச் சங்கச் செயலாளர், புத்த மதத்தில் சாதி வேறுபாடுகள் கிடையாதாகையால் தாழ்த்தப் பட்டோர் புத்த மதத்தைத் தழுவுவதே பொருத்தம் எனத் தெரிவித்திருந்தார்.

காந்தியடிகள் உட்பட இந்திய அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள்,சீர்திருத்தவாதிகள் ஆகியோர் டாக்டர் அம்பேத்கருக்கு அறிவுரையும் ஆறுதலும் கூறி அறிக்கை வெளியிட்டனர். டாக்டர் அம்பேத்கருடன் உற்ற நண்ப ராகப் பணியாற்றிய ராவ் பகதூர் சீனிவாசன், மதம் மாறுவதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் பலம் குறைந்து விடும் என்றும், இந்த மக்கள் முழு பலத்தையும் திரட்டி உரிமைக்காகப் போராடவேண்டும் என்றும் எடுத் துரைத்தார்! தாழ்த்தப்பட்ட மக்களின் மத மாற்றத்தால் இந்துக்களின் தொகை குறைந்து போகுமானால் வருங் காலத்தில் இந்துஸ்தானத்தின் வரலாற்றை வேறுவித மாகவே எழுத நேரும் என்பதை இந்து சமயச் சீர்திருத்த வாதிகள் டாக்டர் அம்பேத்கரைச் சந்தித்து விளக்கி யுரைத்தனர். இந்தக் கருத்தை ஊன்றி யோசித்த டாக்டர் அம்பேத்கர், இந்தியா இந்துக்களின் நாடாக இருக்க வேண்டுமானால் அதற்காகப் பாடுபட வேண்டியவர்கள் உயர்சாதி இந்துக்களே என்பதைத் தெளிவாக்கினார்.

இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டு வந்த வீர சவர்க்கார், மதங்கள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதையும், அவை பகுத் தறிவுக்கு ஒவ்வாதனவாக இருப்பதையும் சுட்டிக்காட்டி ஒரு மதத்தின் மீதுள்ள வெறுப்பினால் இன்னொரு மதத்தைத் தழுவுதல் அர்த்தமற்றது என்றுரைத்தார். மேலும் பகுத்தறிவுக் கோட்பாடுகளை உடைய மத

மொன்று இருக்குமானால் அந்த மதத்தைத் தழுவுவதே அறிவுடைமை என்றும், முற்போக்கு எண்ணமுள்ள இந்துக்களோடு இணைந்து நின்று போராடி உயர்வதே செய்யத்தக்கது என்றும் கூறினார்.

இந்த வாதங்களைக் கருத்தில் கொண்டு, பகுத்தறிவுக் கோட்பாடுகளை உடைய நெறியில் அமைந்ததாகவும், இந்துக்களின் தொகையைக் குறைத்து இந்திய நாட்டிற்குத் தீங்கு வராத வகையில் பாதுகாப்பதாகவும் உள்ளதொரு மதத்தில் சேருவது பற்றி டாக்டர் அம்பேத்கர் யோசிக்கத் தொடங்கினார்.

மதமாற்றம் பற்றி யோசிக்க மீண்டுமொரு மாநாடு பூனாவில் கூடியது. இம்மாநாட்டிற்குப் பேராசிரியர் என். சிவராஜ் தலைமை வகித்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு மதத்தைவிட்டு இன்னொரு மதத்திற்கு மாறுவது அவசியமில்லையென்றும், ஆரியர் வருகைக்கு முன் இந்த நாட்டில் வழக்கிலிருந்த சமய நெறியைப் பின்பற்றுவதோ அல்லது புதியதொரு மதத்தை உருவாக்கிக் கொள்வதோ தான் சிறந்தது என்றும் தலைவர் சிவராஜ் தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மதமாற்றம் பற்றி பேச்சு எழுந்த பிறகு டாக்டர் அம்பேத்கரைத் தம் மதத்திற்கு வருமாறு பல மதத்தினரும் அழைக்கத் தொடங்கினர். டாக்டர் அம்பேத்கரைச் சந்தித்துச் பேசுவதற்குத் தேடிவந்த முஸ்லீம் தலைவர்களிடமிருந்து தபபிக்க ஒருநாள் முழுதும் காரிலேயே நகரைச் சுற்றிக் கொண்டிருந்த நிகழ்ச்சியும் நடந்தது.

மதமாற்றம் பற்றிய டாக்டர் அம்பேத்கரின் அறிவிப்பு வெறும் வெத்துவேட்டு, மிரட்டல் என்று எண்ணிய இந்துக்களும் இருந்தனர். மதத்தின் அடிப்படையில் நாட்டைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று முஸ்லீம்களும், இந்துக்களும் சிதறுண்டு கிடந்தால் தமது ஆட்சியை நீண்ட காலம் செலுத்திக் கொண்டிருக்கலாம்

என்று ஆங்கிலேயர்களும் கணக்கிட்டுக் கொண்டிருந்த நாளில் தமது அறிவிப்பை ஓர் அதிர்ச்சி வைத்தியமாகக் கருதி இந்துக்கள் மனமாற்றம் அடைவார்கள் என்று எதிர்பார்த்த டாக்டர் அம்பேத்கர் ஏமாற்றமடைந்தார். அதன் விளைவாகப் புத்த மதத்தில் சேருவதற்குத் தாம் விரும்புவதாகவும், ஆனால் அதையும் அவசரப்பட்டுச் செய்யப் போவதில்லை என்றும் அறிவித்தார்.

## பிற பணிகள்

மதமாற்றம் பற்றிய இந்த நடவடிக்கைகளுக்கிடையே பிற பிரச்னைகளையும் டாக்டர் அம்பேத்கர் கவனித்து வந்தார். கொலபா மாவட்டத்தில் நடந்த விவசாயிகள் மாநாட்டிற்குத் தலைமை வகித்து, நில உடைமையாளர் களின் சுயநல அதிகாரத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பம்பாய் சட்டக்கல்லூரியின் முதல்வராகப் பணி யாற்றிக் கொண்டிருந்த டாக்டர் அம்பேத்கர் சட்ட நிபுணராகவும், ஆராய்ச்சி அறிஞராகவும் இருந்ததால் அனைவரின் மதிப்பையும் பெற்றிருந்தார். இப்பதவியில் இருந்தபோது சட்டக் கல்வித் துறையில் மாற்றம் ஏற்பட வேண்டிய அவசியத்தையும், செய்ய வேண்டிய சீர்திருத் தங்களையும் விரிவாக ஆராய்ந்து கட்டுரையொன்று எழுதி வெளியிட்டார்.

டாக்டர் அம்பேத்கர் 1936, ஜனவரி மாதத்தில் இலாகூரில் நடைபெறவிருந்த சாதி ஒழிப்பு மாநாட்டில் தலைமையுரையாற்றுவதற்காக நீண்ட கட்டுரையொன் றைத் தயாரித்திருந்தார், மாநாடு நடக்கவேண்டிய நேரத் தில் மாநாட்டு அமைப்பாளர்கள் டாக்டர் அம்பேத்கரின் உரையிலிருந்து இந்துமத நூல்கள்; வேதங்கள் பற்றிய கருத்துக்களை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண் டனர். தமது உரையிலிருந்து ஒரு அரைப்புள்ளி, கால்

புள்ளியைக்கூட மாற்றமுடியாது என்று மறுத்து மாநாட்டில் பேசாத அந்த உரையை 'சாதி ஒழிப்பு' என்னும் தலைப்பில் புத்தகமாக வெளியிட்டார். இந்தியா வில் சாதி முறையின் தோற்றத்தையும் கொடுமையையும் அந்தப் புத்தகத்தில் விரிவாக எடுத்துரைத்தார். அதை ஆதரித்தும், எதிர்த்தும் பலரும் பேசத் தொடங்கினர். டாக்டர் அம்பேத்கரின் கருத்துக்களை எதிர்த்தவர்கள் கூட சாதி அமைப்பினால் இந்து மதத்திற்கு விளைந்துள்ள தீங்குகளை உணரத் தொடங்கினர்.

## புதிய கட்சி 12

இந்திய நாட்டு விடுதலைக்கான போராட்டம் வலுத்து வந்த நாளிலேயே, சமூகக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற டாக்டர் அம்பேத்கரின் போராட்டமும் நடைபெற்று வந்தது. சமூகப் பிரச்னைகளை வெளி யுலகுக்கு எடுத்துக் காட்டிய இந்தப் போராட்டம் கருத்துப்போராகவே நடைபெற்று வந்தது. இப்போருக்கு டாக்டர் அம்பேத்கரின் அறிவாற்றலும், இலட்சிய உறுதி யுமே அடிப்படையாக இருந்தன. இதற்காக நடை பெற்ற மாநாடுகளில் மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு தெளிவு பெற்று வந்தனர். சாதி அமைப்பிற்கும் தீண்டாமைக்கும் எதிராக மக்களின் சிந்தனை உருவாகி வந்தது. இவற்றை எதிர்த்து ஒழிப்பதால் தெய்வக் குற்றம் எதுவும் ஏற்பட்டுவிடாது என்ற துணிவும் ஏற் பட்டது. இவற்றிற்கு ஆங்கிலக் கல்வியாலும், வெளி யுலகத் தொடர்பினாலும் வளர்ந்து வந்த பகுத்தறிவுக் கொள்கைகளும் ஆதரவாக அமைந்தன.

மதம் மாறுவதைப் பற்றிய டாக்டர் அம்பேத்கரின் அறிவிப்பு பலருடைய கண்களைத் திறந்து வைத்தது; அவருடைய கோபத்தையும், எடுத்துரைத்த வாதத்தி

லிருந்த நியாயத்தையும் உணர்ந்த பலர் ஆங்காங்கே பல் சீர்திருத்தங்களைச் செய்தனர். மைசூர் நவராத்திரி விழாவின்போது நடைபெறும் தசரா ஊர்வலத்தில் தாழ்த்தப்பட்டவர்களும் கலந்து கொள்ளலாமென மைசூர் அரசாங்கம் அறிவித்தது. திருவாங்கூர் சமஸ் தானத்திலிருந்த 1,600 கோயில்கள் தாழ்த்தப்பட்டோரின் வழிபாட்டிற்குத் திறந்து விடப்பட்டன. இந்த முற் போக்கு நடவடிக்கைக்குக் காரணமாக இருந்த திருவாங்கூர் மன்னரையும் அவரது திவானாக இருந்த சர்.சி.பி. இராமசாமி அய்யரையும் பத்திரிகைகள் போற்றிப் புகழ்ந்தன. அந்த நாளில் இந்நிகழ்ச்சிகள் புரட்சிகரமானவை என்று போற்றப்பட்டன. மைசூர், திருவாங்கூர் சமஸ்தானங்களைப் பின்பற்றி இந்தூர், குவாலியர் சமஸ்தானங்களும் கோயில்களில் தாழ்த்தப் பட்டோரை அனுமதிக்க வேண்டும் என்று இந்து மகா சபையினர் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் இந்த மாற்றங்களுக்கெல்லாம் டாக்டர் அம்பேத்கரின் மத மாற்ற எச்சரிக்கையே தூண்டுகோலாக இருந்ததைப் பத்திரிகைகளும், பெரிய மனிதர்களும் மூடி மறைத்தனர்.

இந்த நிகழ்ச்சிகளுக்கிடையில் டாக்டர் அம்பேத்கர், உடல் நலத்தின் பொருட்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று தங்கினார். இலண்டனில் ஒரு வாரக் காலத்தைக் கழித்தார். அவர் ஐரோப்பாவில் இருந்தபோது அவரைப் பற்றி ஒரு வதந்தியைக் கிளப்பினர். டாக்டர் அம்பேத்கர், ஐரோப்பிய பெண்ணைத் திருமணம் செய்து கொண் டிருக்கிறார் என்றும் மணமகளுடன் இந்தியாவுக்கு வருவார் என்றும் செய்திகள் பத்திரிகைகளில் பெரிது படுத்தப்பட்டன. டாக்டர் அம்பேத்கருக்கு இருந்த அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்படியொரு திருமணம் செய்து கொள்வது எளிதாகவே இருந்தது; அதனால் அவரது புகழுக்கு எவ்வகையிலும் குறைவு ஏற்பட்டிருக் கவும் முடியாது. ஆனால் டாக்டர் அம்பேத்கர், தமது பயணம் முடிந்து பம்பாய்க்கு வந்த இறங்கியபோது

அவரையும் அவரது வெள்ளைக்கார மனைவியையும் காண வந்த கூட்டம் ஏமாற்றமடைந்தது. அவர்களிடம் தம்மைப் பற்றிய இந்த வதந்தியை அவர் மறுத்தார்; இரகசியமாகத் திருமணத்தைச் செய்து கொள்ளும் தேவை தமக்கில்லை என்பதைத் தெரிவித்தார். அவரது கவனமெல்லாம் அப்போது நடைபெறவிருந்த மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தலிலேயே இருந்தது.

1935ஆம் ஆண்டில் நிறைவேறிய இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி மாநிலச் சுயாட்சி வழங்குவதற்காக 1937ஆம் ஆண்டில் நாடெங்கும் தேர்தல்கள் நடைபெறு மென அறிவிக்கப்பட்டது. அந்தத் தேர்தலில் ஈடுபட அரசியல் கட்சிகள் ஏற்பாடுகள் செய்யத் தொடங்கின.

டாக்டர் அம்பேத்கர் தம் தோழர்களுடன் தேர்தலில் ஈடுபடுவது பற்றி கலந்து யோசித்தார். அதன் விளை வாக ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள் ஆகியோர் நலனைப் பாதுகாப்பதை நோக்க மாகக் கொண்டு புது கட்சியொன்றைத் தொடங்குவது என்ற முடிவுக்கு வந்தார். அக்கட்சிக்குச் 'சுதந்திரத் தொழிலாளர் கட்சி' என்று பெயரிட்டனர்.

ஐரோப்பியாவிற்குச் சென்று டாக்டர் அம்பேத்கர் திரும்பி வந்தபோது தேர்தலுக்காக இந்தியாவிலிருந்த கட்சிகளெல்லாம் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன. அக்கட்சிகளுள் ஆள்பலமும், பண பலமும் நாட்டு விடுதலைக்காகப் போராட்டங்களை நடத்தித் தியாக முத்திரையும் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி முதலிடம் பெற்றிருந்தது. இந்தக் கட்சியை எதிர்த்துப் போராட வேண்டியவரானார் அம்பேத்கர். மிகக் குறுகிய காலத் தில், புதியதாகத் தோன்றிய தமது கட்சியின் சார்பில் இந்திய நாடெங்கும் வேட்பாளர்களை நிறுத்துவதும் அவர்களுக்காகப் பிரச்சாரம் செய்வதும் இயலாது என்பதை அறிந்தார். எனவே, தமது கட்சியின் சார்பில் பம்பாய் மாநிலச் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு மட்டும்

போட்டியிடுவதென முடிவெடுத்துப் பதினேழு வேட்பாளர்களை நிறுத்தினார். இவர்களைத் தவிர வேறு சிறு கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களையும் ஆதரித்தார். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் போபட்கர் என்பவர்.

டாக்டர் அம்பேத்கருக்கு எதிராகப் பலவங்கர் என்னும் புகழ் பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரரர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டார். டாக்டர் அம்பேத்கரையும், அவர் தீவிரமாக ஆதரித்த போபட்கரையும் எப்படியும் வீழ்த்தியே தீருவது என்று காங்கிரஸ் கட்சி முழுப் பலத்துடனும் மோதியது.

தேர்தல் முடிவில் டாக்டர் அம்பேத்கர் வெற்றி பெற்றார். சுதந்திரத் தொழிலாளர் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பதினேழு வேட்பாளர்களில் பதினைந்து பேர் வெற்றி பெற்றனர். ஆனால், போபட்கர் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இந்த வெற்றியோடு டாக்டர் அம்பேத்கருக்கு இன்னொரு வெற்றிச் செய்தியும் வந்தடைந்தது. மகாத் நகரச் சவுதார் குளத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் எடுப்பது பற்றிய வழக்கு நீண்ட நாளாக நடந்து வந்ததல்லவா? அந்த வழக்கில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சாதகமாகப் பம்பாய் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்த செய்தி அனைவருக்கும் மகிழ்ச்சியளித்தது. குளத்தில் தண்ணீர் எடுக்கும் உரிமைக்காகப் போராட்டமும் வழக்கும் நடத்த வேண்டிய நிலை இருந்ததையும் நாட்டு மக்கள் உணர முடிந்தது.

தேர்தல் வெற்றிக்குப்பின் காங்கிரஸ் கட்சியினர் பெரும்பான்மையினராக இருந்ததால் பம்பாய் மாநிலத்தில் மந்திரி சபையை அமைத்தனர். டாக்டர் அம்பேத்கரும், ஜம்னாதாஸ் மேத்தாவும் எதிர் கட்சியின் முக்கிய தலைவர்களாக விளங்கி அரிய தொண்டாற்றினர். விவாதங்களின்போது அவர்கள் ஆற்றிய உரைகளுக்கு

நல்ல மதிப்பிருந்தது; அனுபவமும் அறிவும் அவர்களின் சட்டமன்றப் பணிகளுக்கு உறுதுணையாக அமைந்தன.

தாழ்த்தப்பட்ட மக்களை 'ஹரிஜனங்கள்' என்று குறிப்பிடுவதை எதிர்த்து அவர் நடத்திய கருத்துப்போர் குறிப்பிடத்தக்கச் சிறப்புடையது. சட்டப் பேரவையில் விவாதத்திற்கு வந்த ஒரு மசோதாவில் 'ஹரிஜனங்கள்' என்று குறித்திருப்பதைக் கண்ட டாக்டர் அம்பேத்கர், இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிப் பெயரிட்டு அழைப்பதன் மூலம் மற்ற மக்களிடமிருந்து அவர்களைப் பிரித்து வைப்பதை எதிர்ப்பதாகக் கூறினார். கடவுளின் மக்கள் என்ற பொருள் தரும் 'ஹரிஜன்' என்ற சொல் இனிமையாக இருந்தாலும், அவர்களை என்றும் தனிமைப் படுத்தவே அது பயன்படும் என்றும் எடுத்துக் காட்டி அந்தச் சொல்லுக்குத் திருத்தம் கொண்டு வந்தார் விவாதத்திற்குப்பின் அவரது திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டுத் தோற்றது. இதற்காக டாக்டர் அம்பேத்கர் தம் கட்சி உறுப்பினர்களோடு வெளி நடப்புச் செய்தார்.

# தொழிலாளர்களின் தோழன் 13

பம்பாய் சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்த போதும் பின்னர் வைசிராய் நிர்வாகச் சபையில் தொழிலாளர் நல அமைச்சரான போதும் தொழிலாளர் களின் நலனுக்காக டாக்டர் அம்பேத்கர் அருந்தொண் டாற்றினார். சட்டப்பேரவையில் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் விவசாயத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காகப் பரிந்து பேசினார் நிலமில்லா விவசாயி கள், குத்தகைக்காரர்கள் ஆகியோர் பெருநிலச் சொந்த காரர்களிடம் அடிமைகளைப் போல வாழ்வதை ஒழிப் பதற்காக ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனால்

அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டது. அதை எதிர்த்துத் தம் கட்சி உறுப்பினர்களுடன் வெளிநடப்புச் செய்தார். இந்திய நாட்டுச் சட்டப் பேரவை ஒன்றில் குத்தகை விவசாயிகளின் நலனுக்காக, ஒரு மசோதாவை முதன் முதலாக கொண்டு வந்தவர் டாக்டர் அம்பேத்கர் அவர்களே ஆவார். தேர்தலுக்குப்பின் மகாராஷ்டர மாநிலத்தில் பல இடங்களுக்கும் பயணம் செய்து, பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் என நடந்த பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றிய டாக்டர் அம்பேத்கர் இந்திய நாட்டில் ஏழை, எளிய மக்கள் எல்லா வகையிலும் சமவாய்ப்பும், சமத்துவமும் பெற வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். பம்பாயில் விவசாயி களின் பேரணி ஒன்றிற்கு ஏற்பாடு செய்து, அவர்களின் கோரிக்கைகளை மாநில முதல்வருக்கு அளித்தார், விவசாயத் தொழிலாளர்க்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்தல், நிலக்குத்தகை நிலுவையைத் தள்ளுபடி செய்தல், நீர்ப்பாசனக்கட்டணத்தைப் பாதி யாக குறைத்தல் முதலியன அக்கோரிக்கைகளில் அடங்கி யிருந்தன.

பேரணிக்குப் பின்னர் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் ஏழைத் தொழிலாளர்களும், உழவர்களும் தங்களின் வறுமைக்குக் காரணமாக இருப்பனவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டினார். சாதி, மத வேறுபாடுகளை விட்டொழித்துத் தொழிலாளரும் உழவர்களும் ஓரணியில் திரள வேண்டிய அவசியத்தை யும், தொழிலாளர்களின் தோழர்களாக இருப்போரையே சட்ட மன்றங்களுக்குத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும் என்பதையும் விரிவாக எடுத்துப் பேசினார். அவர் பேச்சில் பொதுவுடைமைக் கருத்துக்கள் சுடர் விட்டு ஒளிர்ந்ததைக் கண்ட அவரது எதிர்ப்பாளர்கள், தொழிலாளர்கள், உழவர்கள் நிலமில்லதோர் ஆகியோரின் புயங்கரத் தலைவராகி விடுவாரே என்று பயந்தனர்.

விவசாயிகளின் உரிமைகளுக்காகப் போராடியதைப் போலவே ஆலைத் தொழிலாளர்கள், இரயில்வே தொழிலாளர்கள் ஆகியோர் நலனுக்காகவும் அவர் பாடுபட்டார். 1938 ஆம் ஆண்டில் மன்மாட் என்னு மிடத்தில் நடந்த இரயில்வே தொழிலாளர் மாநாட்டில் இருபதாயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். அதில் பேசிய டாக்டர் அம்பேத்கர் இளமைக் கால முதல் தொழிலாளர்களுடன் வாழ்ந்த தமது அனுபவத்தையும் அவர்களின் துயரத்திற்கும் வீழ்ச்சிக்கும் காரணங்களாகத் தாம் கண்டவற்றையும் விளக்கியுரைத்தார். இந்தியத் தொழிலாளர்கள் தமது சமூக ஏற்றத்தாழ்வையும், அநீதி களையும் எதிர்த்துப் போராடி வந்த கட்டத்தைக் கடந்து பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கப் போராட முன் வந்திருக்கும் வளர்ச்சியை எடுத்துரைத்தார். சமூகச் சமத்துவத்திற்கும், சகோதரத்துவத்திற்கும் தடையாக உள்ள பிராமணீயமும், முதலாளித்துவமும் உழைக்கும் வர்க்கத்தின் இருபெரும் எதிரிகளாக இருப்பதாகக் கூறினார். பிராமணீயம் சமூகச் சமத்துவத்திற்கு மட்டுமல்லாமல், எல்லோருக்கும் சமமான பொருளாதார வாய்ப்புகள் கிடைப்பதற்கும் தடையாக இருப்பதைச் சுட்டிக் காட்டினார். அவ்வாறே ஆங்கில ஏகாதிபத்தியம் நாட்டை விட்டு நீங்கியதும் நிலவுடைமையாளர்கள், பெரும் பணக்காரர்கள், ஆலை முதலாளிகள் ஆகியோரை எதிர்த்து இந்தியத் தொழிலாளர்கள் போராட வேண்டிருக்கும் என்றுரைத்து அந்தப் போராட்டத்திற்குத் தொழிலாளர்கள் தமக்கென ஒன்றுபட்டதோர் இயக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கூறினார்.

சாதி வேற்றுமையால் செய்யும் தொழில்கள் வேறு படுவதைக் குறிப்பிட்டு. தீண்டப்படாதாருக்கு வேலை வாய்ப்புகளில் உள்ள தடைகளும், துன்பங்களும் கணக் கற்றவை என்பதை எடுத்துரைத்தார். பஞ்சாலை களிலும், இரயில்வேக்களிலும் சாதாரண வேலைகளுக்கே

இந்த மக்களுக்கு வாய்ப்பிருப்பதையும், உயிர்சாதியினரின் வசதிக்காக இவர்களின் வேலைகளில் வேறுபாடுகள் ஏற்படுவதையும், உழைப்பு போற்றப்படாமல் போவதையும் குறித்து வருந்தினார். இரயில்வே நிலையங்களில் மூட்டைத் தூக்கும் கூலிகளை இரயில்வே நிலைய அதிகாரிகள் வீட்டு வேலைகளுக்கும் பயன்படுத்திக் கொள்வதால், உயர்சாதியினரையே கூலிகளாக அமர்த்திக் கொள்ளும் நிலையை எடுத்துக் காட்டிச் சாதாரண உழைப்பாளர்களிடையேயும் வேற்றுமைகளை உருவாக்குவதைக் கண்டித்தார். இந்த நாட்டில் தொழிலாளர்கள் ஒன்று பட முடியாமல் இருப்பதற்கும், உரிமைகளைப் பெறத் தடையாக இருப்பதற்கும் சாதி அமைப்பு காரணமாக இருப்பதை மறந்துவிட்டுப் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்பி விட முடியாது என்பதைத் தெளிவு படுத்தினார்.

அதே மாநாட்டு அரங்கில் நடைபெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பு இளைஞர் மாநாட்டிலும் டாக்டர் அம்பேத்கர் உரையாற்றினார். இளைஞர்கள் சிறந்ததோர் இலட்சியத்தை முன்வைத்து, அதை அடைவதற்குப் பாடுபட வேண்டும் என்றும், நாட்டு நலனுக்கோ தனிப்பட்ட உயர்வுக்கோ உரிய இலட்சியத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டபின், சோர்வுகள் பல வந்தாலும் தளராத உறுதியுடன் உழைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். உயர்ந்த இலட்சியங்களையும் ஒப்பற்ற சாதனைகளையும் கடின உழைப்பினாலேயே வெற்றியாக்கிக் கொண்டவர்களின் வாழ்க்கையில் வந்துற்ற சோதனைகளையும், துன்பங்களையும் எடுத்துக் காட்டினார். ஒரு நேரத்தில் ஒரே நோக்கத்தை முன் வைத்துப் பாடுபட வேண்டும் என்றும் மனிதன் வாழ்வதற்கே உண்ணவேண்டும் என்றும், வாழ்க்கை என்பது சமூக நலனுக்கு உழைப்பதாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார்.

இளைஞர்கள் கல்வியும் ஒழுக்கமும் பெற்று உயர வேண்டும் என்றுரைத்த டாக்டர் அம்பேத்கர், கல்வியை விட ஒழுக்கத்திற்கே தாம் முதலிடம் தருவதாகக் கூறினார். படித்தவன் ஒழுக்கமும், பணிவும் இல்லாதவனாக இருந்தால் அவன் விலங்குகளைவிட ஆபத்தானவன் என்றார், இந்த மாநாடு வாய்ப்பும் வசதியும் இருந்தால் தாழ்த்தப்பட்டவர்களும் மக்களை ஒன்று திரட்ட முடியும் என்பதைக் காட்டியது. மாநாட்டின் வெற்றி டாக்டர் அம்பேத்கருக்கு மகிழ்ச்சியை அளித்தது.

டாக்டர் அம்பேத்கர், தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனியாக ஒரு கட்சியை அமைத்துக் கொள்ள முதலில் எண்ணினார். ஆனால் அது காலத்திற்கு ஒவ்வாதது என்று உணர்ந்து அரசியலில் எல்லோரும் நண்பர்களாக ஒத்துழைத்துப் பாடுபட வேண்டும் என்பதற்காகத் தம் கட்சிக்குச் சுதந்திரத் தொழிலாளர் கட்சி எனப் பெயரிட்டார். தொழிலாளர் நலனுக்காகவே பல திட்டங்களை வகுத்து நிறைவேற்றும் நோக்கத்துடன் கட்சியின் பெயரில் 'தொழிலாளர்' என்னும் சொல் இருக்கவேண்டும் என்று விரும்பி அமைத்தார்.

பம்பாய் சட்டப்பேரவையில் தொழிலாளர் பற்றிய மசோதாக்களின்மீது டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய உரைகள் குறிப்பிடத்தக்கவை. ஆழமாகச் சிந்தித்து முன்னதாகவே தயாரித்த அவரது பேச்சுக்கள் கேட்டவர் தம் கண்களைத் திறந்து வைத்தன. காங்கிரஸ் கட்சிக்கும் அதன் செயல் திட்டங்களுக்கும் டாக்டர் அம்பேத்கர் எப்போதும் எதிர்ப்பு தெரிவித்து வந்ததால், தொழிலாளருக்காக அவர் பரிந்து பேசிய உரைகளும் ஆற்றிய தொண்டுகளும் போற்றப்படாமல் மறைக்கப்பட்டன. தாழ்த்தப்பட்ட மக்கள், வெறும் உணர்ச்சி வசப்பட்டவர்களாய், ஒற்றுமையில்லாதவர்களாகவும் முறையாக இயக்கத்தை நடத்தத் தெரியாதவர்களாகவும் இருந்ததால்

சுதந்திரத் தொழிலாளர் கட்சி ஓங்கி வளர முடியாமற் போயிற்று.

1938இல் பம்பாய் அரசு கொண்டு வந்த தொழிலாளர் தகராறு பற்றிய மசோதாவை எதிர்த்து, எதிர்க் கட்சிகள் வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தன. டாக்டர் அம்பேத்கரும், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் எஸ். ஏ. டாங்கேயும் அதில் பங்கு கொண்டனர். காங்கிரஸ் கட்சியினர் இவர்கள் ஒன்று சேர்வதை எதிர்த்தனர். சாதி வெறியரான அம்பேத்கருடன் கம்யூனிஸ்டுகள் சேர்ந்து கொண்டது விந்தையானது என்று கண்டித்தனர். இந்தப் பிரச்சாரத்தை முறியடித்து அன்றைய வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக முடித்துக் காட்டினார் அம்பேத்கர். தொழிலாளர்களிடையே அவருக்கு இருந்த செல்வாக்கை அந்தப் போராட்டம் எடுத்துக் காட்டியது. இந்தப் போராட்டம் பின்னர் அகில இந்திய அளவில் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளவும், அவற்றைத் தீர்ப்பதற்கு வழி வகைகளைக் காணவும் டாக்டர் அம்பேத்கருக்கு உதவியது.

## உலகப் போரும் அம்பேத்கர் நிலையும்

1939, செப்டம்பர் முதல் தேதியன்று இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமானது. இங்கிலாந்தும் இப்போரில் ஈடுபட்டது ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டுக் கொண்டிருந்ததால், இந்தியாவும் இங்கிலாந்துக்கு ஆதரவாகப் போரில் கலந்து கொண்டது இதனைக் காங்கிரஸ் கட்சியினர் எதிர்த்தார்கள். இந்தியாவுக்கு விடுதலை அளிக்கும்படி வலியுறுத்துவதற்கு இதுவே தக்க நேரம் என்று அவர்கள் கருதினர். இந்தக் கருத்தை மிதவாதத் தலைவர்கள் மறுத்து, ஆங்கில அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினார்கள். டாக்டர் அம்பேத்கரும் இக்கருத்தையே ஏற்று இந்திய அரசாங்கத்தின் யுத்த முயற்சிக்கு ஆதரவு கொடுத்தார். போர்நெருக்கடி மிகுந்த

சமயத்தில் வெள்ளையனை விரட்டுவதாகக் கூறி வேறொரு அன்னியனுக்கு அடிமையாகி விடக்கூடாது என்று அவர் கூறினார்.

போர் நடிவடிக்கைகளில் ஒத்துழைப்பு தருமாறும், போர் முடிந்ததும் அரசியல் கட்சிகளுடன் கலந்து யோசித்து இந்திய அரசு சட்டம் திருத்தப்படும் என்றும், சிறுபான்மையோர் நலனுக்கு பாதகம் வராத வகையில் பார்த்துக் கொள்ளப்படும் என்றும் வைசிராய் அறிக்கை வெளியிட்டார். போர்க் காலத்தில் ஆலோசனை கூறுவதற்காக அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றும் அமைக்கப்படும் என்று அந்த அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

யுத்தத்தில் இங்கிலாந்து நாட்டை ஆதரிப்பது, அதன் ஏகாதிபத்தியக் கொள்கைக்கே ஆதரவளிப்பதாக அமையுமென்று தெரிவித்து மாநிலங்களில் அமைந்திருந்த காங்கிரஸ் அரசுகள் இராஜினாமா செய்தன. இராஜினாமா செய்வதை யொட்டி மாநிலச் சட்டப் பேரவைகளில் தங்கள் நிலையை விளக்கித் தீர்மானங்களைக் கொண்டு வந்தன. பம்பாய் மாநில சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டு வந்து டாக்டர் அம்பேத்கர் பேசிய போது தமது நிலையைத் தெளிவுபடுத்திப் பேசினார். இந்திய நாட்டின் நலன், தமது சொந்த நலன் ஆகிய இரண்டிற்குமிடையே போராட்டம் வரும்போது சொந்த நலனைவிட நாட்டு நலனையே தாம் பெரிதாக மதிப்பவர் என்றும் சொந்த நன்மைகளுக்காகத் தாம் போராடவில்லை என்றும், இலண்டன் வட்ட மேசை மாநாடுகளில் இந்திய நாட்டின் நன்மைக்காகவே பரிந்து வாதிட்டபோது ஆங்கிலேயப் பிரதிநிதிகளே தம்மை வெறுத்ததாகவும் விளக்கினார். சுயநல நோக்கத்தோடு தாம் வாழ்ந்திருந்தால் உயர்ந்த நிலையை அடைந்திருக்க முடியும் என்றுரைத்த டாக்டர் அம்பேத்கர், நாட்டு நலனுக்கு முதலிடம் தருவதைப்

போலவே இன்னுமோர் இலட்சியத்திற்கும் தாம் முத லிடம் தருவதையாரும் மறந்துவிட வேண்டாம் என்று முழங்கினார். அந்த இலட்சியம் தாம் பிறந்து வளர்ந்த சமுதாய மக்களின் நம்மைக்காக உழைப்பதே என்று கூறினார்.

டாக்டர் அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்க வேலைகள் கிடைப்பதற்கும் முயற்சி எடுத்துக் கொண்டார், குறிப்பாக 'மகர்' பிரிவு மக்கள் இராணுவத் தில் சேருவதற்கு விதித்திருந்த தடையை நீக்கும்படி பம்பாய் மாநில ஆளுநரைக் கண்டு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். அவரது வேண்டுகோளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. இதனால் இராணுவத்தில் மகர் பிரிவு மக்கள் ஏராளமாகச் சேர்வதற்கு வழி ஏற்பட்டது.

# பொன்னான வாய்ப்பு 14

1942 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாளன்று டாக்டர் அம்பேத்கரின் பொன் விழா ஆண்டு பிறந்தது. அவரது ஐம்பதாவது பிறந்த நாளையொட்டி சுதந்திரத் தொழி லாளர் கட்சியும் மற்றும் நாற்பத்தைந்து பொதுப்பணி நிறுவனங்களும் பம்பாயிலும் அதைச் சுற்றியுள்ள பகுதி களிலும் ஒன்பது நாள் விழாவிற்கு ஏற்பாடுகள் செய் திருந்தன. எங்கும் கொடிகளும், தோரணங்களும் கட்டி ஊர்வலம் எடுத்தனர், பாராட்டுக் கூட்டங்கள் நடந்தன. 19 ஆம் தேதியன்று பம்பாய் சௌபாத்தி கடற்கரையில் சிறப்பு மிக்கப் பொன்விழாப் பொதுக்கூட்டம் நடை பெற்றது. டாக்டர் எம். ஆர். ஜெயகர் தலைமை வகித்து டாக்டர் அம்பேத்கரைப் பாராட்டிப் பேசினார். டாக்டர் அம்பேத்கரின் தொண்டுகளை ஆங்கில, மராத்தியப் பத்திரிகைகள் பாராட்டி எழுதின.

1941 இல் வைசிராய் தமது நிர்வாகக் குழுவை விரிவு படுத்தினார். அதில் எட்டு உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், சீக்கியருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. இதைக் கண்டித்து இங்கிலாந்து மந்திரி சபையில் இந்திய மந்திரியாக இருந்த அமெரி துரைக்கு டாக்டர் அம்பேத்கர் தந்தியடித்தார். டாக்டர் அம்பேத்கரின் கோரிக்கையை ஆதரித்து வைசிராயின் நிர்வாகக் குழுவில் அவரைச் சேர்த்துக்கொள்ளும்படி இந்து மகாசபையின் தலைவர் வீரசவர்க்கரும் தந்தியடித்தார். இந்திய நாட்டில் காங்கிரஸ் கட்சியும் முஸ்லீம் லீக்கும் மட்டுமே இருப்பதாகக் கருதி வைசிராயின் குழுவில் தாழ்த்தப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ளாதது இந்த மக்களை அவமதிப்பதாகும் என்று பம்பாய் ஆளுநருக்கும் டாக்டர் அம்பேத்கர், எடுத்துச்சொன்னார். ஆனாலும் ஓராண்டுக் காலமாக இந்தக்குறை தீர்க்கப் படாமலே காலம் கடந்து வந்தது.

இதற்கிடையில் உலகப்போர் மிகக் கடுமையாகி வந்தது, ஜப்பான் சிங்கப்பூரைக் கைப்பற்றியது. அதன் கையோங்கி வந்தது. இதைக் கண்டு அஞ்சிய அமெரிக்கா, சீனா முதலிய நாடுகள் இந்தியச் சிக்கலைத் தீர்த்துப் பலத்தைத் தேடிக் கொள்ளுமாறு இங்கிலாந்தைக் கேட்டுக் கொண்டன. எனவே, இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து, அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காகச் சர். ஸ்ட்ராபோர்டு கிரிப்ஸ் தலைமையில் ஒரு குழு இந்தியாவுக்கு வந்தது. டாக்டர் அம்பேத்கரும், எம். சி. இராஜாவும் அந்தக் குழுவைச் சந்தித்துத் தம் நிலையை எடுத்துக் கூறினர். பயணத்தை முடித்துக் கொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பிய கிரிப்ஸ், தமது திட்டத்தை வெளியிட்டார். யுத்தம் முடிந்ததும் இந்திய சமஸ்தானங்களின் கூட்டுறவுடன் அரசியல் நிர்ணய சபையொன்று அமைக்கப் படுமென்றும் இந்திய அரசுடன் இணைந்திருப்பதா

வேண்டாமா என்பதை மாநிலங்கள் தீர்மானித்துக் கொள்ளலாமென்றும் அத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தை இந்திய நாட்டுக் கட்சிகள் அனைத்தும் எதிர்த்தன.

வலிமை மிக்கவர்களுக்கும், வன்முறையில் ஈடுபடுவோருக்கும் வளைந்து கொடுத்துச் சலுகைகளை வாரி வழங்க முன் வந்த ஆங்கில அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளைப் பெரிதாகக் கருதவில்லை என்று எண்ணிய டாக்டர் அம்பேத்கர், தொழிலாளர் தலைவராக இருப்பதைவிட்டு விட்டு மீண்டும் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகப் பாடுபடவும், இந்த மக்களின் இயக்கங்களை ஒரே அணியில் கொண்டு வரவும் பாடுபட்டார். இதற்காக 1942, ஜூலை மாதத்தில் அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் மாநாடு நாகப்பூரில கூடியது. நாடெங்கிலும் இருந்து நாற்பதாயிரம் மக்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இராவ் பகதூர் என். சிவராஜ் அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். இதுவரை டாக்டர் அம்பேத்கருடன் இணையாதிருந்த தலைவர் எம். சி. இராஜாவும், இராஜ் போஜும் ஒத்துழைக்க முன் வந்தனர்.

## கற்பி; போராடு; ஒன்றுபடுத்து

நாகப்பூர் மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர் பேச எழுந்தபோது உணர்ச்சிமயமாக இருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அந்த மக்களுக்கு அறிவுரை கூறி டாக்டர் அம்பேத்கர் நீண்ட உரையாற்றினார். அதுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தாமும் தமது தோழர்களும் நடத்தி வந்த போராட்டங்களின் விளைவாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும், விழிப்புணர்ச்சியையும் எடுத்துக்காட்டித் தம் பேச்சை முடிக்கும்போது, ''உங்களுக்கு இறுதியாக கூறும் அறிவுரை இதுவே: கற்பி, போராடு, ஒன்றுபடுத்து; தன்னம்பிக்கையோடு வாழுங்கள். நியாயமும் நேர்மையும் நம் பக்கம் இருக்கும்போது

நாம் வெற்றியே பெறுவோம். பணம், பதவிகளுக்கு நாம் போராடவில்லை. நமது உரிமைகளின் மீட்சிக்காக, மனிதர்களாக வாழ்வதற்காகவே நாம் போராடு கின்றோம். இந்துக்கள் பலர் என்னை எதிரியாக நினைக் கின்றார்கள். ஆனால், பிராமணர்களிலேயும் நல்ல நண்பர்கள் எனக்கிருக்கின்றார்கள். என் மக்களை நாய் களைவிடக் கேவலமாகக் கருதி அவர்களின் முன்னேற்றத் திற்குத் தடையாக நிற்கும்போது அதை எதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு நான் ஆளாகி இருக்கின்றேன், என் நிலை இதுவே'' என்று உரைத்தார்.

அதே மாநாட்டு மேடையில் நடந்த பெண்கள் மாநாட்டில் பேசும்போது தூய்மையும் ஒழுக்கமும் உள்ள வர்களாக வாழ்ந்து, பிள்ளைகளுக்குக் கல்வியறிவைத் தரும்படியும், தாழ்வு மனப்பான்மையை ஒழித்து, சிறந்த சாதனைகளைச் செய்வதற்காகவே பிறந்திருப்பதாக இலட்சிய ஆர்வத்தை அவர்களுக்கு ஊட்டுமாறும் அறிவுரை கூறினார். ''திருமணம் செய்து கொள்வதற்கு அவசரப்படாதீர்கள். குடும்பத்தை நடத்துவதற்குரிய வருவாயைத் தேடிக்கொண்டு, பிள்ளைகளுக்குப் பார மில்லாத வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். கணவனுக்கு மனைவி அடிமை என்ற நிலையை ஒழித்து, வாழ்க்கைத் துணைவியாக, சம உரிமையுள்ளவர்களாக வாழ வேண்டும். குழந்தைகளை அளவோடு பெற்று அவர் கள் சிறப்பாக வளர்வதற்கு உதவ வேண்டும். இந்த அறிவுரைகளை நீங்கள் பின்பற்றுவீர்களானால், மதிப்பை யும், மரியாதையையும் நீங்கள் பெற முடியும்'' என்று கூறி னார். சமுதாயத் தொண்டர்களின் மாநாட்டில் பேசும் போது அகிம்சை நெறியின் உயர்வை விளக்கியுரைத்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த மாநாட்டில் 'அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்' அமைக்கப் பட்டது.

## தொழிலாளர் அமைச்சர்

டாக்டர் அம்பேத்கர் நாகப்பூரில் இருந்தபோது, வைசிராயின் நிர்வாகக் குழு விரிவாக்கப்பட்டு டாக்டர் அம்பேத்கர், சர். சி. பி. இராமசாமி அய்யர், ஸ்ரீவத்ஸவா ஆகியோர் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இந்தப் பதவியோடு தொழிலாளர் இலாகா டாக்டர் அம்பேத்கரின் பொறுப்பில் விடப்பட்டது. இதற்கான உத்திரவை 1942, ஜூலை 20ஆந் தேதியன்று டாக்டர் அம்பேத்கர் நாகப்பூரில் இருந்தபோது தனியதிகாரியொருவர் கொண்டு வந்து கொடுத்தார். நாகப்பூரிலிருந்தே தந்தி மூலம் டாக்டர் அம்பேத்கர் தொழிலாளர் இலாகா உறுப்பினராகப் பொறுப்பேற்றார். அக்காலத்தில் இவரது உறுப்பினர் பதவி, ஓர் அமைச்சருக்குரிய சிறப்பினைப் பெற்றிருந்தது. இந்திய வரலாற்றிலேயே தாழ்த்தப்பட்டவர் ஒருவர் இந்த உயர்ந்த பதவியைப் பெற்றது அதுவே முதல் தடவையாகும். அந்தப் பதவியை ஏற்றுக் கொண்ட செயல் அவரது தன்னலத்தைக் காட்டுகின்றது என்று அன்று குறை சொல்லவும் சிலர் இருந்தனர். அதைக் கேட்டு வருந்திய டாக்டர் அம்பேத்கர், பதவி சுகத்திற்காகத் தாம் வாழவில்லையென்றும், மக்களின் குறைகளைத் தீர்க்கப் பதவி பயன்படவில்லை என்பதையறிந்தால் தயங்காமல் அதை விட்டு விட்டுத் தமது தொழிலுக்குத் திரும்பி விடுவதாகவும் அறிவித்தார். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தால் மட்டும் போதாது; ஆனால் அந்தச் சுதந்திரம் யார் கையில் இருக்கின்றது என்பதே முக்கியம் என்றும், இந்தியாவில் தொழிலாளர் அரசு ஏற்படுவதற்குப் பாடுபட வேண்டும் என்றும் பேசினார்.

ஆள்வதற்கென்றே சிலரும், ஆளப்படுவதற்கென்றே சிலரும் இருக்கும் அமைப்பை உடைத்தெறிவதற்குத் தமக்குக் கிடைத்த பதவி ஒரு பொன்னான வாய்ப்பாகப் பயன்படும் என்று அவர் கருதினார். அதற்கேற்றவாறு

அன்னியர் ஆதிக்கத்திலிருந்த அன்றைய ஆட்சியில் இயன்ற அளவில் நல்ல பணிகளைச் செய்தார். தொழிலாளர் நலம் பற்றி யோசிக்கப் பல கூட்டங்கள் நடந்தன. நாடெங்கும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் அமைப்பது பற்றி முதன் முறையாக ஆலோசனைக்கு வந்தது, கூலிகள், ஊதியங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆராயவும், தொழிலாளரின் வேலைப் பாதுகாப்பைப் பற்றியும் விடுமுறைகள் அளிப்பது பற்றியும், தொழிற்சாலைகளில் நல்லுறவும், அமைதியும் நிலவுவதற்குச் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றியும் பல கூட்டங்களில் எடுத்துரைத்துச் சட்டங்கள் பிறக்கப்பாடுபட்டார்.

டாக்டர் அம்பேத்கர் பதவிப் பொறுப்பில் இருந்த அக்காலத்தில் இந்திய நாட்டு வரலாற்றை மாற்றி யமைத்த ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றது. 1942, ஆகஸ்ட் மாதத்தில் பம்பாய் நகரில் கூடிய காங்கிரஸ் கட்சி மாநாட்டில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் தீர் மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான போராட்டமும் நாடெங்கும் துவங்கியது. 'ஆகஸ்ட் போராட்டம்' எனப் பெயர் பெற்ற அப்போராட்டத்தால் இந்திய நாடு அதிர்ந்து போயிற்று. இருப்புப் பாதைகள் பிடுங்கப் பட்டன. இரயில்கள் கவிழ்க்கப்பட்டன. தந்திக் கம்பங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன. நாடெங்கும் அரசாங்கம் அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காங்கிரஸ் கட்சியின் இந்தப் போராட்டம், போர்க் காலத்தில் இந்தியாவைக் குழப்பத்தில் ஆழ்த்தும் முயற்சி என்றும், அரசாங்கத்திற்கு எதிராக விடப்பட்ட சவால் என்றும் கருதிய வைசிராய், காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்து சிறைக்கு அனுப்ப உத்தரவிட்டார். காந்தி யடிகள் உட்பட தலைவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையிலேயே காந்தியடிகள் இருபத்தொரு நாள் உண்ணாவிரதம் இருந்தார். போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் போலீஸ்

அடக்குமுறையால் அடிபட்டனர்; பலர் மாண்டனர். நாட்டின் பொது வாழ்க்கை நிலைகுலைந்து போயிற்று.

டாக்டர் அம்பேத்கரின் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனமும், இந்து மகா சபையும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்றன. முஸ்லீம் லீக் இந்தப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை. அதோடு முஸ்லீம்களுக்குப் பாகிஸ்தானைப் பிரித்து அளிக்க வேண்டும் என்று முஸ்லீம்களின் தலைவர் ஜின்னா வலியுறுத்தினார். இதனாலும் காங்கிரஸ் கட்சியின் போராட்டத்தாலும் நாட்டின் அரசியல் நிலை நெருக்கடியான கட்டத்தை அடைந்தது.

சில நாட்களுக்குப் பின் காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார். அவரைச் சந்தித்த இராஜாஜி, இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரித்தளிப்பதற்குத் தம் திட்டத்தைப் பற்றி விவாதித்து, அதற்குக் காந்தியடிகளின் ஒப்புதலைப் பெற்றார். இந்தியாவிற்கு விரைவாக விடுதலை கிடைப்பதற்குப் பாகிஸ்தானைப் பிரித்தளிப்பதே சிறந்த வழி என்பதைப் பிறரும் ஒத்துக்கொள்ள வைத்தார். டாக்டர் அம்பேத்கர் இந்து-முஸ்லீம் பிரச்னைகளைத் தீர்ப்பதோடு தாழ்த்தப்பட்டவர்கள்—இந்துக்களுக்கிடையேயுள்ள பிரச்னைகளையும் தீர்க்க வேண்டும் என்று கோரினார். இப்பிரச்னை மதம்—சமூகம் பற்றியதென்றும் அதைப் பின்னர் தமக்குள் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் காந்தியடிகள் அமைதிபடுத்தினார்.

டாக்டர் அம்பேத்கர், இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின் நாடெங்கும் பயணம் செய்து, தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை அறிந்து வரப் புறப்பட்டார். சென்ற இடமெல்லாம் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கல்கத்தா, ஹைதராபாத் ஆகிய நகரங்களுக்குச் சென்றுவிட்டு, 1944இல் டாக்டர் அம்பேத்கர் சென்னைக்கு வந்தார். அங்கே அவருக்குப் பல சங்கங்கள்,

இயக்கங்களின் சார்பில் வரவேற்புகள் அளிக்கப்பட்டன. தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்கள் அளித்த வரவேற்பில் தாழ்த்தப்பட்டவர்களோடு உயர்சாதி இந்துக்களும் இணைந்திருந்ததைக் கண்டு மகிழ்ந்த டாக்டர் அம்பேத்கர்,வறுமையை ஒழிக்க அனைவரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டுமென்றும், தொழிலாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்வது அவசியம் என்றும் பேசினார். சென்னைப் பகுத்தறிவாளர் சங்கத்தின் சார்பில் நடந்த கூட்டத்தில் பேசியதோடு டாக்டர் அம்பேத்கர், பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்களையும் சந்தித்தார். சென்னை மாநில அரசியல் நிலைகளைப் பற்றி இருவரும் நெடுநேரம் பேசினர். பின்பு, ஆந்திராவிற்கும் பிற பகுதிகளுக்கும் சென்று தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளைப் பற்றியும், பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் தாம் நடத்தும் போராட்டத்தைப் பற்றியும் மாநாடுகளிலும் தமக்கு வரவேற்பளித்த கூட்டங்களிலும் விளக்கியுரைத்தார்.

நாட்டு மக்களுக்குத் தம் போராட்டத்தைப் பற்றித் தெளிவுபடுத்தியதோடு, இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த பல்வேறு குழுக்களிடமும் தம் கோரிக்கைகளை எடுத்துரைத்தார். *1946*, செப்டம்பர் மாதம் இங்கிலாந்திற்குச் சென்று ஆங்கிலேயர் இந்த நாட்டை விட்டுப் போன பின்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது பற்றி அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று கோரினார். இந்தியாவுக்கு விரைவில் சுதந்திரம் கிடைக்கலாம் என்பதை உணர்ந்ததாலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

*1942*ஆம் ஆண்டிற்குப் பின் நாட்டில் உருவாகி வந்த அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அப்போதிருந்த வைசிராய் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். இங்கிலாந்திற்குப் போய் அரசைக் கலந்து யோசித்துச் சிக்கலைத் தீர்க்கப் புதிய திட்டத்துடன் திரும்பி வந்தார். அதன்படி, சிறையிலிருந்த தலைவர்களும் தொண்டர்

களும் விடுதலையடைந்தனர். 1945ஆம் ஆண்டின் இறுதியில் சிம்லா நகரில் ஒரு மாநாடு கூடியது. இந்தியாவில் இருந்த அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் அதில் கலந்து கொண்டனர். டாக்டர் அம்பேத்கர், வைசிராய் நிர்வாகச் சபையில் உறுப்பினராக இருந்ததால் அதில் கலந்து கொள்ளவில்லை. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் சார்பில் தலைவர் என். சிவராஜ் கலந்து கொண்டார்.

இந்தச் சமயத்தில் உலக அரங்கில் போர் முடிந்தது. ஜப்பான் தோல்வியடைந்தது. இங்கிலாந்தும் அதை ஆதரித்த நாட்டினரும் வெற்றி பெற்றனர். இங்கிலாந்தில் பொது தேர்தல் நடந்து தொழிற் கட்சி ஆட்சிக்கு வந்தது. அட்லி பிரபு, பிரதமர் ஆனார். இந்தியாவில் வேவல் பிரபு வைசிராயாக இருந்து வந்தார். இருவரும் கலந்து யோசித்து இந்தியாவில் பொதுத் தேர்தல் நடத்துவதென முடிவெடுத்தனர். அத்தேர்தலில் வெற்றியுறுவோரைக் கொண்டு புதியதோர் அரசாங்கத்தை ஏற்படுத்துவதென்று அறிவிப்பும் வெளிவந்தது. இந்த அறிவிப்புக்குப் பின் இந்தியாவிலிருந்த அரசியல் கட்சிகள் தேர்தலுக்காகப் பலத்தைப் பெருக்கி வந்தன. முஸ்லீம் லீக், பாகிஸ்தான் வேண்டும் என்ற நோக்கத்தோடு தேர்தலில் போட்டியிட முன் வந்தது. காங்கிரஸ் கட்சியினர் ‘இந்தியாவுக்குச் சுதந்திரம்’ என்னும் முழக்கத்துடன் தேர்தலில் ஈடுபட்டனர். டாக்டர் அம்பேத்கரின் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனமும் தேர்தலில் கலந்து கொண்டது. பெரிய நகரங்களில் பல கூட்டங்களும் மாநாடுகளும் நடைபெற்றன. சம்மேளனத்திற்காகப் பலர் பல வகைகளிலும் உதவியளிக்க முன் வந்தனர்.

1946 இல் நடந்த தேர்தல் பல வகைகளிலும் குறிப்பிடத்தக்க சிறப்புடையது. அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் அரசியல் சட்டத்தை உருவாக்கும் அரசியல் சட்ட நிர்ணயச் சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்

தெடுத்து அனுப்பும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். நாட்டை ஆள்வதற்குரிய இலட்சியப் போக்கை உரு வாக்கிக் கொள்ள வாய்ப்பளித்த அந்தத் தேர்தலில் வெற்றி பெற அனைத்துக் கட்சிகளும் கடுமையாக உழைத்தன. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்கும் வாய்ப்பு நெருங்கி வந்ததால் மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு அந்தத் தேர்தலில் ஈடுபட்டனர். எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சாக இருந்தது; அதற்குப் பாடுபட்ட காங்கிரஸ் கட்சி வெற்றி பெற வேண்டுமென்று ஆர்வம் மேலோங்கி நின்றது. காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களாக நின்ற வர்கள் எங்கும் வெற்றி பெற்றனர். முஸ்லீம்கள் பெரும் பான்மையாக இருந்த இடங்களில் முஸ்லீம் லீக் வேட் பாளர்கள் வெற்றி பெற்றனர். வசதிக் குறைவு, சாதி இந்துக்களின் எதிர்ப்புணர்ச்சி, கால வெள்ளத்தை எதிர்த்து நிற்க வேண்டிய நிலை ஆகியவற்றால் டாக்டர் அம்பேத்கரும் அவரது கட்சியினரும் தோல்வியுற நேர்ந் தது.

தேர்தலுக்குப்பின் வைசிராயின் நிர்வாகச் சபை கலைக்கப்பட்டது; இடைக்கால அரசாங்கம் அமைக்கும் பணியில் வைசிராய் ஈடுபட்டார். டாக்டர் அம்பேத்கரின் வாழ்விலும், இந்திய நாட்டின் அரசியல் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்கதொரு காலப்பகுதி முடிவடைந்தது.

# விடுதலையுற்ற இந்தியாவில்... 15

நிலையற்ற அரசியல் போராட்டங்களுக்கிடையே டாக்டர் அம்பேத்கர் நெடுங்காலமாகக் கண்டு வந்த கன வொன்று நிறைவேறியது. சாதி அமைப்பும் தீண்டாமைக் கொடுமையும் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களின் அறியாமையை ஆதாரமாகக் கொண்டிருப்

பதைக் கண்ட அம்பேத்கர், இந்த மக்களின் கல்வியறிவைப் பெருக்க வேண்டுமெனப் பாடுபட்டு வந்தார். இதற்காக 1945 இல் மக்கள் கல்விக் கழகத்தை ஏற்படுத்தி அதன் சார்பில் கல்லூரிகள் பலவற்றை நடத்த வேண்டுமென்று விரும்பினார். அவரது இந்த விருப்பம் பேராசை என்றும் கல்லூரிகள் தொடங்குவதற்குப் பணவுதவியைப் பெற முடியாதென்றும் மக்களின் ஆதரவு கிடைக்காதென்றும், இவற்றை மீறிக் கல்லூரிகளும், விடுதிகளும் தோன்றினாலும் விரைவில் மூடுவிழாவை நடத்த வேண்டியிருக்குமென்றும் பலர் பலவிதமாகப் பயமுறுத்தினர். குறுமதியாளர்களின் இந்தப் பயமுறுத்தலுக்காக டாக்டர் அம்பேத்கர் அஞ்சிவிடவில்லை.

நல்ல மனம் கொண்டோர் டாக்டர் அம்பேத்கரின் முயற்சிக்கு ஆதரவளித்து நிதியுதவினர்; திறமையும் இலட்சிய வேட்கையும் நிறைந்த நல்லாசிரியர்கள் பலர் கல்வித் தொண்டாற்ற முன் வந்தனர். இவற்றைப் பயன்படுத்தி ஏழை, எளிய மக்களின் நலனுக்காக எல்லா வசதிகளும் நிரம்பிய கல்லூரியொன்றை 1946 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். அக்கல்லூரிக்குச் சித்தார்த்தா கல்லூரி என்று பெயரிட்டார். இக் கல்லூரியைத் தொடர்ந்து, மக்கள் கல்விக் கழகத்தின் சார்பில் பல கல்வி நிலையங்களும் மாணவர் விடுதிகளும் தோன்றின

1946 ஆம் ஆண்டு இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முடிவு கட்டும் ஆண்டாக அமைந்தது. இந்திய நாட்டு விடுதலைக்காகத் தொடங்கிய போராட்டங்கள் இறுதிக் கட்டத்தை அடைந்தன. இரண்டாம் உலகப் போரின் அனுபவமும் இந்திய மக்களின் துணிவும் தியாகமும் தனது ஆட்சியை மேலும் இங்குத் தொடர்ந்து நடத்த முடியாது என்பதை இங்கிலாந்திலிருந்த அரசாங்கத்திற்கு உணர்த்தின. எனவே, இந்தியாவுக்கு முழு விடுதலை அளிப்பதற்கு இங்கிலாந்து பிரதமர் அட்லி பிரபு ஒப்புக் கொண்டார். இதற்கென பேச்சுவார்த்தைகள் நடத்து

வதற்கு மூவர் குழுவொன்றை அனுப்பி வைத்தார். அவர்கள் 1946, மார்ச்சு 24-ந் தேதி புதுடெல்லி வந்தடைந்து, நமது நாட்டின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்கள்.

தாழ்த்தப்பட்டோரின் சார்பில் டாக்டர் அம்பேத்கர், அந்தத் தூதுக்குழுவினரைச் சந்தித்தார். இந்த நாட்டு விடுதலைக்குத் தாங்கள் தடையாக இருக்கவில்லை என்பதை விளக்கியுரைத்து, அவர்களிடம் கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பத்தையும் அளித்தார். 1. தாழ்த்தப் பட்ட மக்கள் தேர்தல்களில் தனித்தொகுதி மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப அரசிய லமைப்பில் வழி வகுக்க வேண்டும். 2. மத்திய, மாநிலச் சட்டமன்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போது மான பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். 3. மத்திய மாநில அரசாங்க வேலைகளில் இட ஒதுக்கீட்டின் மூலம் போதிய அளவு பிரதிநிதித்துவம் தரவேண்டும் 4. கல்விச் செலவுக்காக ஆண்டுதோறும் பணம் ஒதுக்கித் தர வேண்டும் என்பன அவற்றில் முக்கியக் கோரிக்கைகளாக இருந்தன. இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றும் உத்திர வாதம் புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற வேண்டும் என்றும் கோரினார்,

டாக்டர் அம்பேத்கர், சர்தார் வல்லபாய் படேலுக்கு எழுதியிருந்த கடிதமொன்றில, தனிப்பட்ட மனிதர்கள் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் அவர்களைவிட நாடு பெரியது என்றும், காங்கிரஸ்காரராக இல்லாம லேயே சிறந்த தேசப்பற்றுள்ளவராகவும் எவரும் இருக்க முடியும் என்றும் தேசப்பற்றில் காங்கிரஸ் தலைவர்களை விடத் தாம் பின் தங்கியவரல்லர் என்றும் குறிப்பிட் டிருந்தார். இந்திய நாட்டில் பிறந்த மக்கள் அனைவ ருக்கும் சமத்துவமும் சமநீதியும், மனித உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்திப் பேசியதனா லேயே தமது நாட்டுப் பற்றைச் சந்தேகித்தவர்களை

நினைத்து வருந்தியவர் டாக்டர் அம்பேத்கர். எனினும், விடுதலையடைந்த பின்பு, இந்திய நாடு சாதிப் பிரிவு களும், தீண்டாமைக் கொடுமையும், சமூக அநீதிகளும் நிறைந்த பழைய நிலைக்குப் போய்விடக் கூடாது என்று கருதினார். அதற்காகவே ஊமையராய்க் கிடந்த மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆங்கில ஆட்சி முடிவடைய விருந்த இறுதி நாளில் மிகத் துணிவோடு முன் நின்று நடத்தினார். தலைவர் என். சிவராஜ் அவர்களுடன் இலண்டனுக்குச் சென்று பிரிட்டிஷ் பிரதமரையும் பிறரை யும் கண்டு பேசினார். விடுதலையுற்ற இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்டமன்றங்களிலும், நிர்வாகத் துறைகளிலும் உரிய பிரதிநிதித்துவம் வேண்டு மென்பதற்காகவே தாம் போராடி வருவதை எடுத் துரைத்தார்.

இந்தியாவுக்கு வந்திருந்த மூவர் தூதுக்குழு, இங்கி லாந்திற்குச் சென்று தங்கள் அறிவிப்பை வெளியிட்டனர். இந்தியாவுக்கு அரசியல் நிர்ணய சபையை அமைக்கலா மென்றும், அதற்கு முன் இடைக்கால மந்திரி சபை அமைப்பதென்றும் அறிவித்தனர். இதற்கான சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அரசியல் நிர்ணய சபைக்கு உறுப்பினர்களை மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பினர். மாநிலச் சட்டமன்றங்களில் காங்கிரஸ் உறுப்பினர்களே பெரும்பான்மையாக இருந்ததால், அவர்கள் சார்பில் காங்கிரஸ் உறுப்பினர்களே பெருமளவில் அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றனர். நாட்டு விடுதலைக் காகப் போராடி, சிறைக்குச் சென்று தியாகத் தழும் பேறிய அந்தத் தலைவர்களில் பலர் அரசியல் சட்ட நுணுக்கங்களை அறியும் வாய்ப்பினைப் பெறாதவர் களாக இருந்தனர். இந்தக் குறையை நீக்குவதற்கு அந்தச் சமயத்தில் இந்த நாட்டிற்கு டாக்டர் அம்பேத்கர் பெரிதும் தேவைப்பட்டார். வங்காளச் சட்டமன்றத்து

உறுப்பினர்கள் அவரைத் தேர்ந்தெடுத்து அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராக்கினர். கிழக்கு வங்காளம் பிரிக்கப்பட்டுப் பாகிஸ்தானுக்கு ஒரு பகுதி சென்றபோது அந்த உறுப்பினர் பதவியை இழந்தார். பம்பாய் சட்ட மேலவை உறுபபினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மீண்டும் உறுப்பினரானார்.

பிரிட்டிஷ் பாராளுமன்றச் சட்டத்தின்படி இடைக்கால மந்திரி சபை அமைக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஜெகஜீவன்ராம் அதில் மந்திரியாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார். சர்தார் படேல், இராஜாஜி, சரத் சந்திரபோசு, அபுல்கலாம் ஆசாத் ஆகியோரடங்கிய அந்த மந்திரி சபையுடன் பண்டித நேரு பிரதமரானார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரே மந்திரி பதவி தரப்பட்டதும், தம்மை அகில இந்தியத் தலைவராகக் கருத மறுத்ததும் டாக்டர் அம்பேத்கருக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. இந்த அநீதியை எடுத்துக்காட்ட நடத்திய போராட்டம் பயன் தரவில்லை. இலண்டனுக்குச் சென்று பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தம் கோரிக்கைகளை எடுத்துரைத்தார். அன்றைய அரசியல் ஆரவாரத்தில் டாக்டர் அம்பேத்கரின் மெல்லிய குரலோசைக்குச் செவிமடுப்பார் எவருமில்லாமற் போனார்கள். மாறியுள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக்கொண்டு ஒத்துப் போகும்படியும், அரசியல் நிர்ணய சபையில் தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் படியும் அவருக்கு அறிவுரை கூறினார்கள். இந்த அனுபவம் அவருக்கு மனச் சோர்வை அளித்தது.

இதற்கிடையில் முஸ்லீம் லீக் இடைக்கால மந்திரி சபையில் சேர்வதற்குச் சம்மதித்தது. அதையொட்டி மந்திரி சபை விரிவாக்கப்பட்டு, தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் ஜோகேந்திரநாத் மண்டல் மேலுமொரு மந்திரியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

1947ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் தேதியன்று இந்திய நாட்டு அரசியல் நிர்ணய சபை கூடியது. டாக்டர் இராஜேந்திர பிரசாத் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பண்டித நேரு, எதிர்காலக் கொள்கை விளக்கம் பற்றி ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து அரசியல் நிர்ணய சபையின் பணிகளைத் துவக்கி வைத்தார்.

இந்திய நாட்டிற்கு விடுதலை கிடைக்கப் போகும் வாய்ப்பை நினைத்தும், நெடுங்காலப் போராட்டத்திற்கொரு முடிவு ஏற்படுவதைக் கருதியும் உணர்ச்சிப் பிழம்பாக இருந்த பண்டித நேரு, பிரதமர் என்ற முறையில் அன்று ஆற்றிய உரை அனைவரையும் மெய்மறக்கச் செய்தது. இந்திய நாடு சுதந்திரக் குடியரசு நாடாகப் போகும் இலட்சியப் போக்கினைத் தம் உரையில் அவர் வெளிப்படுத்தினார்.

இந்திய நாட்டின் பெருந்தலைவர்கள் நிறைந்திருந்த அந்தக் கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கரும் கலந்து கொண்டார். அரசியல் உரிமைக்காக நாடே திரண்டெழுந்து போராடிக் கொண்டிருந்த நாளில் சமூகச் சமத்துவமும் இந்த நாட்டில் ஏற்பட்டால்தான் சம நிலையை எய்தும் என்னும் நோக்கத்தோடு இடைவிடாது வலியுறுத்தி வந்த டாக்டர் அம்பேத்கரின் உருவத்தை அன்றுதான் பலர் நேரில் கண்டார்கள். பண்டித நேரு கொண்டு வந்த தீர்மானத்தைப் பற்றித் தம் கருத்தைக் கூறுமாறு அம்பேத்கரை, சபைத் தலைவர் கேட்டுக் கொண்டார். ஆழமான கருத்துக்கள் பொதிந்து, அன்பும் நாட்டுப் பற்றும் நிறைந்திருந்த அவரது இனிய சொன்மாரியை முதன் முதலாக அன்று தம் காதாரக் கேட்ட உறுப்பினர்கள் அனைவரும் அடிக்கடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதென்று பிரிட்டிஷ் பாராளுமன்றம் முடிவு செய்ததை யொட்டிப் பண்டித

ஜவகர்லால் நேரு தலைமையில் அமையவிருந்த அமைச்சரவையின் பட்டியல் 1947 ஆகஸ்ட் 3ஆம் தேதி வெளியாயிற்று. அதில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் சம்மதத்துடன் அவரது பெயரும் இடம் பெற்றிருந்தது.

1947 ஆகஸ்ட் 15 அன்று பாரத நாடு விடுதலையடைந்தது. எண்ணற்ற நல்லோரின் இலட்சியக் கனவு அன்று நிறைவேறியது. டாக்டர் அம்பேத்கர் விடுதலையுற்ற பாரதத்தின் சட்ட அமைச்சரானார். புதிய சூழ்நிலையில் தமது போராட்ட உணர்ச்சிகளை மறந்து நாட்டின் நலத்திற்காக மற்றப் பெருந்தலைவர்களுடன் இணைந்து நின்று உழைப்பதற்கு முன்வந்தார். சட்ட அமைச்சராகவிருந்த டாக்டர் அம்பேத்கர், அரசியல் சட்டத்தை வரைவதற்கு ஏற்படுத்திய குழுவின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு குலத்திற்கு ஒரு நீதி என்று அமைந்த சமநிலை இழந்த சட்டங்களால் துன்புற்று வருந்திய மக்களிடையே பிறந்து அறிவின் சிகரமாக உயர்ந்து நின்ற டாக்டர் அம்பேத்கருக்குக் கிடைத்த இந்த வாய்ப்பைப் பலரும் போற்றிப் புகழ்ந்தனர். அரசியல் சட்ட வரைவுக் குழுவில் புகழ் பெற்ற அறிஞர்கள் பலர் உறுப்பினர்களாக இருந்தார்கள். என்றாலும் டாக்டர் அம்பேத்கர் முழு ஆர்வத்துடன் தம் பணியை மேற்கொண்டு உழைத்தார். மதத்தால், மொழியால், பழக்க வழக்கங்களால் பல வண்ணக் குவியலாகக் கிடந்த பாரத நாட்டிற்குப் பழைமையில் வேர்க்கொண்டு புதுமையில் மலர்ந்து நிற்கும் அரசியல் சட்டத்தை உருவாக்கி 1948, பிப்ரவரி மாத இறுதியில் நாட்டுக்கு அளித்தார். மக்கள் கருத்தையும், அரசியல் சட்ட நிர்ணய சபையின் வாதங்களையும் கேட்டு, அரசியல் சட்டத்திற்கு மெருகேற்றி 1949, நவம்பர் 26-ந் தேதி நிறைவேற்றினார். அதன் அடிப்படையில் பாரத நாடு 1950 இல் குடியரசு நாடாகியது. அரசியல் சட்டத்தை வரைந்தளித்த டாக்டர் அம்பேத்கரைப் பாராட்டிப் பேசியவர்கள் சமநீதிக்கு வழி வகுத்த 'தற்கால மனு' என்று போற்றிப் புகழ்ந்தார்கள்.

இந்தப் புகழுரையைக் கேட்டு டாக்டர் அம்பேத்கர் தமது இலட்சியத்தை மறந்துவிடவில்லை. வெறும் சட்டங்களால் மட்டும் சமத்துவச் சமுதாயம் உருவாகிவிட முடியாது என்பதை எல்லோருக்கும் நினைவுறுத்தினார். சட்டத்தின் துணையால் அரசியலில் சமத்துவமும், நடைமுறை வாழ்வில் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் நிலவுவதை விரைவில் நீக்காவிட்டால் மக்களாட்சி அமைப்பையே தகர்த்துவிடக் கூடிய நிலை ஏற்படும் என்பதை எச்சரிக்கையாக விடுத்தார்.

அரசியல் சட்டத்தை வகுத்தளித்த டாக்டர் அம்பேத்கர், ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் மதம் என்ற பெயர் கொண்டு ஒழுங்குமுறையில்லாமல் பரவியிருந்த இந்துக்களின் பழக்க வழக்கங்களையும், சாஸ்திர ஸ்மிருதிகளின் விதிமுறைகளையும் துருவி ஆய்ந்து இந்து சட்ட மசோதாவை உருவாக்கியளித்தார். இந்துப் பெண்களுக்கு ஆண்களோடு சரிநிகர் சமத்துவத்தை அளித்து, சிதறிக் கிடந்த இந்து மதத்திற்குக் கட்டுக்கோப்பான உருவத்தைத் தந்த இந்து சட்ட மசோதாவிற்குப் பிற்போக்காளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தாாகள். இந்த மசோதாவிற்குப் பிரதமர் பண்டித நேரு ஆதரவு அளித்துங்கூட, பழமைவாதிகளும், பிற்போக்காளர்களும் தெரிவித்த எதிர்ப்பே மேலோங்கி நின்று வெற்றி பெற்றது.

டாக்டர் அம்பேத்கருக்கு இந்தத் தோல்வி மிகுந்த வருத்தத்தை அளித்தது. அவரது உழைப்பு வீணாகி ஆர்வம் குறைந்து உடல் நலம் கெட்டது. உடல்நலத்திற்கு மருத்துவம் பார்த்துக் கொள்ள பம்பாய்க்கு வந்து மருத்துவமனையொன்றில் சேர்ந்தார். அங்கே அவருக்கு டாக்டர் சாரதா என்னும் பெண்மணி உற்ற துணையாக அன்பொழுகப் பழகி மருத்துவம் பார்த்தார். பொது வாழ்வில் வருத்தங்கள், ஏமாற்றங்கள், தனி வாழ்வில் எவரும் துணையில்லாத நிலை ஆகியவற்றால் சோர்ந்து போயிருந்த டாக்டர் அம்பேத்கருக்கு டாக்டர் சாரதாவின்

துணை ஆறுதல் அளித்தது. உடல் நலம் தேறியது. இருவரும் ஒருவரையொருவர் விரும்பினார். அவர்களின் கலப்பு மணம், டெல்லியில் சட்டப்படி நடந்தேறியது.

இந்து சட்ட மசோதாவின் தோல்வியைத் தொடர்ந்து அமைச்சரவையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் டாக்டர் அம்பேத்கர், 1951 இல் தமது அமைச்சர் பதவியைத் துறந்தார; எதிர்கட்சித் தலைவரானார். டாக்டர் அம்பேத்கர் உருவாக்கியளித்த அரசியல் சட்டத்தின்படி 1952 இல் நாடெங்கும் பொதுத் தேர்தல் நடைபெற்றது. பம்பாயிலிருந்து போட்டியிட்ட டாக்டர் அம்பேத்கருக்கு அந்தத் தேர்தல் தோல்வியை அளித்தது; எனினும் பின்னர் ராஜ்ய சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1954 இல் நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் தோல்வியடைந்தார். இந்தத் தோல்விகளால் மனம் தளராத டாக்டர் அம்பேத்கர், மக்கள் நலனுக்காக உழைப்பதில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்ச்சிகளுக்கிடையில் டாக்டர் அம்பேத்கர் கொலம்பியா பல்கலைக் கழகம் அளித்த ‘டாக்டர்’ பட்டத்தைப் பெற அமெரிக்காவுக்குப் போய் வந்தார். இலங்கை, பர்மா முதலிய நாடுகளில் நடந்த புத்த ஜெயந்தி விழாவிலும் மாநாடுகளிலும் கலந்து கொண்டார். ஹைதராபாத், உஸ்மானியா பல்கலைக் கழகம் ‘இலக்கியப் பேரறிஞர்’ என்னும் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தது. பம்பாயில் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் அவரது மணிவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அவ்விழாவின்போது ஒரு இலட்சத்துப் பதினெட்டாயிரம் ரூபாய் அடங்கிய பணமுடிப்பு அவருக்கு அளிக்கப்பட்டது, அந்தப் பணத்தை நூல் நிலையமும், மண்டபமும் கட்டுவதற்கு அளித்தார் டாக்டர் அம்பேத்கர்.

# முதலும் முடிவும் 16

வாழ்நாள் முழுதும் போராட்டங்கள், எதிர்ப்புகள் என்று வாழ்ந்துவிட்ட டாக்டர் அம்பேத்கருக்குப் புத்தரின் போதனைகளே ஆரம்ப நாள் முதலாக ஆறுதல் அளித்து வந்தன. பதவிகளிலும் அவற்றோடு தொடர்புடைய சுகங்களிலும் பற்று வைக்காத மனநிலையையும், பாவம், புண்ணியம் என்பதற்காக அல்லாமல் மக்களுக்கு உழைப்பது தம் கடமை என்ற உணர்வையும் அவரிடம் ஏற்படுத்தியிருந்தன. சடங்குகளின் வழியில் அல்லாமல் கொள்கையின் அடிப்படையில் அமைந்த புத்தமதம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. மனிதரிடையே வேற்றுமைகளைப் பாராட்டாமல் உலக நிகழ்ச்சிகளைக் காரணக் காரியத் தொடர்புடன் நோக்குவதற்கு வழி வகுத்த ஒரே மதமும் அதுவே என்றும் கருதினார். வாழ்க்கைக்கு மதம் அவசியமே என்று கருதியவர் டாக்டர் அம்பேத்கர். ஆனால் பகுத்தறிவுக் கொள்கைகளைக் கொண்டிருந்த புத்த மார்க்கத்தையே அவரது மனம் விரும்பியது.

இந்த விருப்பத்தின் விளைவாகவே, சட்ட அமைச்சராக இருந்த போது அசோக சக்கரம் பாரத அரசு முத்திரையாக இடம் பெற வழிவகுத்தார்; புத்தர் பிறந்த நாளுக்கு விடுமுறையளிக்க ஏற்பாடு செய்தார். தமது முயற்சியால் உருவான கல்லூரிக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் ‘சித்தார்த்தா’ என்னும் பெயரை வைத்தார். முடிவாக 1956 இல் புத்தமதத்தில் சேரப் போவதாகவும் அறிவித்தார். அநீதிகளும் ஏற்றத் தாழ்வுகளும் மலிந்திருந்த இந்து மதத்திலிருந்து நீங்கி வேற்று மதத்தில் சேர்ந்து பழிவாங்குவதை விரும்பாத டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாட்டில் மறைந்துபோன புத்த தர்மத்திற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கத் தீர்மானித்தார்.

மதம் மாறுவது பற்றிய அவருடைய நீண்ட நாள் யோசனைக்குப் பின் வெளிவந்த இந்த அறிவிப்பை மகாபோதி சங்கத்தினர் போற்றி வரவேற்றார்கள்.

தமது பதினாறாவது வயதில் கிருஷ்ணாஜி கேலூஸ்கர் அளித்த கௌதமபுத்தரின் வரலாற்றைப் படித்து அதில் மனம் ஈடுபாடு கொண்ட டாக்டர் அம்பேத்கர், தம் வாழ்நாள் முழுதும் புத்தரின் நெறி களையே சிந்தித்துப் பல அருமையான நூல்களை எழுதினார். இளமை முதல் இறுதிநாள் வரை இந்து மதத் தின் தீண்டாமைப் பழக்கத்தால் கூனிக் குறுகிப் போயி ருந்த தம்மையொத்த மக்களுக்குப் புத்த மதத்தைத் தழுவுவதன் மூலம் சமுதாய விடுதலை கிடக்கும் என்று கருதினார். இந்தச் சிந்தனையின் விளைவாக 1956ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம் நாளன்று நாகப்பூரில் நடந்த நிகழ்ச்சியில் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுடன் தாமும் தம் மனைவியும் வெள்ளை உடை உடுத்தியவர் களாகப் புத்த தர்மத்தின்,

**புத்தம் சரணம் கச்சாமி**
**தர்மம் சரணம் கச்சாமி**
**சங்கம் சரணம் கச்சாமி**

என்னும் திரிசரணங்களை ஓதிப் பௌத்தர்களாயினர். ''இந்துவாகப் பிறந்துவிட்ட நான், இந்துவாக இறக்க மாட்டேன்'' என்று எடுத்துக் கொண்ட முடிவினை டாக்டர் அம்பேத்கர் அன்று நிறைவேற்றிக் காட்டினார். சமீப காலத்தில் பாரத நாட்டில் நடந்த மிகப் பெரும் மதப்புரட்சி என்று அன்றைய நிகழ்ச்சியைப் பலர் பாராட்டினார்கள். நாடெங்கும் அவருக்குப் பாராட்டும் வரவேற்பும் அளிக்கப்பட்டது. நேபாளத்தில் நடந்த உலக பௌத்தர்களின் நான்காவது மாநாட்டில் கலந்து கொண்டு, தாம் பௌத்தரான ஒரு மாதத்திற்குள் ஐந்து இலட்சம் மக்கள் பௌத்தர்களாக மாறிவிட்ட புரட்சியை வெளியிட்டார். அந்த மாநாட்டில் 'புத்தரும் காரல்

மார்க்சும்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார். நேபாள நாட்டிலிருந்து திரும்பிய வழியில் பல இடங்களில் சொற்பொழிவாற்றினார்.

டாக்டர் அம்பேத்கர் மேற்கொண்ட இந்தப் பயணங்களால் அவரது உடல் நிலை சீர் கெட்டது. ஊன்று கோலுடன் தம் பயணத்தைத் தொடர்ந்தார். உண்ணவும், மூச்சுவிடவும் முடியாமல் துன்புற்றார். என்றாலும் அவரது அறிவுப் பசி தணியவில்லை. தமது நூலகத்திலேயே இரவும் பகலுமாக அமர்ந்து தாமே புத்தகங்களைத் தேடி எடுத்து 'புத்தரும் அவரது போதனைகளும்', 'புத்தரும் காரல் மார்க்சும்', 'இந்தியாவில் நடந்த புரட்சிகளும் எதிர்ப் புரட்சிகளும்' என்னும் நூல்களை எழுதி முடித்தார்.

சமூக நீதிக்காக அறிவையே ஆயுதமாகக் கொண்டு போராடி வந்த டாக்டர் அம்பேத்கரின் உடல் நிலை 1956 டிசம்பர் 5 ஆம் நாள் மிகவும் கெட்டது. பௌத்தத் துறவிகள் அவருடன் அமர்ந்து திரி சரணங்களைக் காதில் முணு முணுத்தனர். சிறிது உண்டபின், புத்தகங்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு படுக்கை அறைக்குச் சென்று படிக்க ஆரம்பித்து விட்டார். பாரத நாட்டு ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றித் தோழர் எஸ். எம். ஜோஷிக்கும், பர்மா அரசாங்கத்திற்கும் கடிதங்கள் எழுதி முடித்தார். அவர் எப்போது தூங்கினார் என்பதை அறிவதற்கு அருகில் ஆளில்லாமல் போனார்.

பொழுது புலர்ந்தது. இந்த நாட்டின் ஐந்தில் ஒரு பகுதி மக்களின் வாழ்வில், வாழ்க்கைத் துயரம் விடிவதற்குப் பிறந்தவர் மீண்டும் கண் மலராமல் மீளாத் துயில் கொண்டார். ஓய்வில்லாமல் பிறர்க்கென உழைத்தவர் ஓய்ந்து கிடந்தார்.

டாக்டர் அம்பேத்கரின் மறைவு நாடெங்கும் பரவியது; அவரது மறைவினால் அழுதவர்கள் கண்ணீரைத்தான் அவருக்குக் காணிக்கையாக்க முடிந்தது. உழைப்பினால் அவர் உயர்ந்த போதும், உயர்ந்து நின்ற நாளில் தாழ்ந்து கிடந்தவர்க்கு உழைத்த போதும் பாராட்டும், புகழ் மாலையும் பெற்று வந்த டாக்டர் அம்பேத்கருக்கு ஆட்சியாளர்களும், அறிஞர்களும் மீண்டும் அனாதைகளாகி விட்ட மக்களும் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

டெல்லியிலிருந்து பம்பாய்க்குக் கொண்டு வரப்பட்ட அவரது சடலத்திற்கு அவரது அருமை மகன் யஸ்வந்தராவ் அம்பேத்கர் இறுதிச் சடங்குகளைச் செய்தார். மயானத்தில் கூடியிருந்த பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கண்ணீரால் நனைந்தனர். அன்று மயானத்திலேயே ஒரு இலட்சம் மக்கள் புத்த நெறியைத் தழுவினார்கள்.

**புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
**இரந்துகோள் தக்கடைத்து** *(திருக்குறள் : 780)*

பின்னிணைப்பு : I

## டாக்டர் அம்பேத்கரின் 'மக்கள் கல்விக் கழகம்' நடத்திவரும் கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும்.

**கல்லூரிகள் :**

1. சித்தார்த்தா கலை, விஞ்ஞானக் கல்லூரி, பம்பாய். 1946
2. சித்தார்த்தா வணிகவியல் பொருளாதாரக் கல்லூரி, பம்பாய். 1953
3. மிலிந்த் விஞ்ஞானக் கல்லூரி, ஔரங்காபாத். 1950
4. சித்தார்த்தா சட்டக் கல்லூரி, பம்பாய். 1956
5. Dr. அம்பேத்கர் வணிகவியல் கல்லூரி, ஔரங்காபாத். 1960
6. Dr. பாபாசாகெப் கலை, விஞ்ஞான, வணிகவியல் கல்லூரி, மகத் மாவட்டம், கொலாபா. 1961
7. மிலிந்த் கலைக் கல்லூரி, ஔரங்காபாத். 1962
8. Dr. அம்பேத்கர் சட்டக் கல்லூரி, ஔரங்காபாத். 1968
9. வாடலாவில் ரூ. 17,50,000 அளவில் கல்லூரி கட்டப்பட்டு வருகிறது.

**டிப்ளோமா நிறுவனங்கள் :**

10. சித்தார்த்தா வணிகவியல் நிறுவனம், பம்பாய். 1965
11. சித்தார்த்தா மாஸ்கம்யுனிகேஷன் மீடியா நிறுவனம், பம்பாய். 1965
12. சித்தார்த்தா இண்டஸ்டரீஸ் அண்ட் அட்மினிஸ்டிரேஷன் நிறுவனம். 1967

**உயர்நிலைப் பள்ளிகள்:**

13. சித்தார்த்தா இரவு உயர்நிலைப் பள்ளி, பம்பாய். 1947
14. மிலிந்த் மல்டிபர்ப்பஸ் உயர்நிலைப் பள்ளி, ஔரங்காபாத். 1965

15. மாட்டோசரி ராமாபாய் அம்பேத்கர் உயர்நிலைப் பள்ளி. 1965

**பிற்பட்ட வகுப்பினர் விடுதிகள்:**

16. ஸ்ரீ காட்கெ மகராஜ் வசத்தி கிருகா 1949
17. மாட்டோசரி ராமாபாய் அம்பேத்கர் வித்யார்த்தி ஆஸ்ரமம், தபோலி. 1962

**சென்டர்கள்:**

18. புத்திஸ்ட்ஸ் சென்டர், ஔரங்காபாத். 1964
19. Dr. பாபா சாகெப் அம்பேத்கர் மெமோரியல் ரிசர்ச் சென்டர், ராஜகிருதா, தாதர். 1967

**பிற்பட்ட வகுப்பினருக்காக மக்கள் கல்விக் கழகம் உதவி வரும் மாணவர் விடுதிகள்:**

20. Dr. அம்பேத்கர் வித்தியார்த்தி ஆஸ்ரமம், மன்மாட், நாசிக்.
21. சிக்சன் பிரசாரக் அம்பேத்கர் வித்யார்த்தி ஆஸ்ரமம், நந்தலூர், துலியா.
22. தீனபந்து அம்பேத்கர் வித்யார்த்தி சாலிஸ்கான், ஜால்கான்.
23. வித்ய விகாஸ் போர்டிங், டிபானி, பெல்காம், மைசூர்.
24. சுயாஜிராவ் வித்யார்த்தி பவன், படான், குஜராத்.
25. சித்தார்த்தா சத்ராலய, தோல்கா, குஜராத்.
26. பிற்பட்டோர் வகுப்பினர் விடுதி, பூனா.
27. சுபதார் சவகார் விதயார்த்தி ஆஸ்ரமம், மகத், கொலபா.
28. கன்யா சத்ராலய, சாலிஸ்கான், ஜால்கான்.

மற்றும் பல திறந்தவெளி அரங்குகள்
நர்சரி பள்ளிகள், பிரைமரி பள்ளிகள்,
விளையாட்டு அரங்குகள்.

—தகவல் : 'அம்பேத்கரிஸ்ட்ஸ்', மார்ச்சு, 1980

# இந்நூல் பற்றி

சில தலைவர்கள் வரலாற்றில் இடம் பெறு கிறார்கள். சிலர் வரலாற்றை உருவாக்குகிறார்கள். ஆனால் அண்ணல் அம்பேத்கர் பாரதத்தின் வரலாறா கவே மலர்ந்து விட்ட மாபெரும் தலைவர். பேராசிரியராக, வழக்கறிஞராக அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக, சட்ட அமைச்சராக அவர் பாரதத்திற்கு ஆற்றிய தொண்டுகள் அளவற்றவை. புதிய பாரதச் சிற்பிகளுள் முதன்மையான அவர் தாழ்த்தப்பட்ட மக்கள் நலத்துக்காக வாழ்நாள் முழுவதும் போராடி வந்தவர்.

பேராசிரியர் சா. பெருமாள் நாடறிந்த தமிழ் அறிஞர். சொல்லாலும் செயலாலும் சிந்தனையாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே உழைத்து வருபவர். அவர் மாமனிதர் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை எளிய இனிய தமிழிலே எழுதி வழங்கி யுள்ளார். சுருக்கமான ஆனால் முழுமையான இந்த நூல் அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டிய அறிவுச் செல்வம்.

பேராசிரியர் செ. இராதாகிருஷ்ணன்

Wrapper Printed at Eskay Art Printers, Madras-5.
Phone: 844727